ஸங்கீதரத்நாகரம்

1952



आङ्गिकं भुवनं यस्य वाचिकं सर्ववाङ्मयम् ।
आहार्यं चन्द्रतारादि तं नुमः सात्त्विकं शिवम् ॥

ஸங்கீதரத்நாகரம்

ஸ்ரீ நி:சங்கசார்ங்கதேவர் இயற்றியது

"இசைமணிக்கடல்"

ஆக்கியவர்

பண்டித வே. ராமசந்த்ரசர்மா அவர்கள்

கலாக்ஷேத்ரம்

அடையாறு சென்னை

௧௯௫௨

1952

முகவுரை

இசை நூல்கள் பல; ஸ்ரீபரதமுனிவரது நாட்டிய நூலுக்கு அடுத்தபடியாக அறிஞரால் மதிக்கப்படுஞ் சிறப்பு வாய்ந்தது ஸ்ரீசார்ங்கதேவர் அருளிய ஸங்கீத ரத்னாகரம் ஆகும். இதுவரை இது, ஆக்கிய மூல மொழியாய வடமொழியிலே தான் உள்ளது.

இஃதை ௧௯௪௩ வது ஆண்டு அடையாறு நூல் நிலயப் பிரசுரத் தொகுதி ௩௰ வது எண்ணாக, காலஞ் சென்ற பேராசிரியர் பண்டித ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரமண்ய சாஸ்த்ரியார் அவர்கள், ஸ்ரீகல்லிநாதருடைய 'கலாநிதி' என்ற உரையினையும், ஸ்ரீஸிம்ஹபூபாலருடைய 'ஸுதாகரம்' என்ற உரையினையும் சேர்த்துப் புதியதோர் பதிப்பாக வெளியிட்டுள்ளார். இவ்வெளியீடுத் துணைகொண்டு பேராசிரியர் ஸ்ரீகுன்ஹன் ராஜா அவர்கள் ௧௯௪௫ வது ஆண்டு சீரிய ஆங்கில மொழியிலே இந்நூலை மொழிமாற்றம் செய்தார்.

இவ்விசை நூல் முதற்றொகுதி உரையாசிரியர் இருவருள் ஸ்ரீகல்லிநாதரின் உரையை விசேஷமாகவும், விளக்கமாகவும் கொண்டுள்ளது. ஸ்வரஸங்கேதங்களுக்கு ஸங்கீதராஜம் போன்ற இசை நூல்களை நன்கு ஒப்புநோக்கப்பட்டே மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்தொகுதியின் முடிவிலே காணப்படும் ஜாதிகளை நன்கு விளக்கும் தாளம், விநியோகம், இராகம் முதலியன அடுத்த வியலிலும் தொடருவதால் அதன் முக

வுரையிலே விளக்குவாம். இதிற் காணும் ப்ரஸ்தாரம் (விரிவு) இராகவிபோதம் ஆங்கில மொழிபெயர்ப்பிலே காணலாம்.

இம்முதற்ருெகுதி முறையே மூலத்தையும் உரையினையும் தழுவிச் செய்யப்பட்டுள்ளதாகும். நூலோ மிகப் பெரியதாதலின் சிறு சிறு தொகுதிகளாக வெளியிடும் முயற்சியிலே இம்முதற்ருெகுதி வெளியிடப் பெறுகிறது. ஸ்ரீகுன்ஹன்ராஜா அவர்களால் இந் நூல், ஆங்கிலத்திலே ஸர்வதேசியமாக்கப்பட்டது போல அது உண்டாகிய இப்பாரதப் பெருமொழிகளுள் ஒன்ருய தமிழிலே மொழிமாற்றம் செய்துள்ளேன். இஃது என்னுல் முன்னர் வெளியிடப்பட்ட ராகவிபோதம் என்ற தமிழ்நூலைப் போன்று அறிஞர்களால் போற்றப் பெறும் எனக் கருதியே மொழிமாற்றம் செய்துள்ளேன். பிற மொழியிலுள்ள ஒரு நூலை வேற்று மொழியிலே மாற்றம் செய்வது மிகவும் சிரமமான காரியம். எனினும் முன்னவர்களுடைய அநுபவத்தையும், அறிஞர்களது கற்றுணையினையுங் கொண்டே எனது சிற்றறிவிற்கு எட்டியவரை ஒருவாறு மொழிமாற்றம் செய்துள்ளேன்.

இப்பணியையும், இதன் பயனையும், என் நிலைமையையுங் கருதின் மிகக் கடினமாகதாகவே எனக்குத் தோன்றியதாயினும், தமிழ் இலக்கிய வளர்ச்சியின் நசையால் இதை மொழிபெயர்த்துக் கொடுக்க முயன்றுள்ளேன். எனவே இம்முதற்ருெகுதியை கர்ணுடக ஸங்கீதத்துக்கும், இசைவழி வந்த முன்னதான நம் பாரதநாட்டுப் பண்பாட்டுக்கும், கலாரஸிகர்களுக்கும் ஹ்ருதயபூர்வமாக ஸமர்ப்பணம் செய்கிறேன். இச்

நூலிலே காணப்பெறும் குற்றங்குறைகளைக் களைந்து, இப்புனிதப் பணியைத் தொடர்ந்து செய்துவர என்னை முயற்சி தளராது செய்வதும், குணத்தையே குறிக் கோளாகக் கொள்ளும் பெரியோர்களது கடமையு மாகும்.

இம்முதற்ருகுதியை மொழிபெயர்க்குங்கால், வழக்கம்போல் உடனிருந்து செவ்விய முறையிலே பிரதி செய்து, ஒப்புநோக்கிய இளவல் சி. கிருஷ்ண மூர்த்திசர்மாவுக்கு எனது நன்றி உரித்தாகும். என்னை இதுபோன்ற தண்டமிழ்த் தொண்டிலே வழக்கம் போல ஆதரித்துவரும் கலாக்ஷேத்திரத்தின் அத்யக்ஷையான ஸ்ரீமதி ருக்மிணீதேவீ அவர்களுக் கும் எனது ஹ்ருதயபூர்வமான நன்றியைத் தெரி வித்துக் கொள்ளுகிறேன்.

முடிவாகப் பலவேலைகளுக் கிடையே சிரமத்தைப் பாராட்டாது இதனை நன்கு பதிப்பித்துக் கொடுத் துதவிய கிருஷ்ண ப்ரிண்டிங் வொர்க்ஸ் சொந்தக்காரர் களான ஸ்ரீமான் கோபாலஅய்யர் அவர்களுக்கும், ஸ்ரீஜயராமஅய்யர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"ஸித்தாச்ரமம்"
அடையாறு,
நந்தன, வைகாசி.

இங்ஙனம்
வாதூல வே. ராமசந்த்ரசர்மா

நூற்சிறப்பு

ஸ்ரீபரதருடைய காலத்திலிருந்து இசையுலகில் பல மாறுதல்கள் பலவிதமாகத் தோன்றியுள்ளன. ஸ்ரீபரதர் தாம் கண்ட இரண்டு கிராமங்களுக்கும் மூன்றாவதாகப் பிற்காலத்திலே, முன்னதாக இருக்கிருக்க வேண்டியதெனக் காணப்படும் காந்தாரக்ராமமும், அம் மாறுதலுக்கு ஓர் உதாஹரணமென்க. மேலும் பரதர் அங்கீகரித்துள்ள ஷட்ஜமத்யமக்ராமங்களில் பின்னையதின் அங்கீகாரம் தற்காலம் இழந்துவருவதும் மாறுதல்களுக்கானவொரு அத்தாட்சியேயாகும்.

ஸ்ரீபரதருடைய நாட்டியசாஸ்திரத்தில் ஸங்கிதம் நாட்டியத்திற்குத் துணையாகவே மதிக்கப்பட்டு விளங்குவதாகும். ஸங்கீதரத்நாகரமோ, இராகங்களையும், ஸங்கீதஸாஹித்யங்களையும் குறிக்கோளாகக்கொண்டும், ஏனையவற்றை அதற்கு அங்கங்களாகவும் கொண்டு விளங்குவதாகும்.

மேலும் இந்நூலை விளக்கமாகவும், வழியாகவும் கொண்டு பிற்காலத்திலே பல இசை நூல்கள் தோன்றலாயின. இதற்குச் சான்றாகப் பின்னைய நூல்களிலே பல இதனுடைய கூற்றுக்களை முற்றுங் கொண்டும், காலத்தால் சிற்சில மாறுதல்களுடன் சேர்க்கப்பெற்று வழிநூலாகவும் தோன்றியுள்ளன. இதற்கு உதாஹரணம் ஸ்ரீ துல்ஜாஜி செய்த ஸங்கீதஸாராம்ருதத்தையும், தாமோதரர் செய்த ஸங்கீததர்பணத்தையும் கொள்ளலாம். இன்னும் இவைபோன்ற பல நூல்களுமிருக்

கின்றன. எனவே இசை இலக்கியத்தின் சிகரமே போன்றது இந்த ஸங்கீதரத்னாகரமென்க.

இந்நூல் ஸ்வரவியல், ராகவிவேகவியல், ப்ரகீர்ணக வியல், ப்ரபந்தவியல், தாளவியல், வாத்யவியல், நர்த்தன வியல் என ஏழு அத்யாயங்களைக் கொண்டதாகும். அவற்றுள் ஒவ்வொரு அத்யாயமும் பல பிரிவுகளைக் கொண்டுள்ளன. அவ்வண்ணமே இம் முதல் தொகுதி யிலே காணும் முதல் அத்யாயம் எட்டுப் பிரிவுகளைக் கொண்டதாகும். அவைகளிலே முதற் பிரிவு நூற் பொருளையும், மற்றவைகள் விஷயங்களையும் கொண் டுள்ளது.

முதலாவது அத்தியாயம் இரண்டாவது பிரிவிலே காணப்பெறும் மானிடத் தோற்ற அமைப்பு உய்த் துணரற் பாற்று. நாதங்களின் இயல்பு, ச்ருதி, ஸ்வ ரங்கள் இவை இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. முற்றும் இசைநோக்கையே குறிக்கோளாகக் கொண் டது இந்நூல். இருபத்திரண்டு ச்ருதிகளின் அமைப் பிலே ஸ்வரங்களின் விரிவுகள் காணப்பெறுகின்றன. இதில் கூறப்பெறும் ஸ்வரங்களின் அறிவு, புதிய ஸ்வ ரத் திட்டங்களை ஆராயவும் இடமளிக்கும் பெருமை வாய்ந்ததாக உள்ளது. கிராமங்கள், மூர்ச்சனைகள், தானங்கள் முதலியன நன்கு விளக்கப்படுவதோடு காந்தாரக்ராமத் தோற்றமும் கொடுக்கப்பட்டுள்ளது ஒரு விசேஷமாகும்.

ஸ்வரங்களின் பொதுவியல்பும், மாறுதல்களும் சுவைபட ஆசிரியர் கூறுவதும் இந்நூற்சிறப்பியல் புக்கு ஓர் சான்றாகும். வர்ணங்கள், அலங்காரங்கள், ஜாதிகள் இவற்றின் பல்வேறு வகைகளும், கீதிகளும்

ஸங்கீதத்தில் பற்று வளரச் செய்யுமென்பதில் ஐயமில்லை. கிருதிகளிலே காணப்பெறும் பண்கள் யாவும் சிவபெருமான் துதியாகவே காணப்படுவது இப்பெருநூல் அவரது அருளை வேண்டி ஆக்கப்பட்டதென்பதைப் புலப்படுத்துகின்றது. கிருதிகளுடைய பிரிவிற் காணும் தாரம், விநியோகம், இராகம் முதலிய அடுத்த இயலின் முகவுரையிலே விளக்கிக் கூறவேண்டியதால் ஈண்டு குறிப்பிடவில்லை. (1952)

நூலாசிரியர் வரலாறு

இந்நூலாசிரியர் ஸ்ரீசார்ங்கதேவர் என்றவர் ஓர் அந்தணப் பெருமகனுவர். இமயஞ்சூழ்ந்து எழிலுற விளங்கும் காஷ்மீரம் இவரது ஜன்மபூமியாகும். சீரும், சிறப்பும், சீலமும், நுண்மதியும், உலகியல் நன்குணர்ந்ததுமான உத்தமகுலக்கொடியிற் றோன்றி யவர். இவருக்கு நி:சங்கர் (ஐயமற்றவர்), சார்ங்கீ, சிவப்ரியரீ, ஸ்ரீகரணுக்ரணீ, என வேறு பல பெயர்களு முண்டு. இவரது வம்ச பரம்பரை வருமாறு:

க. வ்ருஷகணர் - (தத்துவாசிரியர்)

உ. பாஸ்கரர் - (பில்லம வேந்தரால் ஆதரிக்கப் பெற்றவர்)

ஙு. ஸோடலர் - (ஸிங்கணன் வெற்றிக்குக் காரண மானவர்).

ச. சார்ங்கதேவர் - (ஸ்ரீகரணத் தலைவர் - நூலா சிரியர்)

இவருடைய தந்தை ஸ்ரீஸோடலர் பில்லமவேந்த னிடத்திலே உயர்பதவி வகித்தவராவர். இவரது பாட்டனுர் ஸ்ரீபாஸ்கரர் சைவப்பற்று மிக்குடைய பெரியோர் என்பர். இவரது வழி மஹான் விருஷகண முனிவரின் வழியாகும். எனவே இந்நூலாசிரியர் தத்துவம், இறைப்பற்று, உலகியல் இவைகளிலே சிறந்து விளங்கியது வியப்பன்று.

ஸ்ரீசார்ங்கதேவரின் காலத்தை நோக்குமிடத்து பில்லமனது காலத்தையும், ஸிங்கணமன்னனின் காலத்தையும் ஒப்பு நோக்குதல் வேண்டும். அம்முறையிலே பில்லமன் வடமேற்கிந்தியாவை கி. பி. பதினேராவது நூற்றாண்டிலே ஆண்டனன் என்க. இவன் வெற்றி மிக்க வீரன் என்பதற்கு அறிகுறியாக ஜைத்ரம் என்ற நகரை நிருமாணம் செய்தான் எனத் தெரியவருகிறது. இந்த பில்லம வேந்தனின் மகனே ஸிங்கண வேந்தன். இவன் ஸ்ரீவத்ஸபோஜராஜருக்குப் பின் அவந்தி, மாலவம், குர்ஜரம் இவற்றை ஒருங்கு சேர்த்து ஆண்ட யாதவமன்னன் எனப்படுவான். இவனையும் ஸ்ரீசார்ங்கதேவரையும் பற்றி அறிஞர் நன்கு ஆராயத்தக்கதாகும்.

இந்நூலாசிரியர் ஸிங்கணவேந்தனிடம் ஸ்ரீகரணராயிருந்ததாகத் தாமே கூறுவதால் உயர்பதவி வகித்தவொருவர் எனத் தெரியவருகிறது. ஸிங்கணமன்னனுடைய காலம் ககஅ௬ முதல் க௨௪௨ எனக் கொள்ளின் இந்நூல் பதின்மூன்றாவது நூற்றாண்டின் துவக்கத்திலே இயற்றியிருக்கவேண்டுமெனக் கொள்ளலாம்.

இவ்வாசிரியர் இயற்றிய மற்றொரு நூலான அத்யாத்மவிவேகம் என்றது இன்னும் கிடைத்திலது. அஃதும் அறிஞரால் ஆராயப்பெறுவது அவசியமாகும். ஜாதிகீதிகளிலே இவருடைய பண்கள் பெரும்பாலும் சிவபெருமானைப் பலபடியாகத் துதிக்கப்பெறுவதால் இவர் ஓர் சீரிய சைவப்பற்றுள்ளவரெனவும் தெளியலாகும்.

பொருளடக்கம்

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி	
4	3	தெய்வங்களையும்
6	9	புகழ்மிக்க சார்ங்க
10	20	கீத பதங்களின்
14	3	ஸர்வஜ்ஞத்துவ
16	9	வேதங்களைக்காண
„	15	உயிர்ப்படைப்புக்கு
„	17	(சரீரத் தோற்றம்)
20	17	அம்மகவு
29	22	பெறுகிறது
32	2	தாதுக்களும்
„	18	விழிப்படைகிறது
35	4	மூட்டுக்களாம்
44	3	அதனுடைய
„	17	அழுக்கற்ற நிலை
47	22	மார்ககா
49	4	உள்ளன
„	15	மலரின்
53	18	சூந்யஸ்தூல
54	18	இருபத்திரண்டு
57	14	இரண்டாவது
58	2	வீணையின்
62	10	ஐந்திரியற்ற
92	6	என்பர்
„	18	மூன்றாவதும்
97	17	அந்தத்திலே
„	21	மந்த்ராந்தத்தினுடைய
99	17	மற்றக் கலை
104	9	ப்ரஸக்கம்
122	1	மத்யஸ்தாயியிலுள்ள
127	17	தொட்டாற்போல
128	7	திரும்பி
„	14	வினையடியினின்று
131	20	உரைக்கப்படாமல்
145	1	ரஜநி
150	23	நோக்குழி
154	7	அமைவனவாம்
157	18	மத்யம
158	14	ஸஹ்து
162	16	மூன்றாங்கலையில்
177	23	குறையொலி
179	5	நிகேதம்
181	13	ராகரபஸ
183	24	ஸஹ்து
184	7	வல்லுனருட்
„	14	த்ருவாகான
„	19	பின்னர்
„	„	க்ரஹணம்

பக்கம்	வரி	
188	9	ஸுதேஜோ
	,,	ஸுகதி
,,	20	கூறிய
190	9	திரித்துக்கூறவும்
191	4	இராகங்களும்
,,	15	ஸப்த
193	2	வல்லுனர்
,,	18	விளக்கும்
194	1	நி:சங்கர்
,,	2	கூறப்பட்டதாகும்
,,	14	ஒலிப்பதுமாய
,,	19	நி:சங்கர்
195	16	ஜாதியினின்றும்
196	5	ஜண்டும்
205		க்ஷிதிப்ரகரணம்
207		,,
209		,,
206	4	மாகதீ
207	24	அத்தகைய

பக்கம்	வரி	
215	6	உலகினர் தம்
217	7	சாதுரிக கணிதம்
219	15	உபநிஷத்துக்கள்
221	22	காணப்பெறும்
222	9	உத்பிஜ்ஜம்
225	21	ஓடுகள்
226	5	நிலைக்கும்
232	23	ஒரு
233	(உ)	பஞ்சமம்
234	(ரு)	மென்மையானது
233	1	ஸப்த
,,	5	ஜம்பூத்வீபம்
242	20	மூர்ச்சனையி லிருந்து
246	6	ப்ரஸ்தாரங்கள்
259	22	கீரவங்கள்
261	2	,,
262	22	கைஷ்க்ராமிக

அத்தியாயம் ௬

ஸங்கீதரத்நாகரம்

(இசைமணிக்கடல்)

பதார்த்தஸங்க்ரஹம் க

க. எந்தத் தலைவனிடமிருந்து, களனும், நிலையும், அணிகளும், படைப்புக்களும், ஜாதிகளும், ஐச்வர்யங்களும், கிராமங்களும், (தொகுப்பு) உண்டாயினவோ; எவர் ப்ரஹ்மக்ரந்தியினின்றும் மேலோங்கிய ச்வாஸத்தோடு உறழ்ந்து, மனோ-வுலகினூடே செவிகளையுற்று இன்பம் அளிப்ப-வரோ; அறிஞர்களின் இதயத் தாமரையிலே தானே ஒளிர்கின்றவரும், உலகமுற்றும் ஒலிக்கும் கீதத்தொகுதியாம் வடிவுடையவருமாய அந்தச் சங்கரரை இன்பத்தின் பொருட்டு யான் நமஸ்கரிக்-கிறேன்.

உ. புகழினாலும், புநித நலத்தாலும், அமைந்ததும் வ்ருஷகணமுனிவரினின்றும் தொடர்-புடையதுமான ஒரு குடும்பம் வெற்றியுடைய காஷ்மீர நாட்டிலே உள்ளது.

ந. மலரயனே மண்ணுற்றது போல வேதக் கடலின் மறுகரையினைக் கடந்து சென்றவர்-

களும், நற்குணநல்லெண்ணங்களை அதிகாரபூர்வ-மாகத் தமது உடைமையாக்கிக்கொண்ட நிலை-யுடையவர்களும், (யஜ்ஞ) யாகங்களைப் பூர்த்தி செய்தவர்களுமான அந்தணச்ரேஷ்டர்களால்,

ச. அலங்கரியாநின்றதுமான முற்கூறிய குலத்திலே, தெற்குப் பிராந்தியங்களைப் பிரகாசப்-படுத்தத் தென்பால் புறப்பட்ட பேரொளிப் பிழம்பாய ஸூரியனையே போல பாஸ்கரர் பிறந்தார்.

ரு. அடக்க மிக்கவரும், நுண்மதி பொருந்-தியவரும், கீர்த்திவாய்ந்த ஸோடலர் என்ற மைந்தன் அந்தப் பாஸ்கரருக்குப் பிறந்தான். பில்லமவேந்த-னின் அபிமானத்தால் ஸம்பாதிக்கப்பட்டதும், உலக முற்றுமுள்ள துயரைத் தீர்த்த கீர்த்தியை-யும் கொண்ட அவர், ஜைத்ரம் என்ற நகரிலே ஜயஸ்தம்பம் நாட்டியும், புகழ்வாய்ந்த ஸிங்கண வேந்தனின் வளமுடைய முன்னேற்றத்திற்குக் காரணமாயும் விளங்கினார்.

சா. புகழுடைய ஸிங்கணவேந்தனோ, ஜய-சீலனுயும், உலகிலெவ்வேந்தருக்கும் மேலாயத் தலைமைபூண்டு விளங்கினனென்க ; என்னையோ ? உலகம் முழுவதும் பரவிய புகழொளி மிக்கவனுய் விளங்கிய ஸிங்கணனுடைய பாதங்களின் நக-

வரிசைகள், சரணுகதியடையும் வேந்தர்களின் மணிமுடிகளிலே பதித்துள்ள இரத்தினங்களின் ப்ரகாசப் பெருக்கால் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. பகைவரையே அவ்வொளி எரித்தது என்க.

எ. நன்னெறியினை நேசிக்கும் அம்மன்னனை நெறிமிக்க சீலர்கள் நேசித்தனர். சீலமிகுந்த அறிஞரால் சூழப்பட்ட ஸபையோடுகூட கற்றுவல்லாரின் தலைவனும் விளங்கிய அப்புரவலன், பல்லான ஸௌகரியங்களையும், நலத்தையும், ப்ராஹ்மணர்களுக்குத் திருப்தி யுண்டாகுமாறு செய்வித்தனன்

அ. அப்பார்த்திவன் கொடாத பொருள் எது? அவன் அறியாத செய்தி யாது? அவன் பெருத செல்வந்தான் எது? சீலமிக்கச் செய்கைகளுள் அவன் நிறைவேற்ருததுதான் எதுவோ? எந்தப் புகழால்தான் அவன் பிரகாசிக்கவில்லை?

கூ. தண்மை, வண்மை, வெண்மை இம்மூன்று குணங்களையும் ஒருங்கே பெற்ற பாற்கடலாம் ஸோடலரிடமிருந்து ஒவ்வொருவரையும், ஒவ்வொன்றையும் நிறைவூக்கத்தோடு பிரகாசிக்கவல்ல கிரணமாம் கரங்களைப் பெற்ற பூரணசந்திரன் என சார்ங்கதேவன் தோன்றியருளினுன்.

௧0. பெற்றோர்களையும், ஆசார்யர்களையும், அவரது ஊழியம், விநயம், முதலியவை மகிழ்வித்தன. தெய்வங்களையும் போற்றிப் பணிந்தார். விஜ்ஞாநம் கலை யாவும் அவர் கற்றுத் தெளிந்தார். அறிவாற்றலில் எவராலும் நன்கு மதிக்கப்பட்டார். சுருங்கக் கூறுமிடத்து உலகம் பரவிய புகழுடன் விளங்கினார் என்க. பாபத்தை யறுக்கும் புனிதத் தர்மநிறைவான அவரது வதநாகாரம் யாவரையும் அன்புகொள்ளச் செய்தது. என்னையோ? இவ்வுலகிலே சார்ங்கதேவர் ஒருவரே அத்தகையவராய் விளங்கினார் என்க.

௧௧. ஸரஸ்வதிதேவியோ, மநமென்னும் தாமரைமலர்களை நாடியலைந்து அலுத்துப்போய் சார்ங்கதேவனோடு இருந்து மகிழவும், உலகை மகிழ்விக்கவும் ஆன அவரது அகத்தையே என்றுமழியாத இருப்பிடமெனக் கொண்டாள்.

௧௨ பொருள் கொடையால் அந்தணரின் துன்பத்தைத் துடைத்தவராய், பின்னர் செல்வாடம்பரமான கேளிக்கைகளில் சிறந்தவின்பத்தைப் பெற்று விளங்கினார்.

௧௩. அறியாமையைப் பேரறிவாலும், நோயினை மருந்தாலும், நீக்கியருளிய அவர்

முடிவாக உலகத்தாரின் முப்பெருந் துயரை (ஆத்யாத்மிகம்; ஆதிதைவிகம், ஆதிபௌதிகம்) நீக்கியருளப் பெருவிருப்பெய்தினர்.

கச. அழியாத் தர்மத்தின் பொருட்டும், ஊழினும் உலையாக் கீர்த்தியின் நிமித்தமும், ஸ்வபாவ(இயற்கை)அமைதியழகினைப் பெறவுமே உள்ளங்கவர்ந்தெழு முயற்சியால் 'ஸங்கீதரத்நாகரம்' என்ற இவ்விசைமணிக்கடலை வெளியிட்டருளினர்.

நூல்

கரு-கஅ ஸதாசிவர், சிவபெருமான், ப்ரஹ்மதேவர், பரதர், காச்யபமுநிவர், மதங்கர், யாஷ்டிகர், துர்கா, சக்தி, சார்தூலர், கோஹலர், விசாகிலர், தத்திலர், கம்பளர், முதலியோரைப் போன்றே அச்வதரர், வாயு, விச்வாவஸு, ரம்பாதேவி, அர்ஜுநன், நாரதர், தும்புரு, ஹநுமான், மாத்ருகுப்தன், ராவணன், நந்திகேச்வரர், ஸ்வாதிர்கணர், பிந்துராஜன், க்ஷேத்ரராஜன், ராஹலன், ருத்ரடன், நாந்யபூபாலன், போஜராஜன் போன்றுரும், பரமர்தீ, ஸோமேசன், ஜகதேகமஹீபதி போன்ற இசைப் புலவர்களைப் போன்றே அவர் விளங்கினர் என்க.

௧௯. பரதருடைய க்ருதிக்கு லொல்லடர், உத்படர், சங்குகர், பட்டாபிநவகுப்தர் போன்ற முன்ேனோரான உரையாசிரியர்களும், இவர்களை யடுத்த கீர்த்தி மிக்க கீர்த்திதரரும் தோன்றினர்.

௨௦. ப்ராசீன (பழைய) காலங்களிலே இசையிலே வல்ல அப்புலவர்கள் பலரும், தத்தம் தத்துவங்களின் நற்றுணை கொண்டு, ஆழமிக்க ஐயப்பாடுகளாம் மத்தினைக் கொண்டு இசைக்-கடலைக் கடைந்தனர். புகழ்மிக்கச் சார்ங்கதேவனோ அமுதத்தை அவ்விசைக் கடலினின்று மேலே கொணரும் பெருமைக்குரியாரானார். கீதம் (இசை) வாத்யம்(கருவி) ந்ருத்தம் (நாட்டியம்) என்பவையே ஸங்கீதத்தின் முக்கியமான மூன்று கொள்கை-யெனக் கொள்ளப்பட்டன.

௨௧. ஸங்கீதமோ இருவகைத்து; மார்கம், தேசி என்பர். இவற்றுள் மார்கமே, ப்ரஹ்மதேவ-னாலும், பரதராலும், மற்றோராலும் நன்கு காணப்-பட்டு, பயிலப்பட்டதென்க.

௨௨. சிவபெருமானின் முன்னிலையிலே பல்-வேறு நிலைகளையும், எழிலையும் படைத்தனர் என்க. வெவ்வேறான பிரதேசங்களையும், மக்களை-யும், அவர்களின் இதயங்களையும் கவரவல்லச்

சுவை மிக்கதாய் அவை விளங்கின.

உங. கருவியால் உதஹரிக்கப்பட்டதான அக்கீதம் நடிப்புடன் கூடியே தேசி எனப்பட்டது. கருவியினைத் தொடர்ந்து நாட்டியமும், கருவிகளோ கீதத்தைத் தொடர்ந்தும் காணப்பட்டன.

உச எனவே கீதமே (இசையே) ஈண்டு முதன்மையைப் பெற்றது. ஸ்ருஷ்டிகர்த்தாவோ, ஸாமவேதத்தினின்று இவ்விசையினைத் தொகுத்தார் என்க.

உரு. எல்லாம் வல்ல இறைவனை இசையினாலே போற்றப்பட்டது. உமாபதியாய சிவபெருமானும், கோபியர் அகத்தே அழியாத்தலைவராம் கோபாலனும், முறையே நாட்டியத்தாலும், டமருகத்தினாலும், குழலாலும், தாண்டவத்தாலும் சிறந்தனர் என்க

உசு ப்ரஹ்மதேவனோ ஸாமோச்சாரணத்தால் கவரப்பட்டார். வீணையால் கலைமகளும், ஈர்க்கப்பட்டாள் எனின், யக்ஷர்களையோ, கந்தர்வர்களையோ, தேவர்களையோ, மற்றுள்ள மக்கள், அரக்கர்களையோ என்னென்றுரைப்பது.

உஎ. உலகவின்பை முற்றும் அல்லது ஒரு சிறிதும் அறியாத ஒரு குழந்தையோ, அழுதுகொண்டு

தொட்டிலிலே படுத்துத் தாயின் இசையமுதைப் பருகி உயரிய இன்பத்தையுறுகின்றதன்றோ!

௨அ. காடுகளிலே திரிந்தோடும் கேவலம் ஒரு புல்வாய்—சிறுமான்—வேடுவர்களால் இசைக்கப்பட்ட பண்ணினால் மதிமயங்கிக் கவரப்பட்டு ஜீவனையும் இழக்கின்றதன்றோ!

௨௯. அறம், பொருள், இன்பம், வீடு எனும் பெறற்கரிய பேற்றினையடைய, முக்கிய குறிக்கோளாயிருக்கும் இத்தகைய இசையின் பெருமையை எவரே உள்ளவாறு எடுத்துரைக்கும் ஆற்றலுடையவர்?

௩0. இந்நூலிலே முதல் அத்தியாயத்திலே, மனிதத் தோற்றத்தோடு ஸ்வரத்தை இணைத்து, அதன் முக்கியத்துவத்தையும்; நாதம் (ஒலி) ஸ்தானம் (இடங்கள்) ச்ருதிகள் (அளவிட்ட இன்பம் பயக்கும் த்வநி) இவற்றின் தோற்ற நிலைகளையும் உரைப்பதுடன்,

௩௧ பின்னர் ஏழு சுத்த ஸ்வரங்களையும், மற்றுமுள்ள பன்னிரண்டு விக்ருத ஸ்வரங்களையும், குலங்களையும், ஜாதிகளையும், வர்ணங்களையும், த்வீபங்களையும், ரிஷிகள், தேவதைகள் முதலியவற்றையும்,

௩௨. சந்தஸ்ஸின் (அளவுகள்) முறைகள், பிரயோக (விநியோக) முறைகள், க்ராமங்கள், (தொகுப்புக்கள்) மூர்ச்சனைகள், தானங்கள், சுத்தம், கூடம் என்பவைகளுடனும், அவற்றின் எண்ணிக்கைகளுடனும்,

௩௩. தொகுதியின் உள்ளிட்ட விரிவாம் ப்ரஸ்தாரத்தையும், எடுபட்ட ஸ்வரங்களுடைய வெவ்வேறான எண்களுடன் உள்ளவற்றைத் தெரிவிக்கும் கண்டமேருவாய் வரையிட்ட எண்களையும், நஷ்டம், உத்திஷ்டம், ஸ்வரஸாதாரணங்களையும், ஜாதிஸாதாரணங்களையும்,

௩௪ ஸ்வரஸாதாரணத்தின் வகையாய காகலியின் ஸரியான தோற்றத்தையும், அந்தரத்தையும், வர்ணங்களின் விளக்கத்தையும், அறுபத்துமூன்று அலங்காரங்களையும், பதின்மூன்று வகைகளான—

௩௫ கீதிகளின் பல்வகையான, கம்பளம், கபாலம் இவற்றின் தன்மைகளும், அம்சம், க்ரஹம், ஜாதிகள் இவற்றின் விளக்கங்களும், இவ்விதம் பலவாறு விஷய ஸூசிகையின் வடிவாயமைந்துள்ளன.

௩௬. பிறகு ராகவிவேகம் என்ற இரண்டாம்

அத்தியாயத்திலே க்ராமராகங்களையும், உபராகங்களையும், இராகங்களையும், பாஷாங்கங்களையும், விபாஷாங்கங்களையும்,

௬௭ அவற்றிலுள்ள அந்தர்பாஷாங்கங்களையும், பாஷாங்கங்களின் அங்கங்களையும், உபாங்கங்களையும், க்ரியைகளின் அங்கங்களையும் நேர்மையான நெறியிலே விளக்கியும் ;

௬௮. பொதுவிதியாய மூன்றுவது அத்தியாயத்திலே வாக்கேயகாரர்களையும், (பாடகர்) தேசி, மார்கம் என்றிரண்டையுமுணர்ந்த காந்தர்வத்தையும், அவற்றைக் கையாளுகிற கீதவிற்பன்னர்களையும்,

௬௯. கீதவிற்பன்னிகளையும், அவர்களின் பெருமை சிறுமைகளையும், ஒலிகளின் வேற்றுமையினையும், அவற்றின் பெருமை சிறுமைகளையும், சாரீரம் அதன் பெருமை முதலியவற்றையும், சிறுமையினையும்,

௭0. ப்ருந்தையின் விளக்கமாய் ஆலாபம், ஸ்தாயம், கமகம், முதலியவற்றையும் : பின்னர், நான்காம் அத்தியாயத்திலே கீதப் பதங்களின் விளக்கமாயுள்ள ப்ரத்யக்ஷ கீதமாய தாதுக்களையும், அவற்றின் வகைகளாய ஜாதிகளையும் கூறுவ-

துடன், தொகுக்கும் முறைகளையும்,

• ௩௬. சுத்தம், சாயாலகம், என்ற இருவகைத்தான ஸூடாதிகளையும், ஆலிக்ரமம், ப்ரபந்தம் முதலியவற்றையும், ஸூடையிலும், ஆலியிலும் உள்ள மற்ற விவரணைகளையும்,

௩௭ பொது விவரணங்களையும், சாயாலகம், ஸூடம் இவற்றைச் சார்ந்த பொது விஷயங்களையும்: கீதிகளின் பெருமை சிறுமைகளையும், கலையிலே வல்ல சார்ங்கதேவனால் அமைக்கப்பட்டுள்ளன.

௩௮. தாளத்தை விவரிக்கும் ஐந்தாவது அத்தியாயத்திலே (கலைகள், பாதங்கள் இவற்றைப்போல) மார்கதாளங்களையும், நான்குவித மார்கங்களையும், எட்டுவித மார்க கலைகளையும், குறிப்பிடுவதுடன்:

௩௯. தீர்க்கம் (நெடில்) ஹ்ரஸ்வம், (குறில்) இவற்றின் மாத்திரைகளும், மாத்திரைகளிலிருந்து பாதபாகங்கள், ஏககலைகளான பேதங்களையும், தாளத்திலே கலை, பாதம் இவற்றைப்பற்றிய தெளிவு விளக்கங்களும்,

௪௦–௪௧ அங்குலிகளின் (விரல்கள்) விதியாம் வகைகளிலே; யுக்மம், பரிவ்ருதம், அவற்றின்

லயம், யதிகள் (கால ஒலியின் இடையேயுள்ள நேரம்) கீதகங்கள், மத்ரகங்கள், மற்ற கீதங்கள், தாளாங்கங்களின் போஷணைகள், கீதாங்கங்கள், தேசிதாளங்கள், இவற்றைத் தாளவிவரணைகளி-லும் நன்கு நிறைவேற்றியுள்ளார் ஸம்சயமற்றப் புலமையுடைய சார்ங்கதேவர்.

௪௰. ஆறும் அத்தியாயத்திலே இசைக்கருவி-களின் எல்லா வகைகளையும், ஏழாம் அத்தியாயத்-திலே ரஸங்கள் (சுவை) பாவங்கள் (தன்மை) இவற்றையும் சீரிய முறையிலே நாட்டியத்தையும் விவரித்துள்ளார்.

பதார்த்தஸங்க்ரஹம் என்ற முதல் ப்ரகரணம் இவண் முற்றும்.

உடற்கூற்றின் நிலை உ

க. கீதமோ நாதத்தின் இயல்பைச் சார்ந்துள்ளது. நாதத்தை எழுப்பி நிலைக்கச் செய்வதில் கருவிகள் (வாத்யங்கள்) புகழ் வாய்ந்தனவாம். நாட்டியம் முற்கூறிய இரண்டினையும் பொறுத்தே அமைவதாகும். எனவே நாதம், வாத்யம், நாட்டியம் இம்மூன்றும் கீதத்தின் கீழேயே அமைவன.

உ. நாதத்தால் வர்ணம் அமைக்கப்பட்டுள்ளது. வர்ணத்தினின்று ஒரு பதம் உண்டாக்கப்படுகின்றது. பதங்களிலிருந்து பாஷை (மொழி வளர்ச்சி) உண்டாயது. பாஷையினூடே உலகின் செயல் காணப்படுகின்றது. ஆகையால் உலகமே நாதத்தின் அதீநமாய் உள்ளது.

ந. நாதமோவெனின் ஆஹதம், அநாஹதம் என இருவகைத்து. அந்த நாதமும் மனிதத்தோற்றத்தினுள்ளே பொதிந்ததேயாம். ஆதலின் உடற்கூற்றின் நிலை இங்கு வ்யவஹரிக்கப்படுகின்றது.

ச. ப்ரத்யக்ஷத்துக்கு அப்பாற்பட்டதும், பிறவாததும், இரட்டையற்றதும், முக்கிய மூலகாரணமானதும், ஸர்வவல்லமை எனப் பேசப்படுவதும், மாசுமறுவற்றதும், தானே ஒளிருவதும், அறிவும் ஆநந்தமுமாகிற ப்ரஹ்மமே உள்ளது.

ரு. சார்பற்றதும், உருவமற்றதும், எல்லா-வற்றையும் ஆளுவதும், அழிவினின்றும் தவிர்ந்த-தும், ஸர்வவல்லமையும், ஸ்ர்வஜ்ஞத்துவமுமுள்ள ஜீவர்கள் அந்த விராட்ப்ரஹ்மமாகிற ஸர்வேச்-வரனுடைய பகுதிகளாம்.

கா-எ. ஆரம்பமற்ற சூனியதத்துவத்தால் கட்டளையிடப்பெற்றதும், விறகின் சேர்க்கையி-லிருந்து தானே தீயினின்றும் வேருகிய நெருப்பு மணிகளே போன்றவை ஜீவாணுக்கள். அவைகள் ஆரம்பமற்ற கர்மாக்களால் ஆளப்படுகின்றன. என்னேயோ? தோற்றத்தின் பெருமையும், சிறு-மையும், இன்பும், துன்பும், எய்துகின்றனவாத-லின். இந்த வினையின் காரணமாய் அமைந்த ஒரு சரீரம் ஜாதிகளேயும் வாழ்க்கையினேயும், அநுப-வங்களேயும், சேர்த்துத் தொகுத்ததே யாகும்.

அ. பிறவிபிறவியாக உரிமையாக்கிக் கொண்டதாகும். அத்தகைய ஜீவர்கள் பௌதிக-மான லிங்கசரீரமாம் மற்றுமொரு தோற்றத்தை-யும் பெற்றுள்ளார்கள். முக்தியாம் நிலை எய்துங்-காறும் அழியாதது. (மீண்டும் மீண்டும் பிறவிக்-குக் காரணமாயுள்ளது) என ஒப்புக் கொள்ளப்-பட்டது அஃது.

௯. ப்ராணச்வாஸங்கள், அறிவுப்புலன்கள் (ஞானேந்த்ரியங்கள்) கர்மாதாரங்கள் இவற்றின் ஒரு தொகுதியே இந்த ஸூக்ஷ்மசரீரம் எனக் கூறுகின்றனர். ஜீவர்களின் அநுபவத்திற்காகப் பிறவாப் பெரியோனாகிய ப்ரஹ்மன் இவ்வுலகைப் படைத்தருளுகின்றான்.

௰. அந்த விரிவடைந்த ஆத்மனும், தலை-சிறந்த ஆத்மனும், பின்னர் சாந்தியின் பொருட்டுத் தத்தம் உலகை அழிக்கின்றனர். இத்தகைய படைப்பும், அழிப்பும், ஆரம்பமற்ற நிகழ்ச்சியே போல ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

௧௧. இந்த ஜீவர்கள் பரமாத்மாவினின்றும் வேறானவர்களல்லர். அந்த பரமாத்மாவினின்றும் உலகமும் வேறானதல்ல. இவ்வுலகைத் தம்மி-லிருந்தே தமது சக்தியால் படைத்துள்ள அவர் அதினின்றும் எங்ஙனம் வேறாவர்? பொன்னின் குண்டலம் போல் பொலிவுற்றார் ஆகலின்!

௧௨-௧௩. எவ்விதம் ஒரு பழுதையிலே ஒரு நாகம்தோன்றுகின்றதோ, அதுபோல மாயாதத்து-வங்களூடே இவ்வுலகைப் படைப்பதாக மற்றுஞ் சிலர் கூறுவர். பரமாத்மாவினின்றும் முதலில் ஆகாசம் படைக்கப்பட்டுள்ளது. அந்த ஆகாசத்தி-

னின்று வாயுவும், வாயுவினிடமிருந்து அநலனும், பின்னர், அநலனிடமிருந்து ஜலமும், ஜலத்தி-லிருந்து ப்ருதிவியும் (ஆகாயம், வளி, தீ, நீர், நிலம்) படைக்கப்பட்டன. இவைகளே மஹாபூதங்-களாம் (பெருந்தோற்றங்களாம்) இதே 'விராஜ்' என்ற ப்ரஹ்மனின் சரீரத் தோற்றமாம்.

௧௪. அந்த விராட் ப்ரஹ்மம், நான்முக ப்ரஹ்-மனை ஸ்ருஷ்டித்தது. அதே விராட் ப்ரஹ்-மம் நான்முக ப்ரஹ்மத்திற்கு வேதங்களைக் (அறிவு-கள்) கொடுத்து, அவ்வேதங்களில் உள்ள பதங்-களின் துணைகொண்டு, பூதங்களின் மூலாதாரங்-களைப் படைக்க அவரை நியமித்தது.

௧௫. அந்த விராட்ப்ரஹ்மத்தின் கட்டளையால் நான்முக ப்ரஹ்மதேவன் தன் மநத்தூடே கேவலம் ப்ரஜாபதிகளை உயிர்படைப்புக்குரியோர் ஸ்ருஷ்-டித்தார். இந்த்ரியங்களினின்றும் வெளிப்பட்ட படைப்புக்கள் சரீரத் தோற்றம்) இப்பிரஜாபதி-களிடமிருந்து உண்டாயின.

௧௬-௧௭. தோற்றங்கள் (சரீரங்கள்) நான்கு வகைப்படும். என்னையோ? ஸ்வேதஜம்; (வியர்-வையிலுண்டாவது) உத்பிஜ்ஜம்; (தெளித்து உண்டாவது) ஜராயுஜம், (கருப்பையில் உண்டா-

வது) அண்டஜம் (முட்டையிலுண்டாவது) எனப் பிறவிகளின் காரணங்கள் வேறுபடுதலின். புழுக்கள் முதலியவை வியர்வையினின்றும், புல், பூண்டு, செடி, கொடிகள் முதலியவை விதை தெளிப்பதினின்றும், மக்கள், தேவர், நரகர் முதலானவர் கருப்பையினின்றும், பறவைகள் முட்டையினின்றும் உண்டாகின்றனவாகலின். அவற்றினுள்ளே மக்கட்தோற்றமே நாதத்திலே பயனுடையது என்ற காரணத்தால் அதற்கு முக்யத்வம் அளித்துள்ளது.

கஅ. க்ஷேத்ரஜ்ஞன் (தோற்றமுணர்ந்தோன்) ஆகாசத்திலே உளன்; ஆகாசத்திலிருந்து வாயுவினிடம் அவன் வருகின்றான். வாயுவினிடமிருந்து அவன் தூமமாகவும் (நீராவி) பின்னர் மேகமாகவும், அசையும் நீராவிக் கூட்டமாகவும்) அம்மேகத்தினின்று அவன் நீருண்ட மேகமாகவும் (மழைக்குரிய மேகம்) ஆகின்றான்.

கக-உO. யாகங்களிலே ஹவிர்பாகங்கள் உந்தப் பெற்றவனாகி ஸூரியன் கோடையிலே தனது கிரணங்களால் நீரினை ஆவியாக்கி அதை மேகத்தினுள் பொதிய வைக்கின்றான். மேகம் மழையாகக் கீழே பொழியும் பொழுது அம்மழை-

நீருடன் ஜீவன் தானே புல், பூண்டு, மரம், செடி, கொடி. இவைகளைப் பற்றிக்கொள்ளுகின்றான். ப்ருதிவி(மண்) யினின்றும் உண்டாகிய அவைகள் அறியாமலேயே அவற்றுள் கலந்துவிடுகின்றான்.

உ௬. இந்த ஓஷதிவநஸ்பதிகளிடமிருந்து உணவு உண்டாக்கப்படுகின்றது. மனிதர் அதை உண்பதால் இந்த்ரியம் உண்டாகின்றது. ஓர் யுவதியின் சுத்த ச்ரோணிதத்திலே மதநாகாரத்தில் வைக்கப்படுகின்றது அஃது.

உ௭. அஃது சுத்தமாயிருந்தால் இரத்தத்துடன் கருப்பையைச் சென்றடைகின்றது. பின்னரே ஜீவனின் கர்மவசத்தால் மாறுபாடுற்று கர்பவாஸத்தைத் துவக்குகின்றது.

உ௮. முதல் மாதத்திலே கலலம் என்ற திரவத்தன்மையை உண்டாக்குகின்றது. ஆனால் இரண்டாம் மாதத்திலோ அடர்த்தியான பிண்டமாகவோ, அல்லது சதுரவடிவத்துண்டாகிய ஒரு பேசியாகவோ, அல்லது மல்பெரிமரத்தின் மொட்டுப்போலவுள்ள ஒரு அர்புதமாகவோ (மாம்ஸபிண்டம்) காணப்படும்.

உ௯. கிரமத்திலே ஆண், பெண், அலி இவற்றின் முந்தைய வடிவங்கள் இவைகள், மூன்றும்

மாதத்திலே, புஜங்கள், பாதங்கள், சிரஸு இவற்றைப் பின்னர் வளரச் செய்யும் ஐந்து அங்குரங்கள் (முளைகள்) காணப்படுகின்றன.

உரு. அச்சமயத்திலே முற்கூறியவற்றுடன் தசைமூட்டுக்களும், அடுத்தடுத்து உண்டாகின்றன. அவற்றின் பகுதிகளும் (பற்கள் சிகைக்கானவை நீங்கலாக) அமைகின்றன.

உசா. இவ்வுருவே ப்ரக்ருதியாகும். ஆனால் இவற்றில் நன்கு அமைந்த உருவையே விக்ருதி என்று நல்லோரால் ஒப்பத்தக்கதாயிருக்கிறது நான்காவது மாதத்திலே முற்கூறிய இவற்றின் நிலைகள் நன்கு போஷிக்கப்பட்டு நிலையானவைகளாய் தத்தமக்குரிய தன்மைகளையும் பெறுகின்றன.

உஎ ஆணின் தன்மை தீரமும், துணிவும் கொண்டு விளங்கும். ஆனால் பெண்களுடையதோ, அவர்களின் தன்மை அச்சத்தாலாய மடமையைப் பெறுகின்றது. அலிகளுக்கோ வெனின், இருவிதப் பண்புகளும் நிலைமாறுகின்றன என்பர் பெரியோர்.

உஅ. சிசுவின் இதயம் தாயின் இதயத்திலிருந்தே உண்டாவதாகும் அஃது மகிழ்ச்சிக்குரிய பொருளையே விரும்புகின்றது. எனவே கருப்பையின் ஒழுங்கான வளர்ச்சிக்குத் தாயார் இதயத்தின்

அவாக்களை ஒருவர் பூர்த்தி செய்விக்க வேண்டும் என்பர்.

௨௯. இத்தகைய இரு ஹ்ருதயங்களுடன் கூடின ஸ்த்ரீயைத்தான் அறிஞர் "தௌஹ்ருதிநீ" (இரட்டை இதயத்தாள்) என வழைப்பர். நன்கு நிலையானதும், போஷணையோடும் கூடி கர்பம் தனது வளர்ச்சியைப் பெறுகின்றது.

௩௦. குறித்த ஒரு பொருளைத் தாயார் பெறு-விடின், சிசுவும் அச்சிந்தையால் அப்பொருளைப் பற்றித் துயருறுகின்றது. நிறைந்த மகிழ்ச்சியாலும் போஷணையினூடே தாயைச் சார்ந்த கர்பம் ஒரு மன்னனைக்காணின் ஐச்வர்யமிக்கதாகின்றது.

௩௧. ஒரு முனிவரின் ஆசிரமத்திலே அவள் தனது காலத்தைக் கழிப்பாளாயின் தோன்றும் குழந்தை ஆடையணிகளில் வெறுப்புற்றும், நற்-குணசீலங்களைக் கடைபிடிப்பதாகும். தெய்வங் களைக் காணின் அம்மகவு மதாபிமானம் மிக்கதா-யிருக்கும். கொடிய நாகங்களைக் காணின் அஃது கொடுமைத்தன்மை மிகுந்து விளங்கும்.

௩௨. அவள் கோதா-கானகத்தில் வாழும் மரப்பல்லி-இறைச்சியை உண்பாளாயின் பிறக்கும் சிசு துயிலை விரும்பும். அவள் பசுவினிறைச்சியை

உண்பாளாயின் தோன்றும் மதலை பலமுள்ளதாக விளங்கும். அவள் எருமை யிறைச்சியைத் தின்பாளாயின் கிளியினுடையதே போன்ற செவ்விழிகளைக்கொண்டும், உரோமமடர்ந்துமுள்ள ஓர் புதல்வனைப் பெறுவாள்.

௩௩. ஐந்தாவது மாதத்திலே மனோவுலகு உணரப்படுகின்றது. தசைகளும், ரத்தமும் விருத்தியடைகின்றன ஆருவது மாதத்திலே சரீரத்தில் ரோமத்வாரங்களும், சிரஸில் கேசமுளைகளும், நகங்களும், நுண்மையான நரம்புகளும், எலும்புகளும் சிசுவுக்கு நிலைபெறுகின்றன.

௩௪. அத்துடன் பலமும், வர்ணமும் (நிறம்) சேருகின்றன. ஏழாவது மாதத்திலே தசைமூட்டுக்களின் பூரண வளர்ச்சி முற்றும் பெறுகின்றது. இருகாதுகளின் உட்குழிந்த தொளைகளிலே இரு தொடைகளினிடையாக இரு கரங்களையும் பொத்திக்கொண்டிருக்கும்.

௩௫. கர்பாசயத்தில் வசிப்பதால் வெறுப்பும் அலுப்புமடைந்து, அதனுள் சிறைப்படுத்தப்பட்டு, பூர்வ ஜன்மத்திலே பொருந்திருந்த துயரங்களையெல்லாம் நினைத்துக்கொண்டுமிருக்கும்.

௩௬. விடுதலைக்குரிய ஓர் காரணத்தையே

(வழியையே) நினைத்துக்கொண்டு தானே மீண்டும் மீண்டும் வெளியேறுவதில் இயங்கு முயற்சியிலே கவர்ச்சி கொண்டும் விளங்குகின்றது. இவ்விதமே அஃது தங்கியிருக்கிறது. எட்டாம் மாதத்திலே தோல் மூடிக் கொள்வதுடன் சிசுவுக்கு எண்ணத் தொகுதிகளின் நினைப்பும் ஏற்படுகின்றது. ஓஜஸூம் (வீர்யம்) கூட உண்டாகின்றது. இந்த வீர்யம் இதயத்திலே முதலில் தோன்றுகின்றது.

௩எ. வீர்யமோ சுதை போன்ற சுத்தமான-தும், ஸாதாரண மஞ்சள், சிவப்புக் கலந்த நிறமும் கொண்டு வாழ்க்கையின் பெருக்காக மதிக்கப்படு-கின்றது. இந்த நிலையற்ற வீர்யப்பொருள் (ஓஜஸ்) சிற்சில ஸமயங்களிலே தாயைச் சுற்றியும், சில-வேளைகளில் கருப்பைக்குள்ளிருக்கும் சிசுவிடமும் திரிந்தலைகின்றது

௩அ. ஆகையால் எட்டாம் மாதத்திலே பிறந்த குழந்தை உயிர்தரித்து வசிக்காது. என்னையோ? இவ்வோஜஸை (வீர்யத்தை) தாயிடம் இழந்த-தால் என்க. சில ஸமயங்களில் ஊன்றிய ஊழ்வலி யின் வலுவால் துண்டித்தத் தசைமூட்டுக்களே போலக் கொஞ்சகாலம் உயிருடனிருந்து மரிக்கும்.

௩௯. ஒன்பதாம் மாதத்துக்கு மேலே தான்

ஜநநத்துக்குக் கால அளவு என்பர். பரை எனப்-பட்ட ரஸத்தை (மதுவை) செலுத்திப்போகிற-தாயின் நாடியினூடே கருப்பை கட்டுண்டிருக்கும்.

சO. கருப்பையின் சிசுவின் நாபியிடையி-லுள்ள நாடியே தாயின் உணவுச்சத்தைக் கருப்-பைக்கு இட்டுச் செல்லுகின்றது. (ஆண்) மகவா-யின் அஃது தன்னிருகரங்களையும் சிரத்திற்கு நேராகக் கூப்பிக்கொண்டு தாயின் முதுகுபுறத்தை நோக்கியவாறு அமைந்திருக்கும்.

சக. அச்சிசுவோ தன்னுடலைச் சுருக்கிக்-கொண்டு கருப்பையின் வலபாலும், பெண்சிசுவோ அவ்விதமே கருப்பையின் இடபாலும், அலிப்பிற-வியோ (நபும்ஸகம்) அவ்விதமே கருப்பையின் மத்யபாகத்திலும், ஸ்தாநங்களை (இருப்பிடம்) அமைத்துக் கொள்ளும் என்பர்.

சஉ. முதலிலே குழந்தையானது கீழ் நோக்-கிய சிரத்துடன் நிலைமாற்றம் செய்யப்படுகின்றது. பின்னரே ஸூதக வாயுவினால் அழுந்த உந்தப்பட்-டுச் சிசு வெளிப்படுகின்றது. பாவம்! அதன் சரீரம் யோநியினூடே வரும்பொழுது சித்திரவதைக்-குள்ளாகின்றது.

சந. பிறந்ததும் உடனே அதனுடைய

செய்கை பாலருந்துவதேயாகும். என்னையோ? முற்பிறவியின் செய்கையே அதற்குக் காரணமாகலின், எனவே ஜீவன் என்றுமழியாது நிலைப்பவனே.

௩௪. தாயிடமிருந்து உண்டான குணங்களும், அதே வண்ணம் தந்தையாலுண்டாய பண்புகளும், உணவின் சுவைமிக்க பொருளால் கிடைத்தத் தன்மைகளும், ஒன்றியான தன்னதான சில பாவங்களும், ஸத்துவத்திலிருந்து சில தன்மைகளும், பூர்வஜந்மத்திலே ஆர்ஜிதமான (ஸம்பாதித்தது) நடத்தைகளும், அது உடைமையாகக் கொண்டு பிறக்கும்.

௩௫. ம்ருதுவான (மெல்லிய) பாகங்களாகிய ரத்தம், கொழுப்பு, மஜ்ஜை, பித்தம், ச்வாஸாசயம், குதம், ஹ்ருதயம், நாபீ இவை முதலான மற்றவைகளும், தாயினிடமிருந்தே பிறப்பிக்கப்படுகின்றன.

௩௬. தாடை ரோமம், உடல் ரோமம், தலையிலுள்ள முடிமயிர், நுண் நரம்புகள், ஸிரைகள், தமனிகள், என்ற மெல்லிய இரத்தக் குழல்கள், நகங்கள், பற்கள், சுக்லம் (வெள்ளை ஜீவாணுக்கள்) இவைகளும், மற்ற நிலையான இயல்புகள் தந்தையிடமிருந்து உண்டாவதாக மதிக்கப்படுகின்றன.

௪எ. சுவைமிக்க உணவிலிருந்து சரீரவளர்ச்சியும், தோற்றப் பொலிவும், உயரமும், துயிலும், வன்மையும், இருப்பும், ஆசையின்மையும் ஊக்கமும் உண்டாகின்றது

௪அ. தேவையின் வேட்கை, வெறுப்பு, இன்பம், துன்பம், நற்குணம், தீயகுணம், பதிய வைத்தல், வெளிவிடுதல், அறிவு, வாழ்க்கை, அறிவுப் புலன்கள் இவைகள் தன்னதான ஒன்றிடமிருந்து பிறப்பிக்கப்படுகின்றன என ஒப்பப்பட்டுள்ளது.

௪௯-௫0. உள்ளீடான உணர்வுடைய அறிவுப் புலன்கள் ஐந்து என்பர். முறையே கேட்டல், உணர்தல், பார்த்தல், சுவைத்தல், ச்வாஸித்தல் என்பவை அவை. மற்றும் ஒருபால் இவற்றின் அண்டங்களானவை முறையே; சப்தம், தொடுதல், நிறம், சுவை, கந்தம் என்பனவாம். அவ்வாறே செய்கைகளின் புலன்களாவன; பேச்சு, கரங்கள், பாதங்கள், குஹ்யம், உபஸ்தம் என்பனவாம்

௫௧. அவற்றின் க்ரியைகளாவன. முறையே பேசுதல், பற்றுதல், நடத்தல், வெளித்தள்ளுதல், ஸுகித்தல் முதலியன; உள்ளீடான இரு இந்த்ரியங்களாவன. மனமும், அறிவுமாம்.

௫௨. இன்பும், துன்பும் மநோவிகாரமாம். நினைத்துத் தொகுத்தல், தவறுதல், ஐயப்படுதல் இவை அறிவின் தொழில்களாம்.

௫௩. ப்ரஹ்மனையே காரணமாகக் கொண்டு ஞாநேந்த்ரியங்கள் அமைந்துள்ளன என்பர் சிலர். மற்றுஞ்சிலர் பஞ்சபூதங்களின் சேர்க்கையே முற்கூறியவற்றிற்கு ஆதாரம் என்பார். ஸத்வம், (என்றுமுள்ள நல்ல நிலே) என்கிற உள்ளீடான கருவிக் குணங்களின் வேற்றுமைகளைச் சார்ந்து மூன்றுவகைக்ளாகும்.

௫௪. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பனவாம் அவை. பரிசுத்தமான சீலத்திற்கும், ஏனையவற்றுக்கும், மாறுபடாத் தன்மையுள்ள ஆஸ்திக்யத்தின் காரணமாக ஸத்வத்திலிருந்தே ஸாத்விகஸ்வபாவம் பிறக்கின்றது.

௫௫. முற்கூறிய ஸத்வத்திலிருந்தே ஆவல், க்ரோதம், மதிமயக்கம், மற்றும் ராஜஸத்துக்குக் காரணமாகும் தன்மைகள் உண்டாகின்றன. அதே ஸத்வத்திலிருந்து தாமஸத்திற்குக் காரணமான தூக்கம், சோம்பல், மறதி, துயரப்படுதல், ஏமாறுதல் முதலிய மற்றப்பண்புகளும் தோன்றுகின்றன.

௫௬. பூர்விகப் பிறவியின் பதவியிலிருந்து அறிவுப் புலன்கள் நிதர்சனமாகி நோயினின்று விடுதலைசெய்யும்; சோம்பலினின்றும், மற்றுமுள்ள சரீரத்தின் தீயகூற்றினின்றும் விடுவிக்கும். பூதங்களின் ஸ்வபாவத்தைப் பொறுத்தே சரீரம். ஆகையால் அது அந்த ஸ்வபாவங்களின் தன்மைகளைப் பெறுகின்றன

௫௭. சப்தஞானத்தை அது பெற்று, கேட்டலினால்—நன்கு கேட்டலும், கருத்தில் பதியவைக்கத் துணை செய்தலும். நல்ல விஷயங்களைக் கேட்பதில் எழுச்சியும், தகுதியும், ஆகாச ரந்த்ரங்களை யறியவும் ஆற்றலுறுகின்றது.

௫௮. உயர்த்தல், தாழ்த்தல், சுருக்கல், இயங்கல், விரிதல் இவ்வைந்து செய்கைகளும் வாயுவின்-திரவணைப்பால்—வாயுவால்—உண்டாகின்றது.

௫௯. ப்ராணன், அபானன், இன்னும் வ்யானன், ஸமானன், உதானன், நாகன், கூர்மன், க்ருகரன், தேவதத்தன், தனஞ்செயன் இவை பத்தும் வாயுவின் விகாரங்களாம்.

௬0. இவைகளுள் முதன்மையானது ப்ராணனாகும். அஃது நாபீகமலத்தின் கீழே தன்னிடத்தைக் கொண்டுள்ளது.

சுக. வாயினூடேயும், நாசித்வாரங்களிலும், நாபியின் கீழும், இதயக் கமலங்களிலும், பேச்சுக் (சொல்) குரிய நாடிநரம்புஸ்தானங்களிலும், உச்சவாஸம், நிச்வாஸம் இவற்றிலும் ப்ராணன் வெளியிடப்படுகின்றான்.

சுஉ. அபாநனோ குதத்திலும். மேட்ரத்திலும், கக்ஷத்திலும், விலாக்களின் கீழும், அடிவயிற்றிலும் நிலைத்திருப்பான்.

சுங. அதன் தொழில் நீரைக் கழித்தல், மலத்தைத்தள்ளுதல், முதலியனவாம். வியாநன் கண்ணிமைகளிலும், செவிகளிலும், மூட்டுக்களிலும், கக்ஷங்களிலும், மூக்கின்னுனியிலும் விளங்குவான்.

சுச. அந்த பிராணனையும், அபாநனையும், உள்ளிடவும், வெளியிடவுமான செய்கைகளில் நிதானிக்கின்றது. வியாநனோ சரீரமுற்றும் அக்நியுடன் சேர்ந்து சூழ்ந்துள்ளான்.

சுரு. உஎ000 நாடிகளிலும் வியாபித்துக் கொண்டு உண்ணும் உணவின் ஸத்தை க்ரஹிப்பதும், பருகியவற்றின் பயனைப் பெறுவதும், உடல் வளர்ச்சியைப் புரிகின்றதும் ஸமாநன் தொழிலாம்.

கூகூ உதானனே பாதங்களிலும், புஜங்களின் சேர்க்கை பாகங்களிலும் நிலைபெற்று, தூக்கல், இயக்கல், இறத்தல் முதலிய தொழில்களைச் செய்யவல்லான்.

கூஎ. இந்த ஐந்து வாயுக்களும் நாகனோடு துவங்கி, தோல் முதலிய மற்ற தாதுக்களின் அதீனத்தில் உள்ளன. எனவே வாயிலெடுத்தல், விழித்திருத்தல், உருத்தல் (நிலையிடல்) முதலியவற்றை இவை செய்யும்.

கூஅ. சோம்பல், வீக்கம் முதலியனவற்றையும் செய்யும். தேஜஸிலிருந்து நேத்ரமும், ஒளியும், பித்தமும், ஜீரணமும், பொலிவும், கோபமும், அமைதியின்மையும், உஷ்ணமும், வீரியமும், காந்தியும், நுண்மதியும் உண்டாகின்றன.

கூகூ அப்புவிலிருந்தோ சுவையறிவும், தண்மையும், நெய்மையும், நேர்மையும், வியர்வையும், மூத்திரமும், மென்மையும்-அச்சிசு பெறுகின்றது.

௪0. மண்ணிலிருந்தோ ; முகரும் அறிவும், கந்தமும், அசையா நிலையும், துணிவும், பரபரப்பும், உதட்டு ரோமமும், கேசமும், நகமும், பற்களும், எலும்புகளும் மற்ற முரடான உறுப்புக்களும் சிசு அடைகின்றது.

எக. இவ்விதம் உண்டாகும் அவைகள், ஆகாசம், தாதுக்கள், வாதம் இவற்றின் தன்மை-களைப் பொருத்துள்ளன.

எஉ. ஸாத்விகசரீரங்கள் எழுவகைப்படும். ப்ரஹ்மன், இந்திரன், யமன், வருணன், குபேரன் ரிஷிகள், கந்தர்வர்கள் என்பனவாம்.

எங. ராஜஸசரீரங்கள் அறுவகைகளாம், அவைகளாவன — பிசாசங்கள், ராக்ஷஸர்கள். அஸுரர்கள், ஸர்பங்கள், பிரேதங்கள், பக்ஷிகள், என்பன.

எச. தாமஸ சரீரங்கள் மூன்று வகைப்படும். என்னையோ? மிருகம், மத்ஸ்யம் (மீன்) கஜம் (யானை) என்றுராகலின். அவற்றை விளக்க விரிவஞ்சி விடுத்தோம்.

எரு. சரீரம் ஆறு பகுதிகள் கொண்டவை. முறையே தலை, கை, கால்கள், இடை என்பவை அவை. வேறு சிலர் இன்னமும் சிறு பகுதிகளை-யும் சேர்த்துக் கணக்கிடுகின்றனர்.

எசா பாஸிநீ (விளக்கம்) லோஹிநீ (கெட்டி) ச்வேதா (வெளுப்பு) தாம்ரா (இளஞ் சிவப்பு) வேதிநீ (மெலிவு) ரோஹிணீ (வளர்ச்சி) மாம்ஸ-தரா (கொழுப்பைச் சுமத்தல்) முதலிய எழு-

வகைத் தோல்களும் ஏழு கலைகளாம். நுண்நரம்புகளால் இவை பிணைக்கப்பட்டு சரீரத்தின் அக்நியால் ச்லேஷ்மமும், கர்பமும் முற்றச் செய்விக்கின்றன. அத்தகைய அக்நி ஸப்த (ஏழு) தாதுக்களுக்கிடையே உள்ளது.

௭௭. தாதுக்களுடைய எல்லைகளைக் கூற ஒரு மரத்தினடிப் பகுதியை ஒப்பிட்டுக் கூறுவர். முதல் வகைத் தாது தசையைச் சுமப்பதாகும். அதில் குருதியின் பாய்குழலும், வடிகுழலும் உள்ளன.

௭௮. பின்னிய தாமரை நாளங்களே போல நரம்பு ஓட்டங்களும் வளர்கின்றன. மற்றத் தோல் அடுக்குகளோ, ரத்தம், கொழுப்பு, ச்லேஷ்மம், அமிலம், பித்தம், சுக்லம் இவற்றைச் சுமப்பவையாம்

௭௯ உள்ளீடான தோலடுக்குகளினூடே விளங்கும் தாதுக்கள் எழுவகைப்படும். தோல், ரத்தம், மாம்ஸம், கொழுப்பு, ச்லேஷ்மம், எலும்பு, சுக்லம் என்பன அவை. இவற்றுள் தோலைப்பற்றிக் கூறினோம்.

௮௦. ஜாடராக்கினி உணவை ஜீரணம் செய்து குருதியை உண்டாக்குகின்றது. தத்தமக்குரிய தோலடுக்குகளிலிருந்து தோன்றும் தாது ஸம்பந்த-

மான தேஜஸால் மற்றவைகளும், குருதியால் மற்ற தாதுகளுக்கும் உண்டாக்கப்படுகின்றன.

அக. முறையே; ரக்தாசயம், சுக்லாசயம், ஆமாசயம், பக்வாசயம், பித்தாசயம், ச்வாஸாசயம், மூத்திராசயம் என்பன இவற்றின் நிலையங்களாம்.

அஉ, அங. எட்டாவதாகப் பெண்களுக்கு பித்தாசயத்துக்கும் பக்வாசயத்துக்கும் இடையிலுள்ளது கர்பாசயம். சுத்த சுக்லம், சுத்த ரத்தம், இவற்றாலாய பத்மாகாரமான இதயமாம் ஓர் உறுப்பு உள்ளது. அஃது பித்தாசயத்துக்கும், மண்ணீரலுக்குமிடையே கீழ் நோக்கியவாறு மலர்ந்துள்ளது தமஸினால் (அறியாமையாம் இருள்) மறைந்துள்ள ப்ரஹ்மனின் இருப்பிடமாகும் இஃது.

அச. அவ்விதயம் தன்னிலையிலே மூடி ஓய்ந்தால் ஆத்மா உறங்குகின்றது. அஃது விழித்துத் தொழில் புரிந்தால் ஆத்மா விழிப்படைகின்றது. துயிலோ, ஸ்வப்நம், ஸுஷுப்தி என இருவகைப்படும்.

அரு. புறத்தே யுள்ள இந்த்ரியங்கள் இதயத்தைச் சூழ்ந்தபோது மநமானது தனித்து விழித்-

திருக்கிறது இதையே ஸ்வப்நம் என்பர். அதே மநம் ஞாநேந்த்ரியங்களுடன் ப்ராணனில் ஒன்றிவிட்டால் அதுவே ஆத்மா உறக்கமாகும்

அரு. தன்னதும் தனக்கே உரியதுமான பரமாத்மாவினிடத்தில் ஒன்றி லயித்த நிலையே முற்கூறிய உறக்கம். எனவே இந்நிலையை அறிஞர் ஜீவன் தன்னைத்தான் ஒளித்துக் கொண்டனன் என்பர்.

அங. இரு செவிகள், இரு நேத்ரங்கள், இரு நாசித்வாரங்கள், வாய், ஆஸநம், லக்ஷ்யம் இவ்வொன்பதும் மலங்களை வெளியேற்றும் நவத்வாரங்களாம்-மனித சரீரமென்னும் வயலின் வடிகால்கள். பெண்களுக்கோ இன்னும் மூன்று உபரி (அதிக) யாயுள்ளன. அவை இரு கொங்கைகளும், லக்ஷ்யத்திலே சூதகக் குருதி வெளிப்படும் நிமித்தம் அமைந்துள்ள உறுப்பு ஒன்றுமாகும்.

அஅ எலும்பு, நரம்பு, நாடி, தசை இவைகளிலே பதினாறு ஜாலங்கள் (வலைகள்) உள்ளன. கைகால்கள் இரண்டிலும் முறையே இரண்டிரண்டு கூர்ச்சங்கள் (முடிச்சுகள்) உள்ளன. பிடரியிலும், குண்டிக்காயிலும் அவ்வித முடிச்சுக்கள் உள்ளன.

அகூ. இரு புறத்திலும், நான்கு தசைநார்கள் முதுகந் தண்டிலுள்ளன. கூறிய நுண்ணூசிகளே போன்ற ஸீவநிகள் என்னும் உறுப்புக்கள் தலையில் ஐந்தும், நாக்கில் இரண்டும், லிங்கத்தில் ஒன்றுமாக உள்ளன.

கூ0. ஸமஅளவுள்ள எலும்புகளும், உடலை ஸமமாக வைத்திருப்பவைகளுமானவை பதினுன்கே என்றும், மற்றும் சிலர் பதினெட்டென்றும் உரைப்பர். உடலில் முன்னூற்று அறுபது (௩கூ0) எலும்புகள் உள்ளன.

கூக. அறிஞர் எலும்புகளை, வளையங்கள், கபாலங்கள், கூறிய முனையுடையவை, மெலிந்து துவண்டு கொடுப்பவை, நீண்டவை எனப் பாகுபாடு செய்துள்ளனர்.

கூ௨. இவைகளிலே ஸ்ரீதந்வந்தரியோ முன்னூறு எலும்புகளே உடலிலுள்ளன என்கிறார். சடலத்திலே இருநூற்றுப் பத்து (௨க0) எலும்பு மூட்டுகள் உள்ளன.

கூ௩. கொத்துப் போன்ற கோரகங்களும், (மொட்டுக்களும்) இடையிடையே, பின்னிய நுண்ணணங்களும், தையல் போன்ற ஸீவநிகளும், குதிரையா இயங்கும் கருவிபோன்ற உலூகலங்

களும், (உலக்கை) கோளம் போன்ற மண்டலங்களும், பறவைகளின் அலகுகளே போன்ற வாயஸதுண்டங்களும் ஆக இவ்வகைகளே எலும்பு மூட்டுக்களாம்.

௧௪. இவ்வண்ணம் முனிச்ரேஷ்டர்களால் அஷ்டாங்கங்களாகக் (எட்டு அவயவம்) குணிக்கப்பெற்றுக் கணக்கிடப்பட்டுள்ளன. தசை, நரம்புகள், நுண்ணரம்புகள் இவற்றோடேயும் உள்ள எலும்பு மூட்டுக்கள் இரண்டாயிரம் (௨000) என்பர்.

௧௫. நரம்புகளுள் தொள்ளாயிரம் (௯00) முக்கியமானவை. அவை நான்கு வகைப்படும். என்னையோ? விரிபவை, நிலையாயுள்ளவை, பின்னிப் பரவினவை, நுண்மையானவை என்பர் ஆதலின்.

௧௬. நீரின் மீதுள்ள மிதவைக்கு மிதமிஞ்சிய பளுவைச் சுமக்க வலித்துள்ள கயிறுகளே போல இவ்வுடலையும் நூற்றுக்கணக்கான நரம்புகள் பிணைத்துள்ளன.

௧௭ ஞானிகள் தசைப்பிண்டங்கள் ஐந்நூறு (௫00) உள்ளன என்பர். பெண்களுக்கு இப்பிண்டங்களில் இருபது (௨0) அதிகம் என்பர்.

இவற்றுள் இருபது இருஸ்தநங்களிலும் உள்ளன. அவை யுவதிப் பருவத்தில் விரிவடைகின்றன.

௯அ. அல்குலில் பத்துப் பிண்டங்கள் உள்ளன. இவைகளில் இரண்டு வெளியீடாக விரிந்தும் உள்ளன. அவ்விதமே கர்பமார்கத்தில் மூன்றும் உள்ளன.

௯௯. சங்கினது சுழிபோல மூன்று வட்டங்களுள்ளது ஸ்த்ரீ யோநி. இவற்றுள் மூன்றும் வளைவுள் கர்பாசயம், பித்த ஜீரண ஸத்து நிலையங்களிடையே உள்ளது.

௧00. ரோஹிதம் என்ற மீனைப்போல ஓர் தசைப்பற்று ஆண்டுள்ளது. அங்கே மற்றும் மூன்று பிண்டங்கள் சுக்லசோணிதத்தை அநுமதித்தும், கருப்பையை அரண் செய்தும் இயங்குகின்றன.

௧0௧. எனவே நரம்பு நுண்மங்கள் இருபத்தொன்பது லக்ஷத்து ஐம்பதினாயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தாறு (௨௯,௫0,௯௫௬). சரீரத்தில் உள்ளன.

௧0௨. இதயத்துள்ள ஓஜஸை (வீரியத்தை) எடுத்துச் செல்லும் பத்து (௧0) முதன்மையான நாளங்களும் உள. இரண்டு அங்குலங்கள், ஒரு

அங்குலத்தின் பகுதிகள் ஒரு யவம். (ஒரு அங்குலத்தில் ⅛) அதன் பின்னமாகும்

கoரு. மரத்திலைகளில் பின்னிய நரம்பு வலைகளைப்போல அவை பரந்து விரிந்து விளங்கும். அவ்விதமுள்ளவைகள் எழுநூறு (எOO) எண்ணிக்கைகளாம்.

கoச. அவற்றுள், சுவையுணரவும், சொல்லுக்குக் காரணமாயும் இரண்டு நாவிலுள்ளது முகரவும், மணபேதத்தை யறியவும் நாசியில் இரண்டும், விழிப்பும், துயிலும் கொண்டு நேத்திரங்களில் இரண்டும் உள்ளன.

கoரு. ஒலியையும், அதன் பொருளையும், உணரும் வகையால் இரண்டு செவியிலுள்ளன. இஃது ஸ்ரீ சார்ங்கதேவரால் சொல்லப்பட்டது. உள்வீடான நுண்ணரம்புகளில் ஸத்தை எடுத்துச் செல்பவை இருபத்து நான்கு (உச) ஆகும்.

கoசு. வரப்புக்களுள்ள வயலைப்போல சரீராண்டம் முற்கூறிய நரம்புகளின் வளர்ச்சியால் வளமடைகின்றது. அவை ஒரு சக்ரத்தின் குடத்திலிருந்து செல்லும் ஆரங்கள் போல நாபீகமலத்திலிருந்து விரிந்து பரந்துள்ளன.

க0எ. மேலோங்கிப் பத்தும், (கூ0) கீழ் நோக்கிப் பத்தும், (க0) பக்கவாட்டில் நான்கும் (ச) உள்ளன. மேலோங்கிய பத்தும் இதயத்தை யடைந்து மீண்டும் ஒவ்வொன்றும் மும்மூன்ருகப் பிரிகின்றன.

க0அ. அவைகளுள் நான்கு ; வாத-பித்த-கப-ரஸத்தை வெளியிடுகின்றன. சப்தம்-ரூபம்-ரஸம்-கந்தம் இவற்றை முற்கூறிய நான்கும் உணருவதில் தொழில் புரிகின்றன.

க0கூ. மொழிதல், எக்காளமிடல், துயிலல், விழித்தல், அழுதல் இவற்றை பிற நான்கும் விளை-விக்கின்றன. ஆண்களுள் இரண்டு சுக்லத்தை-யும், பெண்களுள்ளே ஸ்தந்யத்ரவத்தையும் (பாற்படுநீர்) பாயச் செய்கின்றன.

ககO. கீழ் நோக்கிய பத்தும் (கO) கூட மூன்று மூன்ருகப் பிரிந்துள்ளன. அவை பக்குவா-சயத்திலே தனித்தனியே அமைந்துள்ளன. அவற்-றுள் பத்து வாதம் முதலியவற்றைப் பாய்ச்சுகின்-றன.

ககக இரண்டு நுண்ணரம்புகளோ திரவத்-தின் அதீநமாய் (எண்ணெய்ப் பொருள்) கரைந்-துள்ள உணவை எடுத்துச் செல்லுகின்றன.

இரண்டு. வியர்வை நீரையும்; இரண்டு சிறுநீரையும், சக்தி (பலம்) யையும் வஹிக்கின்றன. அவைகளே பெண்களின் ருதுகால வெளியீட்டையும் செய்கின்றன.

கசஉ. திரவப் போக்குகளை இரண்டு ஒழுங்கு செய்கின்றன. உள் சுத்தியையும், வெளியேற்றத்தையும் இணைந்த இரண்டு செய்கின்றன. வியர்வையை எட்டு நுண்ணரம்புகள் வெளியாக்குகின்றன. பக்கவாட்டிலுள்ளவைகளும் பல வகைப்படும்.

கசங. அவற்றின் முகவாய்கள், சர்மத்வாரங்களில் உள்ளன. வியர்வையை வெளியேற்றும் நிமித்தமும், தைலங்களின் ஸத்துக்களை உள்ளே அநுமதிக்கும் நிமித்தமும் அவ்விதம் உள்ளன.

கசச, சரீரத்திலுள்ள மர்ம நிலைகள் நூற்றேழு (க0எ) என அறிஞர் கூறுவர். உடலிலே மூன்றரைகோடி உரோமங்கள் உண்டு. தாடியும் முகத்திலுள்ள கேசமும் மூன்று லக்ஷங்களாகும்.

கசரு. நுண்நரம்புகளின் சக்தியினாலே அவைகளையும், தாடிகள் முககேசங்கள் இவற்றையும் கணக்கிட்டு ஐம்பத்து நான்குகோடியே அறுபத்தேழரை லக்ஷங்கள் எனவும் கூறுவர்.

௧௧௫. நரம்புகளும், உரோமங்களும் ஸந்திக்கும் இடத்திலேயுள்ள நீரின் அளவைக் கூறுவாம். பத்து அங்கை நீர்களும், ரஸத்திலே (உணவுச் சத்திலே) ஒன்பது உள்ளங்கைளும் உள்ளன.

௧௧௭ ௧௧௮. எட்டு சிராங்காய் (கைநிறையளவு) ரத்தமும், ஏழு அங்கை கழிநீரும், ஆறு உள்ளங்கை கோழையும், ஐந்து உள்ளங்கை பித்தநீரும், நான்கு சிரங்கை சிறுநீரும், மஜ்ஜை, மேதைபோன்று கொழுத்த திரவமாயுள்ள வஸா என்ற நீர் மூன்று அங்கைகளும், கொழுப்பு இரண்டு உள்ளங்கைளும், எலும்பின் இடையிலுள்ள சதைக் கொழுப்பானது ஒரு உள்ளங்கை என்றும் கணக்கிடப்படுகின்றன. தலையிலுள்ள கொழுப்போ அரை உள்ளங்கையாகும்.

௧௧௯. முற்கூறியவாறு சரீரத்தின் சிறு பகுதிகளின் சுருக்க விளக்கத்தைக் கொடுத்துள்ளோம். ஆனால் இவ்விஷயங்கள் விரிவாக வேண்டுமானால் அறிஞர்கள் நம்மால் எழுதப்பெற்ற *அத்யாத்மவிவேகம் என்ற நூலில் காண்க.

௧௨0-௧௨௧. லிங்கத்திற்கும் கீழ்நோக்கிய நாளங்களுக்கும் இடையே நான்கு இதழ்களோடு

*இந்நூல் இன்னம் அகப்பட்டிலது.

கூடிய ஆதாரம் என்ற சக்கரம் (நிலை) உள்ளது. பரமம் (உயர்ந்தது) ஸஹஜ: (இயல்பானது) வீராநந்த: (சௌரியமும் ஆநந்தமும்) யோகாநந்த: (யோகமும் - சேர்க்கையும் - ஆனந்தமும்) ஆகிய இன்பங்கள் ஈசாநதிக்கிலுள்ள ஒன்றிலிருந்து ஆரம்பித்து முறையே நான்கு இதழ்களாலும் பலன் அளிக்கின்றன. ஆதாரகமலத்திலேயே ப்ரஹ்மசக்தி யென்னும் குண்டலிநீ யுள்ளது.

கூஉஉ-கூஉச. இஃதோ ப்ரஹ்மரந்த்ரம் வரையும் நேரே சென்று அழிவற்றத் தன்மையை ஜீவனுக்களிக்கின்றது. ஸ்வாதிஷ்டாநசக்ரமோ லிங்கத்தின் ஆரம்பத்தில் ஆறு இதழ்களுடன் உள்ளது. இவற்றினின்றும், கிழக்கே யிருந்து துவங்கி முறையே அடக்கம், கொடுமை, செருக்கழிதல், திகைத்தல், அவமதித்தல், தன்னிலையழிந்து மெய்மறத்தல் முதலிய உண்டாகின்றன. காமத்தை (இச்சை) எழுப்பு நிலையமாக இஃது உள்ளது. நாபிகமலத்திலே பத்து தளங்களுடன் மணிபூரகம் என்ற சக்கரம் உள்ளது.

கூஉரு. இங்கேயிருந்துதான் தூக்கம், தாபம், பொறுமை, பிறரது குற்றங்காணல், வெட்கம், அச்சம், கருணை, மோஹம், அசுத்தம், துயரம்

என்பவை முறையே கிழக்கிலிருந்து உண்டா-கின்றன.

கஉகூ-கஉஅ. இந்த மணிபூரகமே ஸூரியனின் நிலையுமாகும். ஹ்ருதயத்திலே ப்ரணவாகாரமாக (ஓங்கார வடிவாக) சிவபெருமானின் வணக்க இடமாகிற அநாஹதசக்கரம் உள்ளது. இது பன்னிரண்டு இதழ்களைக் கொண்டதெனக் கூறப்-படும் இயக்கத்தின் ஒடுக்கமும், பால் வேற்றுமை-களைத் தோற்றுவதும், அநுதாபத்தையும், அபி-லாஷையையும், ஒளியையும், சிந்தைக் கதிர்களின் பெருக்கத்தையும், வேட்கையினையும், பெருமை சிறுமையற்ற நிலையையும், தாம்பிகத்தையும், குன்-றிய நிலையினையும், பாகுபடுத்தலையும், தன்னலந்-துய்ப்பதையும், கீழ்பாலிலுள்ள இதழினின்று துவங்கிப் பலனளிப்பவைகள் முற்கூறியவைகள்.

கஉகூ. ஆத்மன் இத்தன்மைகளால் பூர்த்தி-யடைகின்றான். பதினாறு இதழ்களுடன் கூடிய விசுத்தி என்ற நிலை நெஞ்சகத்திலே (தொண்டை) உள்ளது. இவ்விடமே பாரதீதேவீ தன் கோயிலைக் கொண்டுள்ளாள்.

கடுO. ஆண்டு, பிரணவம், (ஓங்காரம்) உத்-கீதம், (உயர்ந்த இசை) இவற்றின் அங்கங்களா-

கின்ற ஹும்பட், வஷட், ஸ்வதா, ஸ்வாஹா, நம:, அம்ருதம், ஷட்ஜத்துடன் துவங்குகிற ஸப்த (ஏழு) ஸ்வரங்கள், விஷமும்,

௩௩௧. ஆக இந்தப் பதினாறு ஒலிக்குறிகளும், இவற்றினின்று ஆத்மனுக்குக் கீழ்பாலுள்ள இதழி-னின்றும் முறையே கிடைக்கின்றன. பன்னிரண்டு இதழ்களுடன் கூடி நாவினடியிலே லலநம் என்ற சக்கரம் உள்ளது.

௩௩௨. மதத்தையும், மானத்தையும், நட்பை-யும், சோகத்தையும், துயரப்படுதலையும், கஞ்சத்-தன்மையையும், அமைதியின்மையையும், தெளியா மயக்கத்தையும், அலைமடிப்புக்களையும், (அலை-போன்றுள்ள பசி, தாகம், சோகம், மோஹம், ஜரை, மரணம் முதலிய) சிரத்தையையும், மகிழ்-வையும்,

௩௩௩. மேலிட்டு மறைத்தலையும், இப்பன்னி-ரண்டு இதழ்களும் கீழ்பாலிலிருந்து முறையே ஜீவனுக்குப் பலனளிக்கின்றன. கண்ணிமைகளின் இடையே மூன்று இதழ்களுடன் கூடிய ஆஜ்ஞா சக்கரம் காணப்படுகின்றது. ஆனால் அவற்றின் பலன்களோ;

௩௩௪. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களை

முறையே உருவகப்படுத்துவனவாகும். அப்பால் ஆறு இதழ்களுடன் கூடிய மனஸ்சக்கரம் உள்ளது. டைய பலன்களோவெனில்;

கரு௫. துயில், சுவையநுபவம். கந்தாநுபவம், நிறமுணர்தல், ஸ்பர்சாநுபவம், சப்தாநுபவம், இவைகள் கீழ்பாலிருந்து முறையே உண்டாகின்றன.

கரு௬. அதற்கப்பாலும் கூட பதினாறு இதழ்களுடன் கூடி ஸோமசக்ரம் சொல்லப்படுகிறது. அந்தப் பதினாறு இதழ்களும் சந்த்ரனின் பதினாறு கலைகளையும் குறிக்கின்றன. அவைகளோ;

கரு௭-கரு௮. க்ருபை, பொறுமை, நடுப்போக்கு, தைர்யம், வைராக்யம், தாரணை, ஸந்தோஷம், ஹாஸ்யம், புலகாங்கிதம், (மயிர்க்கூச்செறிவு) த்யானத்திலுண்டாகும் கண்ணீர், (ஆநந்தபாஷ்யம்) அமைந்த அடக்கம், காம்பீர்யம், முயற்சி, அழுக்கற்றநிலை, உதாரத்தன்மை, ஏகாக்ரம் முதலிய ஜீவனில் நிலைத்துள்ள தன்மைகள் கீழ்பாலிருந்து முறையே துவங்கிப் பலனளிக்கின்றன.

கரு௯ அம்ருதத்தை வஹிக்கின்ற ஸஹஸ்ராரம் என்ற ஆயிரம் இதழ்களுள்ள சக்ரம் ப்ரஹ்மரந்த்ரத்திலே அமைந்துள்ளது அதைது

அமுதத்தை நாபீநாளங்களுடே பாய்ச்சி வளர்ப்ப-தாகும்.

கசo. இனி ஜீவனே அநாஹதசக்ரத்தின் கீழ்பாலிலிருந்து, எட்டு, பதினொன்று, பன்னி-ரண்டு இவ்விதழ்களில் நிலைக்கையிலே தான் இசை (ஸங்கீதம்) பண் முதலியவற்றின் வளர்ச்சியை அடைகிறன்.

கசக-கசஉ. அநாஹதசக்கரத்தின் நான்கு, ஆறு, பத்து இவ்விதழ்களில் நிலைத்த ஜீவனுல் இசைக்கலைகள் அழிக்கப்படுகின்றன. எனி-னும் விசுத்திசக்கரத்தின் எட்டாவதும் மற்ற இதழ்களின் அதீநத்திலோ இசை முதலியவை அந்த ஆத்மாவுக்கு முயற்சியால் ஸித்திக்கும். விசுத்தியின் 'பதினருவது இதழ் இசைக் கலையை யழிப்பதாகும் லலநாசக்கரத்திலே பத்து, பதி-னேராவது இதழ்களிரண்டும் இசையின் வெற்-றியை அளிப்பதாகும்.

கசங. ஒன்று, நான்கு, ஐந்து இவ்விதழ்கள் இசையழிப்பவை என்பதை அறிஞர் உணருவர். அமுதத்திலே அமுந்தினவனே போன்று ஜீவன் ப்ரஹ்மரந்த்ரத்திலே நிலைப்பாறுயின் மிகுந்த நேர்த்தியுடன் ஸகல விஷயங்களிலும்,

௬௪௪. முற்றுவிக்கும் ஆற்றலுடன் கூட இசை முதலிய கலைகளிலும், நிறைந்த புலமையைப் பெறுவன் என்பது திண்ணம். இவைகளால் எஞ்சிய இதழ்களிலோ, மற்றச் சக்ரங்களிலோ நிலைத்தால் ஜீவன் என்றுமே இசைக்கலையில் ஸித்திபெறுன்.

௬௪௫. ஆதாரசக்ரத்திற்கு இரண்டு விரற்கடை மேலேயும், மலருக்கு இரண்டு விரற்கடை கீழேயும் சரீரத்தின் நடுக் கூறு உள்ளது.

௬௪௬. உருக்கிய தங்கம் போலும் ஒளிருவதாகும் அஃது. அந்தச் சக்கரத்தினின்று ஒன்பது அங்குலங்கள் நீங்கி மெலிந்து நீண்ட அக்நிசிகை அமைந்துள்ளது.

௬௪௭. சரீரத்தின் விரிவுக்குக் காரணம் காந்தம். ஆணி வேர் போன்றது அவ்விடமேயாம். நான்கு அங்குலங்கள் உயரமும் நீளமும் உடையது அஃது. பழம் பெருமக்கள் இஃதையே ப்ரஹ்மக்ரந்தி யெனவும் அழைப்பர்.

௬௪௮. எனவே அதன் நடுவே தான் பன்னிரண்டு இதழ்களுடன் நாபீகமலம் சிலந்திக் கூட்டில் சிலந்தியே போல உள்ளது. ஈண்டு இந்த ஜீவன் சுற்றித்திரிவான்.

௧௪௯. கயிற்றின் மேலே சென்று இறங்கும் ஒரு கழைக் கூத்தனைப் போல, ஜீவனும் பிராணனோடு ஸுஷும்ணையினூடே ப்ரஹ்மரந்திரம் வரை ஏறிப்போய் மீண்டும் கீழிறங்குகிறான்.

௧௫௦. ப்ரஹ்மரந்தரம் வரையிலும், கந்தத்திலிருந்து விரிந்துள்ள ஸுஷும்ணையைச் சூழ்ந்த நாடிகளே ப்ரஹ்மரந்திக்கும் கந்தமாக (வாயிலாக) அமைகின்றன. இவற்றின் கிளைகளாலேயே சரீரம் விரிவடைகின்றது

௧௫௧. அவைகளோ எண்ணிறந்தவை. அந்த நாடிகளுள் முக்கியமானவை பதினான்காகும்

௧௫௨. ஸுஷும்ணா, இடா, பிங்களா, குஹூ, ஸரஸ்வதீ, காந்தாரீ, ஹஸ்திஜிஹ்வா, வாருணீ, யசஸ்விநீ, விச்வோதரா, சங்கிநீ, பிறகு, பூஷா, பயஸ்விநீ, அலம்புஸா என்பர்.

௧௫௩. அவற்றுள்ளே முதல் மூன்றும் இன்றியமையாதவை. இம்மூன்றனுள் ஸுஷும்ணையே மிகவும் முக்கியமானது. விஷ்ணு அதன் தேவதை. பேரின்பம் பயக்கும் முக்தி வழியிலே நிலைக்கச் செய்பவர் *

---

*மூலத்திலே வைஷ்ணவீ என்றும், முக்தி-மார்க்கா என்றும் இரண்டு பதங்கள் ஸுஷும்-

கடு௪. நூற்று நாற்பத்தேழாவது ச்லோகத்திலே கூறப்பட்ட கந்தத்தின் நடுவிலே இடது பாரிசமாக இடாநாடி விளங்கும். வலது பாரிசத்திலோ பிங்களாநாடி பேசும். முற்கூறிய இருநாடிகளிலும் ஸோமஸூர்யர்கள் ஸஞ்சரிக்கின்றனர்.

கடுடு. காலப்போக்கின் காரணகர்த்தர்களாய் முறையே அவர்கள் விளங்குகின்றனர். ஸுஷும்ணையே காலத்தை நசிக்கச் செய்வதாம். எனினும் ஸரஸ்வதியும், குஹூவும் ஸுஷும்ணையினுடைய இருபுறங்களிலும் நிலைத்துள்ளவையாகும்.

ணைக்கு விசேஷணமாகக்—அடைமொழியாக—கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு பதங்களுக்கும் பொருள் வருமாறு: வைஷ்ணவீ—விஷ்ணு ஸம்பந்தமானது. அல்லது விஷ்ணு ஸம்பந்தமான மாயா சக்தியாம். ஆகவே அச்சக்தியின் வடிவாய் ஸுஷும்ணை விளங்குகிறது.

முக்திமார்க்கா — முக்தியை - பேரின்பத்தைகொடுப்பது. அல்லது முக்தியைப் பெறுகிறவழி-அது ஆத்மாவாகும். ஆகவே ஆத்மஸம்பந்தமானது அல்லது அந்த ஆத்மாவுக்கு-அதிஷ்டானம்-இருப்பிடம்-ஆகவே அந்த ஸுஷும்ணையே ஆத்மாவுக்கு இருப்பிடமாகும்.

௧௫௬. பின்னும், முன்னும் இடாநாடிக்கு இருபுறமும் காந்தாரியும், ஹஸ்திஜிஹ்வையும் உள்ளன. அவ்வண்ணமே பிங்களைக்கு இருபுறமும் பூஷையும், யசஸ்விநீயுமுள்ளது.

௧௫௭. குஹூவுக்கும், ஹஸ்திஜிஹ்வைக்கும் மத்ய ப்ரதேசத்திலே விச்வோதரா நாடியுள்ளது. குஹூவுக்கும் யசஸ்விநீக்கும் நடுவிலே வாருணீ நாடியுள்ளது.

௧௫௮. பூஷைக்கும், ஸரஸ்வதிக்கும் நடுவிலே பயஸ்விநீயுள்ளது. சங்கிநியோ, காந்தாரிகைக்கும், ஸரஸ்வதிக்குமிடையே யுள்ளது.

௧௫௯. அலம்புஸையோ கந்தத்தின் மத்தியிலே உள்ளது. இவற்றில் இடாநாடியும், பிங்களா நாடியும் இடது வலது நாசித்வாரங்கள் வரையும் முறையே செல்லுகின்றன. மலரின் முகப்பெதிரில் குஹூ உள்ளது.

௧௬௦. நாவின் தூரம் வரை ஸரஸ்வதீ விளங்குகிறது. காந்தாரியோவெனில், பின்புறத்தை யடைந்து தோன்றுகிறது. இன்னமும் ஹஸ்திஜிஹ்வையோ இடக்கண் துவங்கி இடப்பாதத்தின் கட்டைவிரல் வரையிலும் விளங்குவதாம்.

நமசு. மேலும் வாருணீயோவெனில் சடலம் முழுவதும் வியாபித்துள்ளது. யசஸ்விநீயோவெ-னின் வலதுபாதப் பெருவிரல் வரையில் வியாபித்-துள்ளது. விச்வோதரா சரீரமுற்றும் விளங்கும்.

நமஉ. சங்கிநீ இடக்காது வரையும் விரிந்-துள்ளது பூஷையோ வலக்கண் வரை நீண்டுள்-ளது. மற்றோர்புடை பயஸ்விநீயோ வலக்காது வரையும் வியாபித்துள்ளது.

கூமந. லிங்கம் வரை அலம்புஸா விளங்கும். இத்தகைய ஸ்வாபாவிகத்தில் சரீரமுற்றும் மலத் தால் சூழப்பட்டதே யாகும்.

கூமச. ஞானிகள் யுக்தமான நன்னெறியி-ஞல் இகவின்பத்தையும், பேரின்பத்தையும் ஒருங்கே பெறுகின்றனர். ஆங்கு ஸகுணத்யாநத்-திஞல் ப்ரஹ்மனோடு கூட இகவின்பத்தையும், நிர்குணத் தியாநத்திஞல் ப்ரஹ்மனோடு கூட பேரின்பத்தையும் ஜீவன் எய்துகின்றான்.

கூமரு. மக்களுக்கு நிர்குணோபாஸனையால் பேரின்பத்தை ஏகாக்ரசித்தமில்லாமல் எய்துவது எளிதன்று. எனவே ஈண்டு மங்களவடிவான நாதமென்றும் அநாஹதத்தாலேயே எய்துவது மிகவும் எளிதாகும்.

கூசு. மானசீலர்கள், ஆசார்யர்களின் நற்றுணை கொண்டு அவர்களால் போதிக்கப்பட்ட மார்கத்தோடு அந்த ஆநந்தத்தை யடைந்தனர். அந்த அநாஹதநாதங்கூட ரக்தியில்லாது போனல் மக்களின் மனதைக் கூட ரஞ்ஜிக்க (மகிழ்வீக்க) முடியாததாகும்.

கூஎ. ஆகையால் நாம் ஆஹதநாதத்தையும், அதன் அமைப்பையும் விவரிப்பாம். என்னையோ? ச்ருதி முதலானவைகளின் ஸ்வர-கராம-மூர்ச்சநா-தாந-கூடதாநங்கள்வாயிலாக ஸங்கீதம் முழுவதையும் அஃது எழுப்புகின்றதாதலின், உலகிற்குப் பேரின்பம் பயப்பதாகலின், மக்களின் மனத்துக்கத்தைத் துடைப்பதாகலின், சுருதியின் காரணமாக ஆஹதநாதத்தை விளக்கும் வகையாகலின்.

பிண்டோத்பத்தி (உடற்கூற்றின் நிலை) என்னும் இரண்டாவது ப்ரகரணம் இவண் முற்றும்.

நாத-ச்ருதி-ஸ்வரங்கள் ௩.

௧. பேரானந்தமாயும், ப்ரஹ்மமுமாய் உலக-வடிவாய் ஸகல ஜீவன்களின் வாழ்வுமாகிய நாத-ப்ரஹ்மத்தை (ஒலிமயம்) நாம் வணங்குவோம்.

௨. நாம் முற்கூறிய நாதத்தை உபாஸிப்ப-தால், அந்த நாதவடிவங்களாயமைந்த ப்ரஹ்ம, விஷ்ணு, மஹேச்வரர்களையே உண்மையில் வழி-படுபவராவோம்.

௩. பேச விரும்பும் ஜீவன் மநதை உறுத்துகின்-ருன். மநம் சரீரத்துள்ள தீயைமூட்டுகின்றது. அத்-தீ உள் நிறைந்த ப்ராணவாயுவை அலைக்கின்றது.

௪. பின்னரே அவ்வளி, ப்ரஹ்மக்ரந்தி (அடி-வயிற்றுக்குக் கீழ் உள்ளது) *யிலின்றும், மேலோங்கி நாடிகளின் பாதையூடே வீசிக் கொப்-பூழ், இதயம், தொண்டை, சிரம், (தலை) வாய் இவ்விடங்களையுற்று வெற்றிகரமான ஒலிவடி-வாய்த் தோற்றுவிக்கின்றது.

௫. இவ்வைந்திடங்களிலும் நிலைத்த ஐந்து நாதங்களுக்கும் முறையே, *அதிஸூக்ஷ்மம், ஸூக்ஷ்-

---

*அதிஸூக்ஷ்மம்—யோகத்திலும், அமைதியிலும் செவிப்புலனுவது.

மம், புஷ்டம், அபுஷ்டம், க்ருத்ரிமம் எனப் பெயர்களும் உண்டு.

௬. ப்ராணவாயுவைக் குறிக்கும் 'நா' என்றெழுத்தும், அக்நியைச் சுட்டும் 'த' என்றெழுத்தும் ஒருங்கு சேர்ந்தே நாதம் என்றழைக்கலாயிற்று என்பர் அறிஞர்.

௭. முற்கூறிய நாதம் ஸாதாரணமாயிலே மூன்று வகைப்படும். ஹ்ருதயத்திலுள்ள அந்த நாதம் "மந்த்ரம்" எனப்படும். தொண்டையிலுள்ள அவ்வொலி "மத்யம்" என்ப. சிரஸிலுள்ள அந்த சப்தம் "தாரம்" என்று கூறப்பெறும். இவற்றின் வேறுபாடுகள் முறையே ஒவ்வொரு நிலைநாதமும் தத்தமக்குரிய முன்னைய நிலை-

---

ஸூக்ஷ்மம்—ஏகாந்தத்திலே தியானபூர்வத்தில் கேட்கப்படுவது.

புஷ்டம்—ஸ்தூல வடிவாய் பரயத்நத்தில் கேட்கவல்லது.

அபுஷ்டம்—சூந்யஸ்தூலவடிவாய் ப்ரயத்நத்தில் கேட்கவல்லது.

க்ருத்ரிமம்—மநம், அறிவு, உலகம், இம்மூன்றுமொப்ப ரஞ்ஜகத்தன்மை பெற்று பண்பாட்டுடன் புலனாவது.

நாதத்தை விட இருமடங்கு உரத்து ஒலிப்பனவாம்.

உதாஹரணம்—

ஹ்ருதயம்	தொண்டை	சிரஸ்
(க) + க ஸ	+ க (உ) ஸ	(உ + உ) ச ஸ

இந்த ஸாம்ய (ஸமான) விகிதமே மூன்று ஸ்தாயிகளிலும் மற்ற ஸ்வரங்களுக்கும் பொருந்தும்.

அ. அவ்விதம் செவிப்புலனாகும் ஒலி இருபத்திரண்டு வகைகளாம். செவிப்புலனாகல் பற்றி அவற்றை ச்ருதி என்பர். ஹ்ருதயத்திலே ஐக்யமாகி மேலோங்கு நாடிகள் இருபத்திரண்டு உள்ளன எனக் கணக்கிடப்படுகின்றது.

கூ. முற்கூறிய நாடிகள் குறுக்கீடாக அமைக்கப் பட்டுள்ளன. இவைகளுக்குள் நுழைந்து நிரம்பிய ப்ராணவாயு முற்கூறியவாறு மந்த்ரம், மத்யம், தாரம் இந்த ஸ்தாயிகளின் இருபத்திரெண்டு ச்ருதிகளையும் முறையே ஒன்றையடுத்து ஒன்றின் நிலைகளில் உரக்க ஒலிக்கச் செய்கின்றது.

௧0. இம்முறையிலே தொண்டை, சிரஸ் இவற்றினிடங்களிலேயும், இருபத்திரண்டு ச்ருதி-

களைப் பெறுகின்றோம். சுத்தவிளக்கத்துக்காக அவற்றை நாம் இரு வீணைகளின் உதவி கொண்டு விவரிப்பாம்.

கக. ஒன்றோடொன்று ஸமமாக இருக்கும்படி அவற்றின் நாதங்களை இரண்டு வீணைகளிலே ஸமதையாக ஒழுங்குபெறச் செய்யவேண்டும் இவ்விரு வீணைகளிலும் இருபத்திரண்டு தந்திகள் தனியே இருக்கவேண்டும்.

க௨-கங. அவற்றுள் முதலாவது தந்தி எவ்வளவு தாழ்ந்து ஒலிக்கக் கூடுமோ அவ்வளவு தாழ்ந்து ஒலிக்கச் செய்யப்படவேண்டும் இரண்டாவது தந்தியோ யாதொரு இடையொலியும் அறவே இல்லாமல் ஒரு சிறிது உரத்து ஒலிக்குமாறு அமைக்கப்படவேண்டும் அதனால் முற்கூறிய இரு ச்ருதிகளின் இடையிலே வேறு யாதொரு சப்தமும் கேட்க முடியாது தொடர்ந்தவைகளும், மேலே தொடருபவைகளும், தத்தம் முன்னைய ஒவ்வொரு ச்ருதியை விட உயர்ந்து ஒலிக்குமாறு இருத்தல் வேண்டும். அவற்றினின்று தோன்றிய நாதமே ச்ருதிகள் என்பதாம். இந்த இரு வீணைகளிலும் ஸ்வரங்களைக் குறிக்கப்பட வேண்டும்.

கச-கரு. அம்முறையிலே நான்கு ச்ருதிகளுடன் நான்காவது தந்தியிலே ஷட்ஜம் குறிக்கப்பட வேண்டும். பின்பு ரிஷபம் ஐந்திலிருந்து மூன்றுவதாகிற ஏழாவது தந்தியிலே மூன்று ச்ருதிகளுடன் நிலைக்கப்படவேண்டும். அடுத்த காந்தாரமோ இரண்டு ச்ருதிகளுடன் எட்டாவதிலிருந்து இரண்டாவதிலே அமைக்கப் பெறவேண்டும். அதன் பிறகு மத்யமம் நான்கு ச்ருதிகளுடன் பத்தாவது தந்தியிலிருந்து மேலே நான்காவது தந்தியிலே அமைக்கப்படவேண்டும்

கரு-கசு. அப்பால் பஞ்சமமோ நான்கு ச்ருதிகளுடன் பதினுன்காவது தந்தியிலிருந்து மேலே நான்காவது தந்தியிலே நிலைக்கும். பதினெட்டாவது தந்தியிலிருந்து இருபதாவது தந்தியிலே தைவதம் மூன்று ச்ருதிகளுடன் ஒலிக்கின்றது. முடிவாக இரு ச்ருதிகளுடன் நிஷாதம் இருபத்திரண்டாவது தந்தியிலே தோன்றுகிறது.

கஎ.

ச	எ	கூ	கந	கஎ	உ0	உஉ
ச (ச+ந)	(எ+உ)	(கூ+ச)	(கந+ச)	(கஎ+ந	(உ0+உ)	
ஸ	ரி	க	ம	ப	த	நி

௪, ௭, ௯, ௧௫, ௧௮, ௨௰, ௨௨ இந்த ச்ருதிகளின் தந்திகளை அமைப்பதால் தடையற்ற சுத்த-வீணையைப் பெறுகின்றோம். எனவே இன்னொரு வீணையை மாற்று வீணை யென்போம்.* இதன் மேலோ என்றால் தந்திகள் நகர்த்தப்படும்.

௧௮-௨௰. இதில் அறிஞர்கள் முன் வீணையின் மேல் போல தத்தம் நிலையைத் தொடர்ந்த தந்திகளின் மீது ஸப்த (ஏழு) ஸ்வரங்களை சுத்தவீணைக்குத் தொடர்பிலே கொண்டு நிறுத்த வேண்டும். இவ்வேழு ஸ்வரங்களும் பின்னரே மாற்று வீணையின் மீது ஒரு ச்ருதி குறைவாக ஒலிக்கும்படியும், இவ்விதமே மற்ற இயக்கங்களும் செய்யப்பட வேண்டும். இரண்டு ச்ருதிகளின் சேர்க்கையால் இந்த இரண்டாவது இயக்கத்திலே மாற்று வீணையிலே காந்தாரமும், நிஷாதமும் நிலைக்கின்றன. முறையே ரிஷபமும், தைவதமும், த்ருவவீணையிலே சேருகின்றன. மூன்றாவது இயக்கத்திலே சுத்த வீணையின் ஷட்ஜத்தையும், பஞ்சமத்தையும், மாற்று வீணையின் ரிஷபதைவதங்கள் பிரவேசிக்கும்.

---

* மாற்றுவீணை—அல்லது த்ருவவீணை.

உக. நான்காவது இயக்கத்திலே மாற்று வீணையின் ஷட்ஜ-மத்யம-பஞ்சமங்கள் முறையே சுத்தவீணையின் நிஷாத - காந்தார - மத்யமத்தை அடைகின்றன. இவ்வகையிலே இருபத்திரண்டு ச்ருதிகளிலே நான்கு இயக்கங்கள் உள்ளன.

உஉ, மாற்று வீணையின் ச்ருதியானது சுத்த-வீணையின் ச்ருதியோடு கலப்படும்பொழுது அதனுடைய குறிப்பிட்ட ஸ்தாயீ தெளிவாக (பாகுபாடுற) தெரிவிக்கப் படுகின்றது ஆனல் இன்னம் இதைக் காட்டிலும் ச்ருதிகளை இறக்குவ-தால் ரஞ்ஜகத்தன்மையை அழிக்குமாதலால் அவ்-விதம் செய்யப்படவில்லை.

உங. ச்ருதிகளினின்றும் ஸ்வரங்கள் தோற்ற-மளிக்கின்றன இவ்விதமான அவை எண்களில் ஏழு ஆகும். ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்ய-மம், தைவதம், நிஷாதம் என்ப.

உச. அவற்றின் பெயர்கள், ஸ, ரி, க, ப, ம, த, நி எனவும் கூறுவர், ஒரு ச்ருதியை-யடுத்து உடனே எது உண்டாகிறதோ, எது ம்ருதுவாய் (மென்மையாய்) உள்ளதோ, ப்ரதி-பலிக்கும் தோற்றமாய் எது உள்ளதோ, கேட்-போரின் மனதுக்கு மகிழ்ச்சியையும், ரஞ்ஜ-

கத்தையும் எது அருளுவதோ அஃது ஒரு ஸ்வர-மாம்.

௨௫. இந்த வழியிலே இப்பொழுது ஸ்வரத்-தின் தோற்றத்திற்கு நான்கு முதலான ச்ருதிகளே காரணமாகின்றன.

௨௬-௨௭. அவற்றுள் மூன்றுவது ச்ருதி முதலியவை எவ்வாறு குறித்த காலத்தில் முன்ன-தாகப் போய் ஸ்வரத்திற்குக் காரணமாகின்றன? நான்காவது ச்ருதி, மூன்றுவது ச்ருதி முதலியவை முன்னதின் அதீநத்துள்ளிருந்து ஸ்வரத்தோற்-றத்துக்கு காரணமாகின்றன. ஆகையால் முன்ன-தான ச்ருதிகளும் கூட இங்கு காரணங்களாகின்-றன. இவ்விதம் வகைகளாக உள்ளவை வரு-மாறு—தீப்தா, ஆயதா, கருணு, ம்ருது, மத்யா என்ற இவ்வைந்தும் ச்ருதிகளுடைய ஜாதிகளாகும்.

௨அ-௨௯. இவற்றுள் தீப்தா, ஆயதா, ம்ருது, மத்யா இந்நான்கும் ஷட்ஜத்திலுள்ளன. ரிஷபத்-திலோ, கருணு, ம்ருது, மத்யா இவற்றை அமைப்பர். காந்தாரத்திலோ, தீப்தா, ஆயதா இவற்றையும், மத்யமத்தில், தீப்தா, ஆயதா இரண்டுடன் ம்ருது, மத்யா இவ்விரண்டும் பொருத்தப் படுவனவாம்.

௬௦. ம்ருதுவும், மத்யாவும், ஆயதாவும், கரு-ணையும் பஞ்சமத்திலுள்ளன. தைவதத்திலோ கருணை, ஆயதா, மத்யா இவை வைக்கப்படுகின்றன.

௬௧. தீப்தா, மத்யா இவற்றின் வகைகளை நாம் பகுதிகள் என்போம். தீப்தாவோ நான்கு பகுதிகள் கொண்டது. தீவ்ரா, ரௌத்ரீ, வஜ்ரிகா, உக்ரா எனப் பாகுபடும்.

௬௨. ஆயதாவிற்கோ கீழ்காணும் ஐந்து வகைகள் உள் குமுத்வதீ, க்ரோதா, ப்ரஸாரிணீ ஸாந்தீபனீ, ரோஹிணீ என்பனவாம்.

௬௩. தயாவதீ, ஆலாபினீ, மதந்திகா என் மூன்று பிரிவுகள் கருணையில் உள்ளன. ம்ருதுவுக்-கோவெனில் ;

௬௪. மந்தா, ரதிகா, ப்ரீதி:, க்ஷிதி: என நான்கு பேதங்கள் உள. ஆனால் மத்யா என்ற ஜாதியோ சந்தோவதீ, ரஜநீ, மார்ஜநீ, ரக்திகா, ரம்யா, க்ஷோபிணீ என்று ஆறு வகைகளாக உள்ளன என்பர்.

௬௫. இனி நாம் ஸ்வரங்களில் இவற்றின் நிலைகளை விவரிப்போம். தீவ்ரா, குமுத்வதீ, மந்தா, சந்தோவதீ என்பவை ஷட்ஜத்திலே விளங்குகின்றன.

௩௬. தயாவதீ, ரஞ்ஜநீ, ரக்திகா இம்மூன்றும் ரிஷபத்திலே காண்கின்றன. ரௌத்ரியையும், க்ரோதத்தையும் காந்தாரம் கொண்டுளது

௩௭ வஜ்ரிகா, ப்ரஸாரிணீ, ப்ரீதி:, மார்ஜநீ இந்நான்கு ச்ருதிபேதங்களும் மத்யமத்தின் அதீ-நங்கள் க்ஷிதி, ரதிகா, ஸாந்தீபநீ, ஆலாபிநீ இந்-நான்கும் பஞ்சமத்திலே பொலிகின்றனவாம்

௩௮. மதந்தீ, ரோஹிணீ, ரம்யா, இவை மூன்றும் தைவதத்திலும், உக்ரா, க்ஷோபிணீ இவையிரண்டும் நிஷாதத்திலும் நிலைத்துள்ளன.

௩௯. இந்த ஸ்வரங்கள் தத்தம் ச்ருதிநிலைக-களின் பேதங்களையொட்டி மூவகைப்படும் என்-னையோ? மந்த்ர-மத்ய-தாரஸ்தாயிகள் என்பர் அவற்றை யாகலின். மாறுதலடைந்த நிர்பந்தத்-தால் அவை பன்னிரண்டு ஸ்வரங்களாகின்றன

௪0. ஷட்ஜத்தினுடைய மாறுதலில் ச்யுதம், (நழுவியது) அச்யுதம், (நழுவாதது) என இரு ஸ்வ ரங்கள் இரு ச்ருதிகளால் உண்டாகின்றன. இவ்-விதமே நிஷாதத்தின் ஸாதாரணத் தன்மையிலும் காகலியின் ஸாதாரணத் தன்மையிலும் அஃது உண்டாகின்றது.

௪௧. இந்த ஸாதாரணத் தன்மையின் விஷ-

யத்திலே ரிஷபம் ஷட்ஜத்தின் ச்ருதியை மீண்டும் எடுத்துக் கொள்ளுவதால் நான்கு ச்ருதிகளைப் பெறும் நிலையிலுள்ளது. அப்பொழுது அஃது ரிஷபத்தின் மாறுதல்—உருவாம்—அதாவது விக்ருதம் என்ப.

௩௨. ஸாதாரணகாந்தாரம் மூன்று ச்ருதிகளை கொண்டது. அது அந்தரத் தன்மையிலே நான்கு ச்ருதிகளைப் பெறுகின்றது என இருவகைகள் காந்தாரத்திலே காணப்படுகின்றன என்பர் ஐந்திரிபற்ற ஸ்ரீ சார்ங்கதேவர்.

௩௩-௩௫ ஷட்ஜத்தைப் போலவே மத்யமமும் இரண்டு வகைகளாகும். அவற்றை அந்தரம், ஸாதாரணம் என்பர். மத்யமக்ராமத்திலே பஞ்சமத்திற்கு மூன்று ச்ருதிகளுண்டு. பின்னர் கைசிகவிஷயத்திலோ அதில் மத்யமத்தின் ச்ருதியை எடுத்துக் கொண்டு நான்கு ச்ருதிகளைப் பெறுகின்றது. இவ்விதம் அது இரண்டுவகைகளாகின்றது. மத்யமக்ராமத்திலே தைவதம் மாறுதலடைந்த தோற்றத்திலே நான்கு ச்ருதிகளைப் பெறுகிறது. நிஷாதமோ, கைசிக-காகலி விஷயங்களில், முறையே மூன்றும் நான்குமான ச்ருதிகளைப்பெற்று மாறுதல் அடைந்த இருவகை-

களைப் பெறுகின்றது. இவ்விதம் கணக்கிடப்பட்டவை பன்னிரண்டு — விக்ருத — மாறுதலடைந்த ஸ்வரங்களாம்.

௪௬-௪௯. அவை ஏழு சுத்தஸ்வரங்களுடன் சேர்ந்த எண்ணிக்கையில் பத்தொன்பது ஆகின்றன. மயில், சாதகம், செம்மறி, க்ரௌஞ்சம், குயில், தவளை, யானை இவ்வேழு ப்ராணிகளும் முறையே ஷட்ஜத்தோடு துவங்குகின்ற ஏழு ச்ருதிகளை யுண்டாக்குகின்றன. ஸ்வரங்களோ நான்கு வகைப்படும். அவை: வாதீ, ஸம்வாதீ, விவாதீ, அநுவாதீ என்பனவாம். நடைமுறையிலே வாதீ இன்றியமையாத ஸ்வரமாகும். இரு ஸ்வரங்களுக்கிடையே பன்னிரண்டு அல்லது எட்டு ச்ருதிகள் இடைக்காலமாகும் தன்மையிருப்பின் அவை பரஸ்பரம் (ஒன்றுக்கொன்று) ஸம்வாதிகளாகும். மற்றவைகளைப் பொருத்து நிஷாதமும், காந்தாரமும், அல்லது ரிஷபமும், தைவதமும் மாத்திரமோ அல்லது இவ்விரண்டுமோ விவாதிகளாகும். அல்லது இவ்விரண்டினுள் ரிஷபமும், தைவதமும் கூட விவாதிகளாகும்.

௫௦ ஏனைய ஸ்வரங்கள் அநுவாதிகளாம். இவைகளுள் வாதீ ஓர் அரசனாக வர்ணிக்கப்படு-

5

கிறது. ஸம்வாதியோ இன்னதைத் தொடருவ-தாயிருந்து அதனுடைய அமைச்சன் போல் கூறப்-படுகிறது.

௫௧. விவாதியோ வாதிக்கு எதிரிடையாகி அறிஞர்களால் அது பகைவனாகக் கூறப்படுகிறது. அநுவாதியோ ஒரு ஊழியனைப்போல அரசன், அமைச்சன் இருவரையும் சேர்த்துப் பின்பற்றி ஸேவிப்பதாகும்.

௫௨. ஷட்ஜமும், காந்தாரமும், மத்யமமும் தேவவம்சத்திலே பிறந்தவை. பஞ்சமமோ பித்-ருக்களின் (தென்புலத்தோர்) வழியிலே வந்த-தாகும். ரிஷபமும், தைவதமும் ரிஷிகளின் வம்சத்திலே வந்தவையாம்.

௫௩. நிஷாதமோ அஸுரகுலத்திலே ஜநந-மெடுத்தது. ஷட்ஜம், மத்யமம், பஞ்சமம் இம்-மூன்றும் அந்தணராம். ரிஷபமும், தைவதமும் க்ஷத்திரியர்களாக அறியப்படுகின்றன. நிஷாதமும், காந்தாரமும் வைச்யர்களாக ஒப்பப்படுகின்றன.

௫௪. அந்தரகாகலிஸ்வரங்கள் சூத்ரர்களாம். அவற்றின் நிறங்கள் முறையே தாமரை, பிஞ்ஜரம் (சிறிது வெண்மை கலந்த மஞ்சள் நிறம்), ஸ்வர்ண-ரேகை, குந்தப்ரபை (மல்லிகை), இருள்,

௫௫. 'மற்றும், மஞ்சள், புள்ளிவாய்ந்த கபில-நிறம் என்பனவாம் இனி நான் அவற்றின் நிலை-யான இருப்பிடங்களைக் குறிப்பிடுவேன். ஷட்ஜத்-திலிருந்து முறையே துவங்கியுள்ள இவ்வேழு ஸ்வரங்களும், ஜம்பூத்வீபம், சாகத்வீபம், குசத்-வீபம், க்ரௌஞ்சத்வீபம், சால்மலித்வீபம், ச்வே-தத்வீபம்,

௫௬. புஷ்கரத்வீபம் இவைகளிலே பிறந்து வாழ்வனவாம். அக்நி, ப்ரஹ்மன், சந்த்ரன், விஷ்ணு, நாரதர்,

௫௭. இம் முனிவர்கள் ஷட்ஜத்திலிருந்து துவங்கிய ஐந்து ஸ்வரங்களுடைய தோற்றத்திற்-குக் காரணமானவர்கள். தும்புருமுனிவனே தைவ-தத்தையும், நிஷாதத்தையும் தோற்றியருளினன் என்க. வஹ்நி, ப்ரஹ்மன், ஸரஸ்வதீ, சிவன், விஷ்ணு, கணேசன்,

௫௮. ஸூரியன் இவர்கள் ஷட்ஜம் முதலான-வைகளுக்கு முறையே தேவதைகளாகக் கூறப்படு-கின்றனர். க்ரமத்திலே (ஒழுங்கு நிலையிலே) இவ்-வேழு ஸ்வரங்களுக்கும், அநுஷ்டுப், காயத்ரீ, த்ரிஷ்டுப், ப்ருஹதீ,

௫௯. பிறகு பங்க்தி, உஷ்ணிக், ஜகதீ முத-

லான ஏழு சந்தஸுகளாக (பண்ணளவு) முறையே ஷட்ஜம் முதலியவைகளிலே உள்ளன என்பர் ஷட்ஜமும், ரிஷபமும் வீரரஸத்தைப் பயப்பதா-கும். அவைகளே அத்புதம், ரௌத்ரம் இச்சுவை-களையும் பயக்குமென்ப. தைவதமோ பயாநகத்-தையும், பயந்தவிர்த்தலுமான இரு சுவைகளை யுண்டாக்கும்.

காந்தாரமும், நிஷாதமும் கருணரஸத்தைக் கொண்டவை. மத்யமமும், பஞ்சமமும் முறையே ஹாஸ்யம், ச்ருங்காரம் இச்சுவைகளை உண்டாக்கு-வனவாம்.

நாத-ஸ்தாந-ச்ருதி-ஸ்வர-ஜாதி-குல-தைவத-ரிஷி-சந்தஸ்-ரஸங்களுடைய விளக்கமென்னும் மூன்றுவது ப்ரகரணம் இவண் முற்றும்.

௧. மூர்ச்சனை முதலியவைகளுக்கு ஆதாரமாகிற ஸ்வரங்களின் சேர்க்கையாம் ஸமூஹத்திற்கு க்ராமம் எனப் பெயர். இவ்வுலகில் அவற்றுள் இரு க்ராமங்களே நிலைத்துள்ளன. அதில் ஷட்ஜக்ராமம் முதலாவதாகும்.

௨. இரண்டாவது மத்யமக்ராமமாகும். இனி அவற்றின் விளக்கத்தைத் தருவாம். தன்னதான நான்காவது ச்ருதியிலே பஞ்சமம் அமைக்கப்படுகையில் அது ஷட்ஜக்ராமமாகும்.

௩. தன்னுடைய கடைசியான ச்ருதிக்குத் தாழ அடுத்துள்ள ச்ருதியிலே பஞ்சமம் பொருத்தப்பட்டால் அஃது மத்யமக்ராமமாகும். அன்றி, தைவதம், ஷட்ஜக்ராமத்தில் மூன்று ச்ருதிகளையும், மத்யமக்ராமத்தில் நான்கு ச்ருதிகளையும் பெற்றாலும் அது ஸரியேயாகும்.

௪-௫ ரிஷபம், மத்யமம் இவை ஒவ்வொன்றிலும் ஒரு ச்ருதியை காந்தாரம் எடுத்துக்கொண்டாலும், பஞ்சமத்தின் ஒரு ச்ருதியைத் தைவதமும், தைவதத்தின் ஒரு ச்ருதியையும், ஷட்ஜத்தின் ஒரு ச்ருதியையும் நிஷாதம் எடுத்துக் கொண்டாலும்,

அஃது காந்தாரக்ராமமென்று நாரதமஹர்ஷி கூறு-வர். இந்த க்ராமம் ஸ்வர்கத்திலேயே நடைமுறை-யிலுள்ளது. பூமியிலன்று. (ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்).

௬. ஷட்ஜமே முக்யமானது. என்னையோ? அஃது முதல் ஸ்வரமாகியும், ஸாதாரணமாக பல அமைச்சர்கள் போன்ற ஸம்வாதிஸ்வரங்களைப் பெற்றிருப்பதுமேயாகும் என்ப. ஆனால் மத்யமமே க்ராமத்திலே முதன்மையானது. என்னையோ? அஃது ச்யுத (நழுவல்) மின்றி விளங்குகின்ற-தாகலின்.

௭ இவ்விரண்டினையும் போன்று ஒரே குடும்-பத்திலே தோன்றிய காந்தாரமும், விண்ணகத்திலே விளங்கும் க்ராமத்தில் சிறந்ததாகும். மூன்று க்ராமங்களிலும் முறையே ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேசன் இவர்கள் தேவதைகளாக உள்ளனர்.

அ. முன்னேற்றத்தை விரும்புவோரால் முறையே மாலை, நண்பகல், காலை இப்பொழுது-களிலும், ஹேமந்தம் (முன்பனி) க்ரீஷ்மம் (இள-வேனில்) வர்ஷா (கார்) இப்பருவங்களிலும் அவை பாடப்படவேண்டும்.

௯. ஸப்த (ஏழு) ஸ்வரங்களின் ஏறுவரிசையும்,

இறங்கு வரிசையும் கொண்டது மூர்ச்சநா எனப்படும். இரண்டு க்ராமங்கள் ஒவ்வொன்றிலும் ஏழு மூர்ச்சனைகள் உள்ளன.

௧0. ஷட்ஜக்ராமத்திலே, ஏழு மூர்ச்சனைகளுள் முதலாவதாக உத்தரமந்த்ரம் உள்ளது. பின்பு ரஜநியும், உத்தராயதமும், சுத்தஷட்ஜமும், மத்ஸரீக்ருத்தும், அச்வக்ராந்தமும், அபிருத்கதமும் ஆக அமைந்துள்ளன.

௧௧ - ௧௨. ஆனால், மத்யமக்ராமத்திலோ, ஸௌவீரீ, ஹாரிணச்வா, கலோபநதா, சுத்தமத்யா, மார்கீ, பௌரவீ, ஹ்ருஷ்யகா என்பன அவை. மற்றுமோர்பால் அவற்றின் விளக்கத்தையும் கவனிப்பாம் மத்யஸ்தானத்தினின்று ஷட்ஜத்தோடு முதல் மூர்ச்சனை துவக்கப்படுகின்றது.

௧௩. மற்ற ஆறு மூர்ச்சனைகளும் ஒழுங்கான முறையிலே தாழ்வான ஸ்தாயியிலே யிருந்து நிஷாதத்தோடும், ஏனைய ஸ்வரங்களோடும் கூடக் காணப்படுகின்றன. மத்யமஸ்தாநத்தின் மத்யமத்தோடு தொடங்கி ஸௌவீரீ மூர்ச்சனை துவங்கும்.

௧௪. ஏனைய ஆறு மூர்ச்சனைகளும் அடுத்துக் கீழான ஸ்வரம், அதற்கடுத்த கீழான ஸ்வரம்

இவ்விதம் வருகின்ற ஸ்வரங்களோடு துவங்கு மென்க. மற்றுஞ் சிலர், ஷட்ஜம் முதலியவற்றின் இடத்தை எடுத்துக்கொள்ளும் நிஷாதம் முதலிய-வைகளோடு ரஜநீ முதலியவைகள் துவங்குகின்-றன என்பர்.

க௫. மத்யமத்தின் இடத்தை எடுத்துக் கொண்டுள்ள காந்தாரம் முதலியவற்ருேடு துவங்கி ஹாரிணுச்வம் முதலியன தோன்றும். இவற்றின் பிரயோகங்களில் ஷட்ஜம் முதலியவை-களும், மத்யமம் முதலியவைகளும் ஒழுங்கான ஆரோஹிக்ரமத்திலே மேனேக்கி நகர்த்தப்பட வேண்டும்.

க௬. நான்கு வகைகளாக அவை பிரிக்கப்-பட்டுள்ளன. சுத்தம், காகலிஸம்பந்தம், அந்த-ரம் இவையிரண்டுடன் கலந்தது என மூர்ச்சனை-கள் ஐம்பத்தாறு (௭ + ௭ × ௪ = ௫௬.)

க௭. நிஷாதம் ஷட்ஜத்தின் இரு ச்ருதிகளை எடுத்துக்கொள்ளுமாகில், அந்த ஸ்வரம் காகலி-யாகும் ஆனல் காந்தாரமோ மத்யமத்தின் இரு-ச்ருதிகளை அவ்விதமே எடுத்துக்கொண்டால் அந்த ஸ்வரம் அந்தரமாகின்றது.

க௮. இரு க்ராமங்களையும் பொருத்தமட்டில்

ஒரு குறிப்பிட்ட மூர்ச்சனையிலே ஒரு குறிப்பிட்ட ஒழுங்கான நிலையே ஷட்ஜமும், மத்யமமும் இடம் பெறுமாயின், அந்த இடத்தின் எண்ணிக்கையே அந்தரத்தின் ஸப்த (ஏழு) மூர்ச்சனைகளுள் குறிப்பிட்ட மூர்ச்சனையாகும் சார்ங்கதேவரால் அது இவ்வாறு விவரிக்கப் பெறுகின்றது.

௧௯. இந்த ஐம்பத்தாறு மூர்ச்சனைகளுள் ஒவ்வொரு மூர்ச்சனையும் ஏழுவகைப்படும். முதல் ஸ்வரத்திலிருந்து துவங்கி மற்ற ஸ்வரங்களும் அவ்விதமே முதலாகும். ஸரியான முறையிலே இந்த மூர்ச்சனைகளின் கடைசியான ஸ்தாயி-ஸ்வரங்களை இசைத்த பிறகு, அவற்றின் முந்திய ஒவ்வொரு ஸ்வரங்களையும் கீழ் ஸ்தாயியில் பாடப்-படவேண்டும்.

௨0. இந்த மூர்ச்சனைகள் க்ராமங்கள் என்றழைக்கப் பெறுவனவாம். அவைகளின் பெருமொத்தம் முந்நூற்று தொண்ணூற்றிரண்டு (௩௯௨) ஆகும். யக்ஷர்கள், அரக்கர்கள், நாரதர், நான்முகன், நாகர்கள், அச்விநீதேவர்கள், வருணன்,

௨௧-௨௨. இவர்கள் முறையே ஷட்ஜக்ராமத்திலே தேவதைகளாவர். ப்ரஹ்மன், இந்த்ரன்,

வாயு, கந்தர்வர்கள், ஸித்தர்கள், த்ருஹிணன், ஸூர்யன், இவர்கள் முறையே மத்யமக்ராமத்தின் தேவதைகளாவர். அவர்களுக்கு மஹர்ஷி நாரதரால் மாற்றுப்பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

உரு-உசு. ஷட்ஜக்ராமத்திலே உத்தரவர்ணம், அபிருத்கதா, அச்வக்ராந்தா, ஸௌவீரீ, ஹ்ருஷ்யகா, உத்தராயதா, ரஜநீ, என மஹர்ஷிகளுக்கு உரியவைகளான மூர்ச்சனைகளாகக் கணிக்கப் பெற்றன. ஆப்யாயநீ, விச்வக்ருதா, சந்த்ரா, ஹேமா, கபர்திநீ, மைத்ரீ, சாந்த்ரமஸீ என்னுமிவைகள் பித்ருக்களுக்கு உரியவைகளாக மத்யமக்ராமத்திலே பெயரிடப்பட்டுள்ளன. நந்தா, விசாலா, ஸுமுகீ, சித்ரா, சித்ராவதீ, ஸுகா, ஆலாபா என்பன காந்தாரக்ராமத்திலே உள்ள ஏழு மூர்ச்சனைகளாகும். இவை விண்ணகத்தே வழங்குவனவாம். ஈண்டு விளக்கப்படவில்லை.

உஎ. ஷாடவம் ஔடுவங்களாக மாற்றப்பட்ட சுத்தமூர்ச்சனைகளே தாநங்களாகும். (இடம்) க்ரமமாக ஷட்ஜக்ராமத்தின்; ஸ—ரி—ப—நி இந்த ஸ்வரங்களை ஏழு மூர்ச்சனைகளிலிருந்து எடுத்து விடுவோமாகில்,

உஅ. கிடைத்தது இருபத்தெட்டு (உஅ) தானங்களேயாகும். மத்யமக்ராமத்தினுடைய ஏழு மூர்ச்சனைகளிலும், க்ரமமாக ஸ—ரி—க என்ற மூன்று ஸ்வரங்களையும் எடுத்து விட்டால் அப்பொழுது கிடைப்பது இருபத்தொன்று (உக) ஸ்வரங்களேயாகும்.

உகூ. எனவே இந்த இரண்டு க்ராமங்களிலும் உள்ள மொத்த தானங்களின் எண்ணிக்கை நாற்பத்தொன்பது (சகூ) ஷாடவங்களாகும். ஷட்ஜம், பஞ்சமம் என்ற இரு ஸ்வரங்களும், ரிஷபம், பஞ்சமம், இவைகளும்;

௩௦-௩௧. ஷட்ஜக்ராமத்திலே ஏழு மூர்ச்சனைகளிலிருந்து நீக்கப்பட்டால் தனித்த வகையான இருபத்தொன்று (உக) ஔடுவதானங்களை அப்பொழுது பெறுவோம். ஆனால் மத்யமக்ராமத்திலே ஏழு மூர்ச்சனைகளிலிருந்து ரிஷபமும், தைவதமும், இரட்டை ஸ்வரங்களான ஷட்ஜபஞ்சமும் நீக்கப்பட்டால் அப்பொழுது பதினான்கு (கச) ஔடுவங்களாகும். எனவே ஔடுவங்கள் இரு க்ராமங்களிலுமாக முப்பத்தைந்து (௩௫) ஆகும். ஷாடவ-ஔடுவங்களின் பெருமொத்தம் (சகூ+௩௫) ஆக எண்பத்தினான்கு (அச) தானங்கள் ஆகின்றன

௫௨. யாதொரு வரையரையுமற்ற க்ரமமு-மில்லாமல் பாடப்பெறுகிற ஸ்வரங்களைப்பெற்று முற்றுப் பெற்றும், முற்றுப்பெருமலும் சேர்ந்த மூர்ச்சனைகள் கூடதாநங்கள் (தாநக்குழூஉக்கள்) ஆகின்றன. நாம் அவற்றின் எண்ணிக்கையைக் கீழே தருவோம்.

௫௩. முற்றுப்பெற்ற கூடதாநங்கள் ஐயா-யிரத்து நாற்பது (௫௦௪௦) ஆகும். க்ரமங்களோடு கூடியதாய் ஒவ்வொரு மூர்ச்சனைகளுமிருக்கும்

௫௪-௫௬. ஐம்பத்தாறு மூர்ச்சனைகளிலும் முற்றுப்பெற்ற கூடதாநங்களை குணிதப்படுத்தி-ஞல் கிடைக்கும். பெருமொத்தம் இரண்டு லக்ஷத்து எண்பத்திரண்டாயிரத்து இருநூற்று நாற்பது (௫௦௪௦ × ௫௬ = ௨௮௨௨௪௦) ஆகும். இனி முற்றுப் பெருத தாநங்கள் ஒன்றும், பின்னர் மேலே முடிவில் ஒன்றும் நீக்கப்பட்டால் ஆறு ஸ்வரம் முதலான ப்ரஸித்திபெற்ற ஏக (ஒற்றை) ஸ்வரமானது கீழே பிரிவுகளைப் பெருதிருந்த பொழுதிலும், நஷ்டம் உத்திஷ்டம் முதலிய-வற்றின் ஸித்தியின் பொருட்டு அதுவும் கணக்-கிடப்படுகிறது. கூடதாநங்களில் உபயோகத்தி-லுள்ளதாகிறதும், கூடதாநங்களை தமக்கென்று

பெருது இருந்த பொழுதிலும், க்ரமங்களும் கூட அவ்விதமே கணக்கிடப்படுகிறது.

௬௭-௬௮. ஷாடவங்களின் கூடதாநங்கள் எழுநூற்று இருபது (௭௨0) ஆகும். ஔடுவங்களுடையதோவெனில், கூடதாநங்கள் நூற்றிருபது (௧௨0) ஆகும். நான்கு ஸ்வரகூடங்களாக இருபத்துநான்கு (௨௪) கணக்கிடப்படுகின்றன. மூன்று ஸ்வரகூடங்களாக ஆறு (௬) கணக்கிடப்படுகின்றன. இரட்டை ஸ்வரங்களில் இரண்டு (௨) கூடதாநங்களும், ஒரே ஸ்வரத்தில் ஒரு (௧) கூடதாநமாகவும் கணக்கிடப்படுகின்றன.

௬௯-௪0 ஆர்ச்சிகம், காதிகம், ஸாமிகம், ஸ்வராந்தரம் இந்த நான்கு பெயர்களும் ஒரு ஸ்வரம் முதலான நான்கு தாநங்களாகின்றன நிஷாதமும், காந்தாரமும் ச்ருதி மாறுதலால் சுத்தம் முதலான நான்கு வகைகளான மூர்ச்சனைகள் ஆகின்றனவென்று முன்னமே கூறப்பட்டுள்ளது. நிஷாதம், காந்தாரம் இவற்றுள் ஒன்றோ, மற்றொன்றோ, அல்லது இவ்விரண்டுமோ நீக்கப்படுமாகில் அப்பொழுதுள்ள முக்கியமான க்ரமங்கள் இரண்டே யாகும்.

௪௧. ஷட்ஜத்தோடு துவங்கும் இருவகைகளும், மத்யமத்தோடு ஆரம்பிக்கும் இருவகைகளும் உள்ளன. இந்த நான்கும் ஒவ்வொன்றும் இரு பிரிவுகளாக ஆகின்றன. ஏனைய பத்து க்ரமங்களும் முறையே நான்கு வகைகளாகும். எனவே இந்த க்ரமங்களின் மொத்த எண்ணிக்கைகள் நாற்பத்தெட்டு (௪௮) ஆகும்.

௪௨. முன்பு கண்ட ஷாடவம் வரையுள்ள கூடதானங்களின் மொத்தமாகிய எழுநாற்று இருபதை (எ௨0) க்ரமங்களால் பெருக்கக் கிடைக்கும் குணிதக்ரமத் தொகை முப்பத்து நாலாயிரத்து ஐந்நூற்று அறுபது (எ௨0 × ௪௮ = ௩௪௫௬0) ஆகும்.

௪௩. இஃது ஷாடவங்களின் எண்ணிக்கை ஆகும். ஔடுவங்களின் க்ரமங்களை விவரிப்பாம். துவக்கத்தில் காந்தாரத்துடன் இரண்டும், ஆரம்பத்தில் நிஷாதத்துடன் இரண்டும் ஆக ஔடுவங்களின் இந்த நான்கு வகைகளும் ஆறு எண்ணிக்கையாகும்.

௪௪-௪௬ மற்றுள்ள எட்டும் இருவகைகளாகும். இம்முறையிலே இந்த க்ரமங்களின் மொத்தம் நாற்பது (௬×௪=௨௪) + (௮×௨=௧௬) = ௪0)

ஆகும் ஔடுவகூடதானங்களான நூற்று இருபதை (௧௨0) க்ரம மொத்தமாய நாற்பதால் (௪0) பெருக்கக்கிடைப்பது ஔடுவங்களின் க்ரமத்திலே கிடைக்கும் பெருமொத்தமாகும். அவை நாலாயிரத்து எண்ணூறு (௧௨0×௪0= ௪௮00) என்பர். நான்கு ஸ்வரங்களின் துவக்கத்திலே நிஷாதத்துடன் உள்ள இரண்டும், நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பன்னிரண்டு க்ரமங்களும்,

முறையே, இரண்டிரண்டாக வகைப்படுத்தப் பட்டுள்ளன இவ்விதமான பெருந்தொகை முப்பத்திரண்டு (௩௨) ஆகும். இருபத்து நான்கு கூடதானங்களால் பெருக்கப்பட்ட நான்கு ஸ்வரங்களின் க்ரமங்களுடைய பெருமொத்தம் எழு நூற்று அறுபத்தெட்டு (௩௨×௨௪=எ௬௮) என்ப.

௪எ. இவ்விம் மூன்று ஸ்வரங்களிலோ மத்யமத்தோடு ஆரம்பத்திலுள்ள இரண்டு வகைகள் அற்றன. ஏனைய பன்னிரண்டும் இருவகைப்படும். எனவே இருபத்தாறு (௨௬) க்ராமங்கள் உள. இந்த இருபத்தாறையும் ஆறுகப்பெருக்க வரும் எண்ணிக்கை, நூற்று ஐம்பத்தாறு (௨௬+௬×௧௫௬) ஆகும்.

௪அ-௪௯. மீண்டும் ரிஷபம், காந்தாரம், தைவதம், நிஷாதம் முறையே இவற்றின் ஆரம்பத்தோடு உள்ள இவை ஒவ்வொன்றும் இரண்டு வகைகளோடு எட்டு வகைகளாகின்றன. இவை களைக்காட்டிலும் மற்ற க்ரமங்கள் சுத்தங்களாயுள்ளன. எனவே இந்த இருபத்திரண்டும் இரண்டால் பெருக்கப்படின் நாற்பத்துநான்கு (௪௪) எண்ணிக்கைகளாகும். ஆனால் ஏக (ஒற்றை) ஸ்வரங்கள் தம் கீழ் பிரிவுகளில்லாமல் இயல்பாய் அமைந்த பதினான்கு (க௪) வகைகளைக் கொண்டன.

௫0. சுத்தமத்யமத்தைப் பொருத்த வரையில், நான்கு ஸ்வரங்களோடு க்ரமங்களின் இரட்டைகளில் நாற்பத்தெட்டு வகைகளாகப் பஞ்சமத்தைவிட்ட பிரிவுகளாகக்கொண்ட ஷட்ஜத்தோடு துவங்குகின்ற அவை கூறியது கூறல் என்னும் குற்றமுடைத்து.

௫க-௫௪ மூன்று ஸ்வரங்களின் இரட்டிப்பான இத்தானங்கள் பன்னிரண்டு என்பர் இரட்டை ஸ்வரங்களில் இரண்டேயாகும். ஒற்றை ஸ்வரமோ ஒன்றே. இந்த அறுபத்து மூன்றும் உத்திரமந்த்ரத்திற்கு உரியவைகளான

தாநங்களின் பக்ஷத்திற்கு முற்கூறிய கூறியது கூறல் என்றும் குற்றம் பொருந்தும். இன்னமும் ஐந்து ஸ்வரங்களோடு நான்காக உள்ள நிஷாதம் முதலியவற்றோடு கூடிய மார்கக்ரமங்களோ நானூற்று எண்பது (௪அ0) ஆகும்.

நான்கு ஸ்வரங்களுக்கு உரியவைகளோ தொண்ணூற்று ஆறு (௯௬) என்ப மூன்று ஸ்வரங்களின் ஜதைகளில் பன்னிரண்டு என்க. இரட்டைஸ்வரங்களின் இணையில் நான்கு எனக் கூறுவர்.

ஏகஸ்வரதாநம் ஒன்றே. எனவே ரஜநியிலே காணப்படுகிற தாநங்களிலிருந்து இந்த ஐந்நூற்றுத் தொண்ணூற்று மூன்றும் (௫௯௩) பேதமற்றவை-களாகும்.

௫௫-௫௬. பௌரவிக்கோ ஆறு ஸ்வரக்ரா-மங்கள் நான்கு உள்ளன. துவக்கத்திலே தைவதத்தைக் கொண்டவை. அவற்றின் மொத்த தாநங்கள் இரண்டாயிரத்து எண்ணூற்றெண்-பது (௨அ௫0).

நான்கு ஔடுவங்களுக்கோ தொகை முன்னமே கொடுத்துள்ளோம் நான்கு ஸ்வரங்களோடு இரண்டும், மூன்று ஸ்வரங்களோடு இரண்டும்,

இரண்டு ஸ்வரங்களோடு இரண்டும், ஏகஸ்வரத்திற்கு ஒன்றுமாக முன்னமே குறித்துள்ளோம்.

௫௭. இந்த மூவாயிரத்து நானூற்று இருபத்தைந்து (௩௪௨௫) தானங்களும் முன் கூறிய வழுவுடைய தானங்களே போல உத்தராயதத்திற்கு உரியனவாம்.

௫௮-௬௦ இவ்வாறு நாலாயிரத்து எண்பத்தொன்று (௪௦௮௧) தானங்கள் கூறியது கூறல் என்னும் வழுவுடையனவாம். கூடதானங்களின்-எண்ணிக்கையை க்ரமங்களின் பூர்ணம், அபூர்ணம், என்ற எண்ணிக்கையினூடே கழிப்போமாகில் மூன்றுலக்ஷத்து பதினேழாயிரத்துத் தொளாயிரத்து முப்பது (௩௧௭௯௩௦) என்ப. கணக்கிடும் வகை என்னையோ? ஒன்றேடு துவங்கி ஏழுடன் முடியும் எண்ணிக்கைகளை ஒன்றின்மேல் ஒன்ருக க்ரமத்திலே எழுதப்படவேண்டும்.

௬௧. கீழுள்ளனவற்றையும், அதற்கும் கீழுள்ளனவற்றையும் ஒன்றின் முன்னதாலும், அதற்கும் முன்னதாலும் பெருக்கிக் காணுவதே ஒவ்வொரு மூர்ச்சனையின் முறையேயுள்ள ஏகஸ்வரத்தினின்றும் மற்ற ஸ்வரங்களின் தானமாகும்.

௯௨. ஸ்வரங்களின் க்ரமத்தை எழுதிய பின்னர் முன்னைய ஸ்வரத்தையும், அதற்கும் முன்னைய ஸ்வரத்தையும் ஒன்றன் பின் ஒன்று தொடருமாறு அமைக்கவேண்டும். வரிசையில் அது மேலே உள்ளதாயின் எஞ்சிய ஸ்வரத்தை எதிரிலே கொடுக்கப்படவேண்டும்.

௯௩. மிகுந்தவைகளைத் தொடருமாறு பின்னணியில் அமைக்க வேண்டும். இங்கிலையிலே ப்ரஸ்தாரம் (பரவல்) காணுவது மரபு. ஏழுவரிசைகள் இருக்கவேண்டும். ஒவ்வொரு காலத்திற்குமாக ஏழிலிருந்து துவங்கி ஒன்றில் முடிவு பெற வேண்டும்.

௯௪. முதல் பங்க்தியின் (வரிசை) முதற்கட்டத்திலே ஒன்று என்ற எண்ணை எழுதவேண்டும். ஏனையவற்றுள் பூஜ்யத்தைக் குறிக்கவும். அவ்விதமே தானத்தின் ஸம்பந்தமான எண்ணை ஸ்தாபிக்க லோஷ்டங்கள் (காய்கள்) இடப்படவேண்டும்.

௯௫, ௯௬. உச்சியினின்று அடிவரை ஒழுங்கு செய்யப்பட்ட இந்த பங்க்திகளுள் (வரிசை) முடிவான எண்களின் மொத்தத்தை தயாராயுள்ள வரிசைகளில் அமைக்கப்படவேண்டும், அவ்வித-

மாஞல் பூஜ்யத்தின் கீழே குறிப்பிடப்படவேண்டு-மென்க. வரிசைகளின் எண்ணுல் குணஸங்க்யை செய்ய மீண்டும். கீழே உள்ள வரிசையிலும் செய்ய நாம் பெறுவது கண்டமேரு ஆகும். ஸ்வா-பாவிக (இயற்கை) ஒழுங்கின் கடைசி ஸ்வரத்தி-லிருந்து பின்ஞக எண்ண, உத்திஷ்ட (எழுச்சி)த்-தின் முடிவான ஸ்வரத்திஞுடைய ஸங்கியையைத் தெரிவிக்கிற எண்களைக் கீழான பகுதிகளில் வருமாறு லோஷ்டங்களை நகர்த்தவேண்டும். லோஷ்டங்களின் நகர்த்தல் கிரியை (செய்கை) முடிவிலிருந்து துவங்கவேண்டும். ஒவ்வொரு நிலையிலும் புதிதாய க்ரமங்கள் அவ்வித ஸ்வரங்-களை வெளியாக்கிய பின்பே காணப்படும்.

கூஅ. லோஷ்டங்களை நகர்த்தப்பட்டுக் கட்-டங்களிலுள்ள எண்களைக் கூட்டுவதால் கிடைப்-பதே உத்திஷ்டத்தின் ஸங்கியையாம். கட்டங்-களில் உள்ள எண்களில் ஒன்றைத்தேர்ந்தெடுத்து அதனுடன் முதல் வரிசையிலுள்ள ஒன்றைக் (க) கூட்டக் கிடைப்பது நஷ்டத்தின் எண்களாம்.

கூகூ-எ0. கட்டங்களுள் உள்ள எண்களுடன் லோஷ்டங்களை வைப்பது, நஷ்டத்திலுள்ள ஸ்வ-ரங்களின் எண்ணைப்போலவே லோஷ்டஸங்கியை

களும் இருக்கவேண்டும். பூஜ்யத்தினின்று கீழாகக் கட்டங்களிலுள்ள எண்களைக் கொட்டை-களுடன் எண்ணவும், மூலாதாரமான க்ரமத்தி-லிருந்து கிடைத்த கடைசி ஸ்வரத்தின் பின்பால் எண்ண, ஸ்வரத்தின் எண்ணாக அவ்வெண் இருக்-கும். கிடைத்த ஸ்வரத்தின் வெளியீடு முதலிய-வை முன்னையதைப் போலவே இருக்கிறது.

௭௧. தானத்தில் ஸ்வரங்களின் எண் அதி-கப்படுத்திய வரிசைகளின் உச்சி முதல் அடிவரை உள்ள கடைசிக் கட்டங்களில் கூட்டப்படுவதால் அமைவனவாம். முறையில் ஏகஸ்வரத்துக்குத் தானங்களின் எண்ணையும் காட்டுவதாகும்.

௭௨, ௭௩ இனி ஈண்டு நாம் சுத்ததானங்-களின் பெயர்களைக் கூறுவாம். அக்நிஷ்டோமம், அத்யக்நிஷ்டோமம், வாஜபேயம், ஷோடசீ, பௌண்டரீகம், அச்வமேதம், ராஜஸூயம் என்ற இவ்வேழு தானங்களும், முறையே ஷட்ஜம் நீக்கப்பட்டு விளங்குவனவாம்.

௭௪ ஸ்விஷ்டக்ருத், பஹுஸௌவர்ணம், கோஸவம், மஹாவ்ரதம், விச்வஜித், ப்ரஹ்மயஜ்-ஞம், ப்ராஜாபத்யம், என்ற இவ்வேழு தானங்-களும்,

எரு-எசு முறையே ரிஷபத்தினின்று நீங்கி உண்டானவைகள். அச்வக்ராந்தம், ரதக்ராந்தம், விஷ்ணுக்ராந்தம், ஸூர்யக்ராந்தம், கஜக்ராந்தம், வலபித், நாகபக்ஷகம் என்ற முறையேயுள்ள இவை பஞ்சமத்தினின்று நீங்கிப் பிறந்தவைகள்.

எஎ எகூ. சாதுர்மாஸ்யம், ஸம்ஸ்தா, சஸ்த்ரம், உக்தம், ஸௌத்ராமணீ, சித்ரா, உத்பித், என்ற இவை ஏழும் வரிசையாக நிஷாதத்தினின்று நீங்கிய ஷாடவதாநங்களாம். ஸாவித்ரீ, அர்தஸாவித்ரீ, ஸர்வதோபத்ரா, ஆதித்தியாநாமயநம், கவாமயநம், கௌணபாயநம், என்ற இவ்வேழுதாநங்களும் ஷட்ஜம் நீங்கிய தாநங்களின் பெயர்களாகும்.

அ0-அ உ. அக்நிஜித், த்வாதசாஹம், உபாம்சு, ஸோமன், அச்வப்ரதிக்ரஹம், பர்ஹிஸ், அப்யுதயம் என்ற இவ்வேழு பெயர்களும் ரிஷபம் நீங்கிய தாநங்களின் பெயர்களாம். ஸர்வதக்ஷிணை, தீக்ஷா, ஸோமன், ஸமித், ஸ்வாஹாகாரம், தநூநபாத், கோதோஹநம் என்ற இவ்வேழும் காந்தாரம் நீங்கிய தாநங்களின் பெயர்களாம்.

அ௩. இடா, புருஷமேதம், ச்யேநம், வஜ்ரம், இஷு, ஆங்கிரஸ், கங்கம் இந்த ஏழு வரிசைப்

பெயர்களும் ஷட்ஜபஞ்சமம் நீக்கப்பட்டுப் பிறந்த தானங்களாம்.

௮௪-௮௫. ஜ்யோதிஷ்டோமம், தர்சம், நாந்தீ, பௌர்ணமாஸிகா, அச்வப்ரதிக்ரஹம், ராத்ரீ, ஸௌபரா இந்த ஏழு தானங்களும் நிஷாதகாந்தாரம் நீங்கிப் பிறந்தவைகள். ஸௌபாக்யக்ருத் காரீரீ, சாந்திக்ருத், புஷ்டிக்ருத், வைநதேயம், உச்சாடநம், வசீகரணம் இவ்வேழுவகைத் தானங்களும் பஞ்சமரிஷபம் நீங்கியவைகள்.

௮௭-௮௮. த்ரைலோக்யமோஹநம், வீரம், கந்தர்பபலசாதநம், சங்கசூடர், கஜச்சாயா, ரௌத்ரா, விஷ்ணு விக்ரமம் ஆகிய இவ்வேழு தானங்களும் முறையே ரிஷபதைவதம் நீங்கிய தானங்களாம்

௮௯-௯0. பைரவம், காமதம், அவப்ருதம், அஷ்டாகபாலம், ஸ்விஷ்டக்ருத், வஷட்காரம், மோக்ஷதம் என்ப இவ்வேழுதானங்களும், நிஷாதகாந்தாரம் நீங்கியவைகளாம். குறிக்கப்பட்ட யஜ்ஞத்தின் பெயரை ஒரு தானம் பெற்றிருந்தால் அந்தத் தானம் அந்த யாகத்தின் பலனைப் பெற்றுள்ளதேயாகும்

௯௧. காந்தர்வத்திலே சுத்த மூர்ச்சனைகளும், சுத்ததானங்களும், உயர் நிலைக்கு வளர்ப்பவைக-

ளாக வேதத்திஞல் கட்டளையிடப்பட்டவைக-ளாகவுள்ளன. பாடுவது ஒரு நிலையைப் பெறுவ-தால் முற்கூறிய கூடதாநங்களும் கூடப் பய-னுடையவைகளாம்.

க்ராம-மூர்ச்சநா-க்ரம தாநங்கள் என்னும்
நான்காவது பிரகரணம் இவண் முற்றும்.

க, உ. ஸ்வரம், ஜாதி இவற்றைப் பொறுத்த வரை நாம் அறியப்படுவதாகிய ஸாதாரணமோ இருவகைத்து. என்னையோ? ஸ்வரஸாதாரண-மென்றும், ஜாதிஸாதாரணமென்றும் கூறியது ஆகலின். அவற்றுள் ஸ்வரஸாதாரணமோ நான்கு வகைப்படும், முறையே அவை காகலி, அந்தரா, ஷட்ஜம், மத்யமம் என்பனவாம். காகலிஸாதாரணமோ உண்மையிலே ஷட்ஜத்தின் இடையே யுள்ளது.

ங. எனவே அந்தக் காகலியின் பொதுமையை நோக்கி அதை ஸாதாரணமாகவே உணர்கின்றனர். அவ்வண்ணமே காந்தாரம், மத்யமம் இவற்றின் இடையிலுள்ள அந்தரத்தையும் ஸாதாரணமா-கவே கொள்வர்.

ச. ஷட்ஜத்தைப் பாடிய பின்னரே, காகலி-யையும், தைவதத்தையும், சிறிய முறையிலே பாடப்படவேண்டும். அவ்வாறே மத்யமத்தைப் பாடிய பிறகே அந்தரத்தைப் பாடவேண்டும்

ரு-சு. அல்லது ஷட்ஜத்தையும், காகலியை யும் பாடி முடித்த பின்னர், மீண்டும் ஆதார

ஷட்ஜத்திற்கு வந்தே பின்னர் உள்ள தொடர்ந்த ஸ்வரங்களைப் பாடவேண்டும். அவ்விதமே மத்யமத்தையும், அந்தரஸ்வரத்தையும், பாடிய பிறகே மத்யமத்திலிருந்து மற்ற ஸ்வரங்களையும் பாடவேண்டும். காகலியும் அந்தரஸ்வரமும் எங்கும் நுட்ப அளவிலே தான் உபயோகிக்கப் படுகின்றன.

எ. நிஷாதம் ஷட்ஜத்தின் முதல் ச்ருதியை எடுத்துக்கொண்டும், ரிஷபம் கடைசி ச்ருதியை எடுத்துக் கொள்ளுமாகில் அஃதே ஷட்ஜஸாதாரணம் எனப்படும்.

அ ஓர் புறத்தில் மத்யமத்திலும், மற்றுமோர் புடை காந்தார பஞ்சமத்திலும், இடையிலேயும் கூட ஸாதாரணம் உண்டு. மத்யமஸாதாரணமோ மத்யமக்ராமத்திலேயே யுள்ளது.

கூ. இந்த இரு ஸாதாரணங்களையும் கைசிகம் என்பர். என்னையோ? ஒரு மயிரிழை அவகாசமே அவை பெறுவன ஆகலின். இவ்விரண்டையும் க்ராமஸாதாரணமென அறிஞர் அழைப்பர்.

க0. அதே க்ராமத்தினின்றும், அதே அம்சத்தினின்றும் கிடைக்கப்பெற்ற ஜாதிகளுக்குள்ளே (பிரிவு) அவ்விதம் இசைப்பது ஸஹஜமாகும். இஃதையே சான்றோர் ஜாதிஸாதாரணம்

என்பர். மற்றும் சிலரோ இந்த ஜாதிஸாதார-ணத்தையே ராகங்கள் எனச்சொல்லுவர்

ஸாதாரணங்களுடைய விளக்கம் என்னும் ஐந்தாவது ப்ரகரணம் இவண் முற்றும்.

வர்ணாலங்கார ப்ரகரணம் ௬

௧. இசைபெறப் பாடும் ஸ்வரக்ராமங்களின் தொகுப்பே (ஜாதி) வர்ணமாம். அஃது நான்கு வகைப்படும். என்னையோ? ஸ்தாயிவர்ணம், ஆரோஹி-வர்ணம், அவரோஹிவர்ணம், ஸஞ்சாரிவர்ணம் (நிலையான பிரிவு, ஏறு வரிசைப்பிரிவு, இறங்கு வரிசைப்பிரிவு, அலையும் வரிசைப்பிரிவு) என்பர் ஆகலின்.

௨-௩. ஒரு ஸ்வரத்தையே நிறுத்தி நிறுத்தி அதையே கையாண்டு இசைப்பது ஸ்தாயிவர்ணம் என அறிதற் பாற்று. அடுத்த இரண்டு வர்ணங்-களும், அவற்றின் பெயர் பொருளையே கொண்ட-வை இம்மூன்றும் கலந்து விரவி காணப்படுவது ஸஞ்சாரி வர்ணமாம். ஒரு குறித்த வர்ணத்தின் சேர்க்கைத் தொகுப்பையே அலங்காரம் (அணி) என்பார்கள்.

௪. அவற்றின் வகைகளோ பல. எனினும், நான் ஸ்தாயியின் கீழே வருகின்ற இவற்றின் அணிகளைப்பற்றி முதலில் சொல்லுகிறேன். ஸ்தாயிவர்ணங்களின் கீழ் வருகிற அலங்காரங்-கள் ஆரம்பத்திலும், முதலிலும், இரண்டிலும் ஒரே ஸ்வரம் தோன்றுவனவாகும்.

ரு. என்னையோ? ஆரம்பத்திலுள்ளதை ப்ரஸந்நமென்றும், அந்த்யத்திலுள்ளதையும் ப்ரஸந்நமென்றும், ஆரம்பம் முடிவு இரண்டிடத்திலுமுள்ளதும் ப்ரஸந்நமென்றும், மத்யத்திலுள்ளதும் ப்ரஸந்நமென்றும் கூறுவர். எனவே இவற்றை முறையே ப்ரஸந்நாதி, ப்ரஸந்நாந்தம், ப்ரஸந்நாத்யந்தம், ப்ரஸந்நமத்யம் என்னலாம். ஐந்தாவதோ இவ்வித க்ரமத்தை மீறியதான அலங்காரமாயிருக்கிறது.

௬௱. ப்ரஸ்தாரம், ப்ரஸாதம் என்ற இவ்வேழுவகைகளே ஸ்தாயியின் கீழே உண்டாகும் அலங்காரங்களாம். இப்பிரிவிலே ஒரு மூர்ச்சனையிலுள்ள முதல் ஸ்வரமானது மந்த்ர (கொப்பூழ்) ஸ்தாயியாம்.

எ-அ. அதே ஸ்வரம் இரட்டிப்பாக ஒலிக்குமானால் அதுவே தாரஸ்தாயியாம். அல்லது மூன்னதும், அதற்கு முன்னதுமாய ஸ்வரம் மந்த்ரமாயும், அதைத் தொடர்ந்த ஸ்வரத்தின் பின்னர் உள்ள ஸ்வரமே தாரமென்பர். மந்த்ர ஸ்வரத்தை ப்ரஸந்நமென்றும், ம்ருதுவென்றும் அழைப்பர். தாரத்தையே தீப்தம் என்பர். வரி வடிவிலே ஸ்வரத்தின் மீது புள்ளியிடுதல் மந்த்ர-

நிலையைக் குறிக்கும். தாரஸ்வரமோ தன்மீது ஒரு செங்குத்தான கோட்டைப் பெற்றிருக்கும். ப்லுதம் ஸ்வரத்தை மும்முறை இசைப்பதாகும்.

அ-௧௦. ஒரு தாரஸ்வரமானது இரண்டு மந்த்ரங்களுக்குப் பிறந்து வருவதையே ப்ரஸந்நாதி எனபர். உதாஹரணம்—ஸ் ஸ் ஸ். (௧) இதையே தலைகீழாக மாற்றும்பொழுது கிடைப்பதே ப்ரஸந்நாந்தமாம். உதாஹரணம் — ன் ஸ் ஸ் (௨) இரண்டு ப்ரஸந்நங்களுக்கு நடுவிலே ஒரு தீப்தம் தோன்றுமாகில் அதுவே ப்ரஸந்நாத்யந்தம் என்பர். உதாஹரணம்—ஸ் ஸ் ஸ். (௩) மறுபடியும் மந்த்ரமானது இரண்டு தாரங்களின் நடுவே தோன்றுமாகில் அறிஞர் அதையே ப்ரஸந்நமத்யம் என்பர். உதாஹரணம்—ஸ் ஸ் ஸ். (௪).

௧௧-௧௨ மூர்ச்சனையின் முதல் ஸ்வரம் ஆரம்பத்திலும், முடிவிலும் தோன்றி இரண்டாவது ஸ்வரம் நடுவிலே தோன்றுமாகில் அதுவே ஒரு கலையாகும். ஆனால் மூன்றாவதும், நான்காவதுமான ஸ்வரங்கள் மத்தியிலே தோன்றுமாகில் அஃது இரண்டாவது கலையாகும் பஞ்சமத்தோடு தொடரும் மூன்று ஸ்வரங்களும் நடுவிலே தோன்றினால் அஃதே எஞ்சியுள்ள மூன்றாவது

கலையாம் (க்ரமரேசிதம் என்ற க்ரமத்தை மீறிய) அலங்காரமாகும். அது மூன்றுகலைகளைக் கொண்டதாகும். உதாஹரணம்—கலை (க) ஸ்ரிஸ்; கலை (உ) ஸ்கமஸ்; கலை (ந) ஸ்பதநிஸ். (ரு) என்பதாகும்.

கங மேலே கூறிய மூன்று வகைக் கலைகளிலும் முடிவிலே தீப்தஸ்வரம் நிற்குமானால் அவ்வகையை ப்ரஸ்தாரம் என்பர். உதாஹரணம்— ஸ்ரிஸ்; ஸ்கமஸ்; ஸ்பதநிஸ், (சா) மேலே கூறியபடி தாரமும், மந்த்ரமும், தம் நிலையிலே பரிவர்த்தனை செய்து கொள்ளுமாகில் அதை ப்ரஸாதமென்பர் உதாஹரணம் — ஸ்ரிஸ்; ஸ்கமஸ்; ஸ்பதநிஸ் (எ) இவைகளே ஸ்தாயியின் கீழேவரும் ஏழு அலங்காரங்களாகும்.

கச-கரு. ஆரோஹிவர்ணங்களின் கீழே விஸ்தீர்ணம், நிஷ்கர்ஷம், பிந்து, அப்யுச்சயம், ஹஸிதம், ப்ரேங்கிதம், ஆக்ஷிப்தம், ஸந்திப்ரச்சாதநம். உத்கீதம், உத்வாஹிதம், த்வநிவர்ணம் வேணீ என்ற இப்பன்னிரண்டு அலங்காரங்களும் உண்டாகின்றனவாம்.

கசா. மூர்ச்சனையின் முதல் ஸ்வரத்திலிருந்து ஏறு வரிசையிலே நிறுத்தி நிறுத்தி நீண்டு ஒலிக்கும் ஸ்வரங்களைக்கொண்டது விஸ்தீர்ணமாம்.

உதாஹரணம் — ஸா ரீ கா மா பா தா நீ (௧)-
இரண்டு மாத்திரைகள் நிறுத்தி ஒலிக்கவும்.

௧௭. இதையே நீட்டி ஒலியாமல் குறுக்கி ஒவ்வொன்றையும் இருதடவை இடையீடின்றி ஒலிக்கச் செய்வது நிஷ்கர்ஷையாகும். உதாஹரணம்—ஸஸ ரிரி கக மம பப தத நிநி (௨) மூன்று அல்லது நான்கு தடவைகள் ஸ்வரங்களை உச்சரித்தல் காத்ரவர்ணமென்பர். உதாஹரணம்—ஸஸஸ ரிரிரி ககக மமம பபப ததத நிநிநி; ஸஸஸஸ ரிரிரிரி கககக மமமம பபபப தததத நிநிநிநி என்ப. (௨)

௧௮-௧௯. முற்கூறியதை நிஷ்கர்ஷையின் இருவகைகள் என்பாரும் உளர். ஆரோஹி-முறையிலே நெடில், குறில் இவை அடுத்தடுத்துத் தோன்றி ப்லுதத்தோடு முடிவடைந்தால் அதை பிந்து என்பர் உதாஹரணம்—ஸாஸஸாரி காக-காம பாபபாத நீநிநீ என்பதாம். (௩) ஏறு முறை-யிலே இடையிலுள்ள ஸ்வரத்தை விடுத்து ஒலிப்பது அப்யுச்சயமாம். உதாஹரணம்—ஸ க ப நி, என்பதாம். (௪)

௨0. ஆரோஹி முறையிலே ஒன்றைத் தொடர்ந்த எல்லா ஸ்வரங்களுமே முன்னதைவிட

இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு எனப்படுவது ஹஸிதம் எனச் சிவப்ரியனை சார்ங்கதேவன் சொல்லுவான் உதாஹரணம்— ஸ, ரிரி, கககக, மமமம, பபபப, ததததத, நிநிநிநிநிநிநி. என்பதாம். (௫)

உ௫. முதல் இரண்டு ஸ்வரங்களை உச்சரித்த பின்னர் தனக்கு முன்னதான ஸ்வரத்தோடு அடுத்த ஸ்வரம் தொடர்ந்து ஆரோஹிக்ரமத்திலே காணப்படுமாயின் இவ்வணியை ப்ரேங்கிதம் எனக்-கூறப்படும். உதாஹரணம் — ஸரி, ரிக, கம, மப, பத, தநி (௬)

உ௬. நடுவிலே ஒரு ஸ்வரத்தை விலக்கி இரண்டு ஸ்வரங்களாயமைந்தும், கடைசி ஸ்வரம் உடனே தொடரும் வண்ணமும் அமைந்து காணப்படுவது ஆக்ஷிப்தமாகும். உதாஹரணம்— ஸக ; கப ; பநி (௭)

உ௭. முதல் கலை மூன்று ஸ்வரங்களைப் பெற்-றும், மற்றுமிருகலைகள் முறையே மூன்று ஸ்வரங்களைப் பெறுவதில் தமக்கு முதலாவதாக உள்ள ஸ்வரத்தைக்கொண்டு அமைவது ஸந்தி-ப்ரச்சாதநமாகும். உதாஹரணம் — ஸரிக ; கமப ; பதநி (௮)

உ௩. மூன்று ஸ்வரங்களுள்ள இரண்டு கலைகளின் முதல் ஸ்வரம் ஒவ்வொன்றையும் மும்முறை ஒலிப்பது உத்கீதமாகும். உதாஹரணம்— ஸஸஸரிக: மமமபத. (கூ) முற்கூறியவாறே மத்யஸ்வரத்தை இசைக்கும் விஷயமே உத்வாஹிதம் எனப்படும். உதாஹரணம்— ஸரிரிரிக, மபபபத (கO)

உ௫. கடைசியான ஸ்வரத்தை அவ்விதம் மும்முறை ஆவர்த்தி (ஒரு தடவை சொன்னதையே திரும்பவும் சொல்வது) செய்வதை த்ரிவர்ணம் எனச்சொல்லுவர். உதாஹரணம்— ஸரிககக, மபததத என்பதாம். (கக) அவ்விதமே மூன்று ஸ்வரங்களையும் தனித்தனியே ஆவர்த்தி செய்வதே வேணீ எனச் சொல்லப்படுவது. உதாஹரணம்— ஸஸஸ, ரிரிரி, ககக, மமம, பபப, ததத (கஉ) என்பதாம். இவையே ஆரோஹியினுடைய பன்னிரண்டு அலங்காரங்களாம்.

உ௬-உ௯. இந்தப் பன்னிரண்டு அலங்காரங்களும் அவரோஹியின் (இறங்கு வரிசை) கீழும் காணப்படுவனவாம். இனி ஸஞ்சாரி என்னும் அலங்காரங்களை விவரிப்பாம். அவையாவன— மந்த்ராதி ; மந்த்ரமத்யம் ; மந்த்ராந்தம் ; ப்ரஸ்தா-

ரம்; ப்ரஸாதம்; வ்யாவ்ருத்தம்; ஸ்கலிதம்; பரிவ்ர்ருத்தம்; ஆக்ஷேபம்; பிந்து; உத்வாஹிதம்; ஊர்மீ; ஸமம்; ப்ரேங்கம். நிஷ்கூஜிதம்; ச்யேநம்; க்ரமம்; உத்கட்டிதம்; ரஞ்சிதம்; ஸந்நிவ்ருத்தப்ரவ்ருத்தம்; வேணு; லலிதஸ்வரம்; ஹுங்காரம்; ஹ்ராதமாநம்; அவலோகிதம் என்பதாம். இந்த இருபத்தைந்து அணிகளும் ஸஞ்சாரியின் கீழே காணப்படுவனவாம்

௬0. முதற்கலை மூன்று ஸ்வரங்களைப் பெற்றும்; எஞ்சிய கலைகளும், அவ்வாறே மூன்று ஸ்வரங்களையும் பெறுவதில் தொடருவதிலே ஒவ்வொரு ஸ்வரமும் ஒரு மந்த்ரஸ்வரத்தை விடுத்தும், மந்த்ரஸ்தாயியோடு துவங்குவதும் மந்த்ராதியாம். உதாஹரணம்—ஸகரி; ரிகம; கபம; மதப; மநித; (௧) என்பதாம்.

௬௧. முற்கூறிய கலைகள் மத்யத்திலே (நடுவிலே) அல்லது அந்த்திலே (முடிவிலே) மந்த்ரஸ்வரத்தைப் பெற்றால் முறையே மந்த்ரமத்யம், மந்த்ராந்தமீ எனப்பெயர் பெறுவனவாம். உதாஹரணம்—கஸரி; மரிக; பகம; தமப; நிபத;(௨) என்பது மந்த்ரமத்யம் மந்த்ராந்த்திணுடைய உதாஹரணம்—ரிகஸ, கமரி, மபக, பதம, தநிப, (௩) என்பதாம்.

௩௨. ஸ்வரங்கள் இணையிணையாகவும், இடையில் ஒன்றை விடுத்தும், விடுத்த ஸ்வரம் ஆரோஹிபோல அடுத்த இரட்டைக்கு முதலாவதும் ப்ரஸ்தாரமெனச் சொல்லப்படும். உதாஹரணம்—ஸக ரிம கப மத பநி (௪) என்பதாம்.

௩௩. ஒவ்வொரு அடியிலும் முன்னதான ஸ்வரத்தை முன்னும் பின்னுமாக அமைப்பது ப்ரஸாதமாகுமென்று பொக்கிஷாதிகாரியாகிய சார்ங்கதேவர் கூறுவர். உதாஹரணம்—ஸரிஸ; ரிகரி; கமக; மபம; பதப; தநித (௫) என்பதாம்.

௩௪. ஒரு கலை நான்கு ஸ்வரங்களைப் பெறுவதில் முதலிலிருந்து துவங்கி மூன்ருவதையும் கொண்டு விளங்குவதாகும். அதனுல் ஒரு ஸ்வரம் முன்னதான ஸ்வரத்தைத் தொடருவதாகும். இம்முறையிலே ஒவ்வொரு அடியிலும் ஒன்றை நீக்கி நான்கு ஸ்வரங்களுடைய எஞ்சிய கலைகளிலும் அறிஞர்கள் இசைப்பதை வ்யாவ்ருத்தம் என்பர். உதாஹரணம்—ஸகரிமஸ; ரிமகபரி; கபமதக, மதபநிம (௬) என்பதாம்.

௩௫. மந்த்ராதியின் கலையை முற்றும் கொண்டே இசைப்பதில் நான்காவது ஸ்வரத்தை இரட்டிப்பாக அவரோஹிமுறையிலே இசைப்பது

ஸ்கலிதமாகும். உதாஹரணம் — ஸகரிமம்ரிகஸ; மகபபகமரி; கபமததமபக; மதபநிநிபதம (எ) என்பதாம்

நூ௬. மூன்று ஸ்வரங்களைப்பெற்ற முதல்கலையில் இரண்டாவது ஸ்வரத்தை விடுத்து, விடுத்த ஸ்வரமே மற்றவைகளுக்கு முதலாவதாக வரும் வகையே பரிவர்த்தமாகும், உதாஹரணம்— ஸகம; ரிமப; கபத; பதநி; (அ) என்பதாகும்.

நூ௭. மூன்று ஸ்வரங்களைப்பெற்ற கலைகள் தமக்கு முன்னதானதை விடுத்து ஒவ்வொரு அடிகளாக அமைவது ஆக்ஷேபமாகும். உதாஹரணம்—ஸரிக: ரிகம; கமப; மபத; பதநி (கூ) என்பதாகும்.

நூ௮. முன்னதான ஸ்வரம் ப்லுதம் (நீட்டி-ஒலிக்கப்பட்டால்) ஆனுல் அடுத்ததை தீயைத்-தொடுவதுபோல ஒருதடவை இசைத்து அவ்விதமே மற்ற கலைகளிலும் அநுஸரிக்கப்படுவது பிந்துவாகும். உதாஹரணம்—ஸஸரிஸஸ; ரிரிரிகரி; கககமக; மமமபத; பபபதப; தததநித (கo) என்பதாகும்

நூ௯. ஒரு கலையிலே மூன்று ஸ்வரங்களைப்-பாடி ஒரு ஸ்வரத்தை இறங்கு வரிசையிலும்,

எஞ்சிய கலைகளை இதே முறையில் ஒவ்வொரு அடியிலும் ஒரு ஸ்வரத்தை விடுத்துப பாடுதல் உத்வாஹிதம் எனப்படும். உதாஹரணம்—ஸரிகரி; ரிகமக; கமபம; மபதப; பதநித (கக) என்பதாகும்.

சுO. மூர்ச்சனையின் முதல் ஸ்வரத்திலிருந்து நான்காவது ஸ்வரத்தை ப்லுதமாகச்செய்து நான்காவது ஸ்வரம் பாடியதும், முதலாவது ஸ்வரமே மீண்டும் வருவதும் இவ்விதமே ஒவ்-வொரு அடியிலும் விடுத்து அமைவது ஊர்மி யாகும். உதாஹரணம்— ஸமமமஸம; ரிபபபரிப; கததகத; மநிநிநிமநி (கஉ) என்பதாகும்.

சக. நான்கு ஸ்வரங்களைப் பெற்றவைகளும், ஆரோஹ அவரோஹ முறைகளிலுள்ளவைகளும், ஒவ்வொரு ஸ்வரத்தை நீக்கி அடுத்து ஒலிக்கும் க்ர-மங்களுள்ளவைகளுமே ஸமம் என்ற அணியாகும். உதாஹரணம்—ஸரிகம; மகரிஸ; ரிகமப; பமகரி; கமபத; தபமக; மபதநி; நிதபம (கந) என்பதாகும்.

சஉ. ஆரோஹி, ஆவரோஹி இரண்டிலும் இரு ஸ்வரங்கள் அமைந்து அடிதோறும் முன் ஸ்வரம் நீங்கி ஒவ்வொரு கலையும் காணப்படுவது ப்ரேங்கமாகும். உதாஹரணம் — ஸரிரிஸ. ரிககரி; கமமக; மபபம; பததப; தநிநித (கச) என்பதாகும்.

௪௩. ப்ரஸாதத்தைப் பாடுவது போல அதனதன் முதல் ஸ்வரத்திலிருந்து மூன்றாவது ஸ்வரத்தை ஒலிக்கச் செய்து முதல் ஸ்வரத்தில் முடிப்பது முறையே நிஷ்கூஜிதமாகும். உதாஹரணம்—ஸரிஸ கஸ; ரிகரி மரி; கமக பக; மபம தம; பதபநிப (௬௫) என்பதாகும்.

௪௪. இரண்டு ஸம்வாதிகள் இணைந்த ஸ்வரங்களே ச்யேநமாம் ஷட்ஜ, ரிஷப, காந்தார, மத்யம இணைகளே அவை முறையாய் வருவனவாம். உதாஹரணம்—ஸப; ரித; கநி; மஸ (௬௬) என்பதாகும்.

௪௫. இரண்டு, மூன்று, நான்கு ஸ்வரங்களைக் கொண்ட கலைகளாய் முதல் மூன்றும் முதல் ஸ்வரத்தில் துவங்கியும், ஏனைய அடுத்தடுத்துள்ள ஸ்வரத்தில் ஆரம்பித்தும் அமைவது க்ரமமாகும். உதாஹரணம் — ஸரிஸரிகஸரிகம; ரிகரிகமரிகமப; கமகமபகமபத, மபமபதமபதநி; (௬௭) என்பதாகும்.

௪௬. முதல் இருஸ்வரங்களைப் பாடிய பின்னர் ஐந்தாவது ஸ்வரத்தில் ஆரம்பித்து அவரோஹியில் நான்கு ஸ்வரங்களை இசைப்பதும், ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு ஸ்வரத்தை விடுத்தும் பாடுவது உத்கட்டிதமாகும். உதாஹர-

ணம் — ஸரிபமகரி; ரிகத ப மக; கமநிதபம (கஅ) என்பதாகும்.

௪௭. மந்த்ராதிகளின் கலைகள் முடிவில் மந்த்ரத்தோடு இரட்டிப்பாக இசைத்தால் அது ரஞ்ஜிதமாகும். உதாஹரணம் — ஸகரி ஸகரிஸ; ரிமக ரிமகரி; கபம கபமக; மதப மபதம; பநித பநிதப (கக) என்பதாகும்.

௪அ. முதல் ஸ்வரத்தையும், ஐந்தாம் ஸ்வரத்தையும் பாடி அவரோஹணத்தில் நான்காம் ஸ்வரத்தின் மூன்றும் ஸ்வரத்தைப் பாடுவது ஸந்நிவ்ருத்தப்ரவ்ருத்தமாகும். இதில் முதல் கலைக்குப் பின்னர் ஒவ்வொரு அடியிலும் முதல் ஸ்வரத்தை விடுத்துப் பாடுவது மரபு. உதாஹரணம்—ஸபமகரி; ரிதபமக; கநிதபம (உ௦) என்பதாகும்.

௪கூ. முதல் ஸ்வரம் இரட்டித்தும், பின் இரண்டு, நான்கு ஸ்வரங்களைப் பாடி, பிறகு மூன்றும் ஸ்வரத்தை ஒரு தடவை ஒலிப்பது ஒரு கலையாம். மற்றவை முதன்முதல் ஸ்வரத்தை விடுத்து ஒவ்வொரு படியிலும் அமைவது வேணு என மதிக்கப்படுகிறது. உதாஹரணம்—ஸஸரிமக; ரிரிகபம; ககமதப; மபநித (உக) என்பதாகும்.

௫0. முதற் கலையில் முதல் இரு ஸ்வரங்களும், பின் நான்கும், முன் இருஸ்வரங்களும், அவரோஹணத்திலும் காணப்பட்டு, முன்னதைப் போல முன் ஸ்வரம் விடுத்து மற்றக் கலைகளிலும் காணப்படுவது லலிதஸ்வரமாகும். உதாஹரணம்—ஸரிமரிஸ; ரிகபகரி; கமதமக. மபதபம (௨௨) என்பதாகும்.

௫௧. முதற்கலையில் முதல் இருஸ்வரங்களும், அவற்றுள் முன்னது ஏறு இறங்கு வரிசைகளாய் அமைந்து ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு ஸ்வரம் மிகைந்து காணப்படுவது ஹுங்காரமாகும். உதாஹரணம்—ஸரிஸ; ஸரிகரிஸ; ஸரிகமகரிஸ, ஸரிகமபமகரிஸ; ஸரிகமபதபமகரிஸ; ஸரிகம நிததகபமகரிஸ (௨௩) என்பதாகும்.

ஹ்ராதமாநத்தின் கலைகளோ மந்த்ராதியே போன்று முடிவிலே ப்ரஸந்நத்தோடு காணப்படுவனவாம். உதாஹரணம்—ஸகரிஸ ரிமகரி; கபமக; மதபம; பநிதப (௨௪) என்பதாகும்

௫௨. ஏறு வரிசையிலும், இறங்கு வரிசையிலும் ஸமத்தின் நான்கு ஸ்வரங்களும் கலையாவதில் ஒவ்வொரு கலையிலும் இரண்டாவது ஸ்வரம் விடுத்து ஆவது அவலோகிதம் என்ற அணியாகும,

உதாஹரணம்—ஸகமமரிஸ; ரிமபப்கரி; கபததமக; மதநிரிபம (உரு) என்பதாகும்.

ருரு. ஸஞ்சாரியின் கீழ் முற்கூறிய வர்ணங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீகரணத்தலைவன் இவற்றையே அரோஹணத்திலே கூறி வலியுறுத்துவர். இவைகளே ஸஞ்சாரியின் வர்ணங்கள்.

ருச,ருரு. இசைநயமுணர்ந்தோர் மேலும் ஏழு அலங்காரங்களைக் கண்டுள்ளனர். என்னையோ? தாரமந்த்ரப்ஸந்நம்: மந்த்ரதாரப்ரஸந்நம்; ஆவர்த்தகம்; ஸப்ரஸாதம்; விதூதம்; உபலோலகம்; உல்லாஸிதம்; என்பனவாம் அவை. இப்பொழுது அவற்றின் விளக்கத்தையும் விவரிப்பாம்

ருசா-ருஎ இவ்வணிகளுக்கு ஒவ்வொரு படியிலும் முன்னதின் ஒரு ஸ்வரத்தை விடுத்து, இரண்டாவது ஸ்வரத்தோடு கலைகள் துவக்கப்படுகின்றன. எட்டாவது ஸ்வரத்தின் வரை ஏறுவரிசையில் இசைத்து முதல் ஸ்வரம் முதலில் துவங்குமாகில் அவ்வணியே தாரமந்த்ரப்ரஸந்நமாகும். உதாஹரணம்—ஸரிகமபதநிஸஸ (க) என்பதாகும்

ருஅ. கீழ் ஷட்ஜத்தில் துவங்கி, மேல் ஷட்ஜத்தைப் பாடிப் பின்னர் கீழ்ஷட்ஜத்தில் முடிக்க வேண்டும். மந்த்ரத்தினின்று ஏறி எட்-

டாவது ஸ்வரத்தைத் தழுவி ஏழுஸ்வரங்களிலும் முறையே இறங்குவதை சைவோபாஸகர்களில் தலைசிறந்த சார்ங்கதேவன் மந்த்ரதாரப்ரஸந்நம் எனச்சொல்லுவான். உதாஹரணம்— ஸஸநிதபமகரிஸ (௨) என்பதாகும்.

௫௯. முதல் இரண்டாவது ஸ்வரங்களை ஒவ்வொன்றும் இருதடவைகளில் இசைத்துப்பின் இரண்டாம் ஸ்வரத்தையும், முதல் ஸ்வரத்தையும் பாடுவது ஒரு கலையாம் இதே போல் மற்றவைகளையும் இசைப்பது ஆவர்த்தம் என்ற அணியாகும், உதாஹரணம்—ஸஸரிரிஸஸரிஸ: ரிரிககரிரிகரி; ககமம ககமக: மமபபமமபம: பபததபபதப. ததநிநிததநித (௩) என்பதாகும்.

௬0, ௬௧ இந்த ஆவர்த்தத்திலேயே கடைசியான இரு கலைகளை விடுத்துப் பாடுவதை இசைவல்லுனர்கள் ஸப்ரஸாதமென்னும் அணி என்பர். உதாஹரணம்—ஸஸரிரிஸஸ; ரிரிககரிரி: ககமமகக. மமபபமம; பபததபப. ததநிநிதத (௪) என்பதாம்.

நடுவிலுள்ள ஸ்வரம் இணையிணையாய், விடுபட்டு விடுபட்டவை அடுத்து இணையிணையாய் வருவதை அறிஞர் விதூதம் என்பர். உதாஹரணம்

—ஸகஸக; ரிமரிம; கபகப; மதமத; பநிபநி (ரு) என்பதாம்.

கூஉ. ஒரு கலையில் முதல் இருஸ்வரங்கள் சேர்ந்தும், அடுத்து மூன்றும் இரண்டும் சேர்ந்தும் இணையாய் இசைப்பது உபலோலம் என அறிஞர் கூறுவர். உதாஹரணம்—ஸரிஸரிகரிகரி; ரிகரிக மகமக; கமகமபமபம; மபமபதபதப; பதபதநிதநித (கூ) என்பதாகும்.

கூங. கலையை இசைப்பதில் முதல் ஸ்வரத்தை இரு தடவை பாடிய பின்னர், மூன்று, முதல், மூன்று என்ற முறையிலே பாடுவதை உல்லாஸிதம் என்பர். உதாஹரணம்—ஸஸகஸக; ரிரிமரிம; ககபகப; மமதமத; பபநிபநி (எ) என்பதாம். இவையே ப்ரஸித்தமான ஏழு அலங்காரங்களாம்.

கூச. இவ்விதம் ப்ரஸித்தமான அலங்காரங்கள் அறுபத்துமூன்று (கூங) என்னால் சொல்லப்பட்டன. அவையாவன — ஸ்தாயியையடைந்த அலங்காரங்கள் ஏழு (எ) ஆரோஹியிலே பன்னிரண்டு (கஉ). அவரோஹியிலே பன்னிரண்டு (கஉ). ஸஞ்சாரியிலே இருபத்தைந்து(உரு). மற்றவை ஏழு (எ) என்பர். மற்றும் இந்த வர்ணலங்காரங்கள் முடிவற்றவை ஆதலின் தத்துவத்திலே அவை

முற்றும் விளக்கப்படவில்லை. ரஞ்ஜகத்தன்மையைக் கைவரப்பெற்று ஸ்வரங்களிலே நிலைபெற்ற அறிவுடன் வர்ணங்களின் உருபுகளைக் கைக்கொள்ளல் மரபாம். அணிகளைக் கையாளும் நோக்கத்திற்கு இவை அவசியமெனவற்புறுத்தப்படுகின்றன.

வர்ணாலங்காரங்களுடைய விளக்கம் என்னும்
ஆறுவது ப்ரகரணம் இவண்முற்றும்

ஜாதிப்ரகரணம் எ.

க-ங. சுத்த ஜாதிகள் ஏழாகும் ஷட்ஜம் முதலான எஞ்சிய ஸ்வரங்களின் பெயரால் அவை அழைக்கப் பெறும். ஷாட்ஜீ; ஆர்ஷபீ; காந்தாரீ; மத்யமா, பஞ்சமீ; தைவதீ, நைஷாதீ என்பன அவை. அவை எங்ஙனம் சுத்தமானவை என்பதை ஈண்டு விளக்குவாம். பதவிகொண்ட ஸ்வரமே, ந்யாஸம், அபந்யாஸம், அம்சம் க்ரஹம் இவைகளில் தாரந்யாஸத்தினின்றும் ஸ்வதந்த்ரமாக பூரணமாயிருப்பின் சுத்தம் எனக்கொள்ளலாம். ஆதாரங்களிலே குறைந்தவைகளும் முற்கூறிய ந்யாஸத்தைக் காட்டிலும் ஏனையவை ஏறக்குறைய சுத்தமானவையாம்.

ச. பூரணங்களுள் க்ரஹம், அம்சம், அபந்யாஸம் இவற்றுள் ஒன்றையிழந்தோ மற்றவை பொருந்தியோ உள்ள *நான்குவகைகள் இருப்பனவாம். இரு நிலைகளிலே இழக்கப்பட்டால் ஆறுவகைகள் உள எனக் கருதப்படுகிறது.

குறிப்பு :—மூன்று நிபந்தனைகளை ஒரு ஜாதி நிறைவேற்றும் பொழுது மாத்திரமே விக்ருதங்களின் நான்கு வகைகளாகக் காணப்படும். அவை—

௫. மூன்று நிலைகளையும் இழந்து விடப்படுமாகில் அப்பொழுது நான்கு வகைகளே உள்ளன. நான்கு ஸ்தாநங்களையும் இழக்குமாகில் அப்பொழுது ஒரே ஒரு வகைதான் உள்ளது. இவ்-

---

யாவன—(க) அவை பூரணத்தன்மையைப் பெற்றிராது. (உ) க்ரஹத்தில் ஷட்ஜத்தைப் பெற்றிராது. (௩) அம்சமாக அவை ஷட்ஜத்தைப் பெற்றிராது. (௪) அபந்யாஸத்திலும் அவை ஷட்ஜத்தைப் பெறாதனவாம். எனவே முற்கூறிய நான்கு ஆதாரங்களினின்றும் இருவகைகள் பற்றுக்குறையாய் இருப்பின் அப்பொழுது அவை ஆறுவகைகளாகும். என்னையோ ? (க) பூரணத்—தன்மை பெறாமலும், ஷட்ஜத்தை க்ரஹமாகப்-பெறாமலும் உள்ளவை. (உ) முற்றுப் பெறாமல் அம்சத்தில் ஷட்ஜத்தைப் பெறாதவை. (௩) பூர்த்தியாகாமல் அபந்யாஸத்தில் ஷட்ஜத்தைப் பெறாதவை. (௪) க்ரஹம், அம்சம், இரண்டிலும் ஷட்ஜத்தைப் பெறாதவை. (௫) க்ரஹம் அபந்—யாஸம் இரண்டிலும் ஷட்ஜமில்லாதவை. (௬) அம்சம், அபந்யாஸம் இரண்டிலும் ஷட்ஜம் இழந்தவை, என்பன அவ்வாறு பிரிவுகளும்.

வகையான பதினைந்து வகைகளையே இசை-நுணுக்கமறிந்த பெரியோர் ஷாட்ஜீ ஜாதி எனக் கண்டுள்ளனர்.*

*குறிப்பு—மூன்று இடங்கள் குறைபாடுடையவை-யாயிருப்பின் அப்பொழுது நான்கு வகைகள் உள. (க) க்ரஹம், அம்சம் இரண்டிலும் ஷட்ஜத்தைப் பெறுததும், பூரணமற்றதும், (உ) அம்சம், அபந்யாஸத்தில் ஷட்ஜத்தை இழந்ததும், முற்றுப் பெறுததும், (ங) ஷட்ஜத்தை க்ரஹம், அபந்-யாஸம் இரண்டிலும பெறுமலும், பூரணமற்றதும், (ச) க்ரஹம் அம்சம, அபந்யாஸம் மூன்றிலும் சுத்தஷட்ஜத்தைப் பெறுதவைகளுமாம். நான்கு நிலைகளுமே குறைபாடுடையதாயின் அப்பொழுது காணபபடுவது ஒரே ஒரு வகையாம். அவை பூரணமற்றதும், ஷட்ஜத்தை க்ரஹம், அம்சம், அபந்யாஸம் இவற்றில் பெறுதனவுமாம். எனவே ஷாட்ஜீ ஜாதிவகைகள் பதினைந்து (கரு) எனக் காண்க. அதாவது—

ஒன்று குறைந்த ஆதாரத்திலே	பிரிவுகள்	ச.	கரு
இரண்டு குறைநத ஆதாரத்திலே	,,	சு.	
மூன்று குறைந்த ஆதாரத்திலே	,,	ச.	
நான்கு குறைநத ஆதாரத்திலே	,,	க.	

ஸூ. இனி பூரணத்தின் எட்டு ஸ்வரங்கள் சூந்யமாக உள்ளன. என்னையோ? ஏழு மற்றவைகளினின்றும் சூந்யமாயுள்ளனவாகலின். பூரணத் தன்மைக்கு சூந்ய இடமானவை எனப்படும். அவை ஷாடவம், ஔடுவம் என இருவகைப்படும் *

---

*குறிப்பு—முற்கூறிய எட்டு வகைகளாவன—முதற் தொகுதியிலே முதலாவதும், இரண்டாவது தொகுதியிலே முதல் மூன்றும், மூன்றாவது தொகுதியிலே முதல் மூன்றும், நான்காவது தொகுதியிலே முதலுமாகும். ஏனைய ஏழுவகைகளில் க்ரஹம், அமசம், அபந்யாஸம் இவைகளைப் பொறுத்துக் குறையீடுடையன. ஸப்த (ஏழு) ஸ்வரங்களையும் இசைக்கும்பொழுதே தான் பூரணத்தன்மையாம். ஒரு ஸ்வரமோ, அன்றி இரண்டு ஸ்வரங்களோ விடுபட்டு இசைப்பது பூரணமற்றவையாம். அஃதாவது ஒன்றையோ அன்றி இரு ஸ்வரங்களையோ நீககி ஒலிப்பதாகும். ஒரு ஸ்வரம் இழந்து ஏனைய ஆறு ஸ்வரங்களும் காணப்படின் அஃது ஷாடவமாகும். இரு ஸ்வரங்கள் நீங்கி ஏனைய ஐந்து ஸ்வரங்களும் தோன்றுமாயின் அஃது ஔடுவமாம்.

ஏ. ஔடுவஜாதியிலே ரிஷபத்தினின்று துவங்குவதில் முன்னதைவிட இன்னும் எட்டு வகை அதிகமாயுள்ளன. எனவே இந்த ஆறு வகை-களிலே ஒவ்வொன்றிலும் இருபத்து மூன்று (உ௩) வகைகள் எனத் தெரிகின்றன.*

---

*குறிப்பு—விக்ருதஜாதிக்குள் பூரணத்தன்மை பெரு-தவைகளினூடே எட்டுவகைகள் உள்ளனவென்று நாம் இப்பொழுதான் கவனித்தோம். இந்தப் பூரணத்தன்மை ஷாடவ, ஔடுவத்தன்மைகளி-னால் உண்டாகக்கூடும் என்க. இவ்வண்ணம் நோக்குழி பதினாறு வகைகள் உள்ளனவாம். எனினும் ஷாட்ஜீ ஜாதியிலோ ஷாடவத்தன்மை-யூடே பூரணமாகாமலிருப்பதால் பூரணமற்றவை-களும் எட்டுவகைகளே உள்ளன. மேலும் ஆர்ஷபீ முதல் உள்ள ஆறு ஜாதிகளிலும் ஷாடவத் தன்மை அல்லது ஔடுவத்தன்மை இரண்டாலும் பூரணமற்றவைகள் ஏற்படக்கூடும். அவ்வண்ணம் கணிக்குமிடத்துப் பதினாறு வகைகளை நாம் காண லாம். இவ்விதம் இந்த ஆறு வகைகளிலும் ஒவ்-வொன்றிலும் இருபத்து மூன்று (உ௩) வகைகள் உள்ளன. விக்ருதஜாதிகளின் பெருமொத்தம் ஏழு ஜாதிகளிலும், சு×உ௩+க௫=க௫௩ ஆகும்.

அ-௯. ஏறக்குறைய ஒப்பக்கூடியவை-களின் சேர்க்கை ஸ்வரங்களுடே இன்னும் பதி-னேரு வகை உள்ளனவென்று கூறுவர். அவையா-வன—ஷட்ஜகைசிகீ; ஷட்ஜோதீச்யவா; ஷட்ஜ-மத்யமா; காந்தாரோதீச்யவா; ரக்தகாந்தாரீ; கைசிகீ, மத்யமோதீச்யவா, கார்மாரவீ, காந்தார-பஞ்சமீ; ஆந்த்ரீ; நந்தயந்தீ என்பனவாம்

௧0-௧௧. இனி அவற்றின் ஆதாரங்களை விளக்குவாம் ஷட்ஜகைசிகீ; ஷாட்ஜீ, காந்தாரிகா இவற்றின் சேர்க்கையால் உண்டாக்கப்படுகின்றது. ஷட்ஜிகா, மத்யமா இவ்விரண்டின் சேர்க்கையும் ஷட்ஜமத்யமமாகும். இன்னும் காந்தார பஞ்சமியோ; காந்தாரம், பஞ்சமம் இவற்றின் சேர்ந்த தொகுதி-களாகும்.

௧௨-௧௩. காந்தாரம், ரிஷபம் இவற்றிலே கலந்த தொகுதிகளே ஆந்த்ரீஜாதியாம். ஷட்ஜம், காந்தாரம், தைவதம் இவை மற்ருேர்புடை இணைந்து ஷட்ஜோதீச்யவதீ என்பதைத் தோற்று-விக்கின்றன. மீண்டும், நிஷாதம், பஞ்ச-மம், ரிஷபம் இம்மூன்றும் இணைந்த தொகு-திகளே கார்மாரவீ என்பது தோன்றக் காரண-மாகின்றன.

கச-கரு. மற்றும், காந்தாரம், பஞ்சமம், ரிஷபம், இம்மூன்றும் சேர்ந்த அணியே நந்தயந்தீ-யாகும். தைவதீ, ஷாட்ஜீ, மத்யமா இவை இணைந்து விரவித் தொகுப்பின் காந்தாரோதீச்ய-வத்தை எழுப்புகின்றன. முற்கூறிய ஸ்வரங்களே ஷாட்ஜியை விடுத்து பஞ்சமியோடு கலந்து காணப்படின் அஃது மத்யமோதீச்யவமாம் முற்கூறிய ஸ்வரங்களும் (கசல்) தைவதமின்றி இணைந்து ஒலிப்பின் அஃது ரக்தகாந்தாரியாகும். ரிஷபம், தைவதமின்றி ஏனைய ஐந்து ஸ்வரங்கள் இணைந்து இசைப்பதே கைசிகீ எனப்பெறும்.

கஎ. தத்தம் பெயர்களில் ஷட்ஜகாலத்தோடு கூடிய நான்கும், நிஷாதமும், அவ்வண்ணமே தைவதமும், ரிஷபமும் இந்த ஏழும் ஷட்ஜக்ராமத்தின் ஜாதிகளாகும்.*

கஅ-உ0. எஞ்சிய ஜாதிகள் மத்யமக்ராமத்-தைச் சார்ந்தவை. இனி ஸம்பூரணம், மற்றக்

*குறிப்பு—குறிப்பிட்ட மூன்றும், ஷாட்ஜீ, ஆர்ஷபீ, தைவதீ, நைஷாதீ நான்கும் ஆக ஏழும் ஷட்ஜக்-ராமத்தின் ஜாதிகளாம். ஏனையவை மத்யமக்—ராமத்தின் ஜாதிகளாம், எனவே ஆசிரியர் காலத்-திலே மத்யமக்ராமம் நடைமுறை நன்கு கையாளப் பட்டது எனக்கொள்க.

குறிப்புக்கள் இவைகளைப்பற்றி விளக்குவாம். கார்மாரவீ, காந்தாரபஞ்சமீ, ஷட்ஜகைசிகீ, மத்யமோதீச்யவா இவை எப்பொழுதும் பூரணங்களே. ஷாட்ஜீ, ஆர்ஷபீ, காந்தாரோதீச்யவா இவைகள் ஷாடவங்கள் ஆதலின் பூரணங்களாகக் கொள்ளலாம் என மஹர்ஷி காச்யபர் வலியுறுத்துகிறார். ஏனைய பத்தும் ஷாடவஔடுவங்களால் பூரணமானவை எனக் கொள்ளப்படுகின்றன.

உக. பரதர் முதலானவர்கள் ஜாதிகளிலே ஸ்வரஸாதாரணத்தைப் பிரயோகித்தே பஞ்சமீ, மத்யமா, ஷட்ஜமத்யமா எனப் பெயர்களைப் பெறுவன என்பர்.*

உஉ. தத்தம் விக்ருதிகளுக்கிணங்க ஷட்ஜமத்யமபஞ்சமங்கள் அம்சங்களாக வருகின்ற விஷயத்தில் இது பொருந்தும். கம்பளர், அச்வதரர் ஏனைய பிறரும் நிஷாதகாந்தாரம் அருமையாயுள்ள இம்மாதிரி ஜாதியிலே இதைப் ப்ரயோகிக்கின்றனர்.†

* குறிப்பு—ஐந்தாவது ப்ரகரணத்திலே ஸ்வரஸாதாரணம் விளக்கப்பட்டுள்ளது.

† குறிப்பு—தனிவிதிகள் ஐந்தாவது ப்ரகரணத்திலே ௬, ௯, ௬௩-வது ச்லோகங்களிலே விளக்கியுள்ளன.

௨௫. ராகங்களிலும் பாஷைகளிலும் கூட இரு ச்ருதிகள் அரிதாகி அது ஒப்பப்படுகின்றது. நிஷாதமும், காந்தாரமும் ஷட்ஜமத்யமத்திலே அம்சமாகும்பொழுது அஃது அமையாதென்க.*

௨௪-௨௫. அதிலேயும் கூட ஸாதாரணமாக மதிக்கத்தக்க ஸ்வரங்களும் ஸ்வரஸாதாரணத்திற்கு ஆதாரங்களாகின்றன. நந்தயந்தீ, மத்யமோதீச்யவா, காந்தாரபஞ்சமீ இவை மூன்றும் ஒரே அம்சத்தைப் பெற்றுள்ளன. ஆனல் தைவதீ, காந்தாரோதீச்யவா, பஞ்சமீ இவை இரண்டு அம்சங்களைக் கொண்டவை எனக் கூறப்படுகின்றன.

௨௬. நைஷாதீ, ஆர்ஷபீகா, ஷட்ஜகைசிகீ இவை மூன்று அம்சங்களைப் பெற்றவை. ஆந்த்ரீ, கார்மாரவீ, ஷட்ஜோதீச்யவா இம்மூன்றும் நான்கு அம்சங்களைக் கொண்டவைகள்.

௨௭. ரக்தகாந்தாரீ, காந்தாரீ, அவ்வாறே மத்யமம், ஷாட்ஜீ இவை ஐந்து அம்சங்களைப் பெற்றவைகள். கைசிகீ மாத்திரமோ என்றால் ஆறு அம்சங்களோடு விளங்குவதாம்.

*குறிப்பு—இராகங்கள் பாஷைகள் இவை தொடர்ந்த அத்யாயத்திலே விளக்குவாம். இருச்ருதி—க, நி இவற்றிற்கு இருச்ருதிகளே.

உஅ. இசைக் கலையுணர்ந்தோர் ஷட்ஜமத்யமத்திற்கு ஏழு அம்சங்களென வரையறுத்துள்ளனர். இவ்வண்ணம் பதினெட்டு ஜாதிகளிலே அறுபத்து மூன்று (சாங) அம்சங்கள் உள்ளன.

உகூ-ங0. க்ரஹம், அம்சம், தாரம், மந்த்ரம், அவ்வாறே ந்யாஸம், அபந்யாஸம், ஸம்ந்யாஸம், (மிகுத் தொலித்தல், அரிதாகி ஒலித்தல்) இவை அந்தரமார்கத்தோடு உள்ளன. சிற்சில இடங்களிலே இவைகளை ஷாடவங்களாகவும், ஔடுவங்களாகவும் மாற்றப்படுகின்றன. ஜாதிகளிலே இம்மார்கங்களின் குறிகள் பதின்மூன்று (கங) என்க.*

ஙக. ஒரு கீதத்தின் துவக்கத்திலே உள்ள ஸ்வரமே அதன் க்ரஹம் எனப்படுகிறது. க்ரஹம், அம்சம் இவற்றுள் யாதானும் ஒன்றைக் குறிப்பிடுவோமாகில் அஃது அவ்விரண்டையுமே தெரிவிக்கும் †

---

* குறிப்பு—ஜாதிகள் ஒன்றோடொன்று விளங்குமாறு வேறுபடுத்தும் பதின்மூன்றுவகைகளை ஈண்டு விவரிக்கப்பெறும். பஹுத்வம (அதிகம்) அல்பத்வம் (குறைவு) இவை இரண்டையும் தொடர்ந்து அந்தரமார்கத்தையும் கீழே கூறுவாம்.

† குறிப்பு—க்ரஹம் பண்ணின் ஆரம்பத்திலே

௫௨. ஒரு பண்ணிலே ரஞ்ஜகத் தன்மையை நிலைக்கச் செய்வதும், தாரம், மந்த்ரம் இருஸ்தாயி-களையும் நிதாநித்தறியவும், விதாரியிலே (இசை-யின் ஒரு பகுதி) விஞ்சியும், ஸம்வாதி, அநுவாதி இவைகளுடன் கூடியுள்ளது முற்கூறிய க்ரஹ-அம்சமேயாம்.

௫௩-௫௪. ந்யாஸம், அபந்யாஸம், ஸம்ந்யாஸம், க்ரஹம் இவைகளாகத் தானேயோ, அல்லது தன்னுடைய ஸம்வாதிஅநுவாதிஸ்வரமாக வேறு-கவோ ப்ரயோகத்திலே பஹுத்வமாக (விஞ்சி) உள்ளதாம் அஃது. அவ்வம்சம் தனது தகுதிக்-கேற்ப வாதியாகப் பண்ணில் அமையும். எனவே அம்சத்தின் விளக்கம் கையாளுவதில் விளக்கமுற விஞ்சியிசைப்பதாம் *

உள்ளது. ஜாதிகளின் விளக்கத்திலே இவ்விரு ஆதாரங்களில் ஒன்றோ அன்றி இரண்டோ எதைக் குறித்தாலும், அஃது அவ்விரண்டினையுமே குறிக்-கும் என்க. க்ரஹத்தைப்பற்றிய இலக்கணம் அம்சத்துக்கும் பொருந்தும்.

* குறிப்பு—அம்சத்தின் ஆதாரங்களும், அமைப்பு-களும் பின்வருமாறு உள்ளன.

(க) இசையின் ரஞ்ஜனையை நிலைக்கச் செய்கிறது.

௧0௯. ஹ்ருஷ்யகம் இதற்கு மூர்ச்சனையாம். முன்னதேபோன்ற தாளமே இதற்கும். ஆனல் கலைகளோ முப்பத்திரண்டாம். முதற் ப்ரேக்ஷணகத்திலே த்ருவாகாணப்பண்ணிலே இதன் விநியோகம் அமைந்துள்ளது.*

---

*குறிப்பு—அம்சத்திற் சொல்லப்பட்ட பண்புகள் க்ரஹத்திற்கும் பொருந்தும். அவ்வழி பஞ்சமமே இதில் க்ரஹமாகின்றது. இஃது ஒரு விதி விலக்கேயாம். பின்னர்ச் சிலரும் பஞ்சமமே க்ரஹம என்பர். மூர்ச்சனை ஹ்ருஷ்யகமாகும்.

இந்த நந்தயந்தியிலோ காந்தாரம் ந்யாஸமா-கும். மத்யமமும், பஞ்சமமும் அபந்யாஸங்களாம். அதன் விரவலோ வருமாறு:—

க. கா கா கா கா பா பா தப மா
ஸௌ

உ. தா தா தா தா தா நீ ஸரிரி தா.

ங. பா பா பா பா பா பா பா பா
ம்யம்

ச. தா நீ மா பா கா கா கா கா
வே தாங் க வே த

ரு. மா ரீ கா கா கா கா கா கா
க ர க ம ல யோ நிம்

சு. மா மா பா பா தா நித பா பா
த மோ ர ஜோ வி வர்

எ. தா நீ மா பா கா கா கா கா
ஜி தம்

அ. கம பா பா பா மா மா கா கா
ஹரம்

கூ தா நீ மா பா கா கா கா கா
ப வ ஹ ர க ம ல க்ரு

கO. மா மா மா மா மா மா மா மா
ஹம்

௧௧.	ரீ	கா	மா	பா	பம	பா	பா	நீ
	சி	வம்	சாந்		தம்	ஸந்		நி
௧௨.	ரீ	ரீ	ரீ	ரீ	பா	பா	மா	மா
	வே		ச	ந	ம	பூர்		வம்
௧௩.	தா	நீ	ஸநிநி	தா	பா	பா	பா	பா
	பூ	ஷ		ண	லீ		லம்	
௧௪.	தா	நீ	மா	பா	கா	கா	கா	கா
	உ	ர	கே		ச	போ		க
௧௫.	கா	பா	பா	பா	தா	மா	கா	மா
	பா		ஸா	ர	சு	ப	ப்ரு	து
௧௬.	தா	தா	நீ	தா	பா	பா	பா	பா
	லம்							
௧௭.	ரீ	கா	மா	பா	பம	பா	பா	நீ
	அ	ச	ல	ப	தி	ஸு	நு	
௧௮.	ரீ	ரீ	ரீ	ரீ	பா	பா	பந	பா
	க	ர	பங்		க	ஜா		ம
௧௯.	பா	பா	பா	பா	தா	மா	மா	மா
	ல	வி	லா		ஸ	ஸீ		ல
உ0.	நீ	பா	கா	கம	கா	கா	கா	கா
	ந	வி	நோ		தம்			
உ௧.	ரீ	ரீ	கா	கா	மா	மா	மா	மா
	ஸ்ப	டி	க	ம	ணி	ர	ஜ	த
உஉ.	நீ	பா	நீ	மா	நீ	தா	பா	பா
	ஷி	த	ந	வ	து	கூ		ல

௨௩.	ஸ	ஸ	தநீ	தா	பா	பா	பா	பா
	க்ஷீ		ரோத		ஸா			க
௨௪.	மா	பா	மா	பரிக	கா	கா	ஸா	ஸா
	ர	ரி	கா		சம்			
௨௫.	ரீ	ரீ	கா	கா	மா	மா	பா	பா
	அ	ஜ	சி	ர:	க	பா		ல
௨௬.	ரீ	ரீ	ரீ	கா	மா	ரிக	மா	மா
	ப்ரு	து	பா			ஜ	நம்	
௨௭.	மா	நீ	பா	நீ	கா	கா	கா	கா
	வந்		தே		ஸு	க	தம்	
௨௮.	மா	மா	பா	பா	தா	தநி	நித	மா
	ஹ	ர	தே		ஹ	ம	ம	ல
௨௯.	தா	தா	ஸா	நீ	தா	நீ	பா	பா
	ம	து	ஸூ		த	ந		ஸு
௩௦.	ரீ	ரீ	ரீ	ரி	மா	பா	தா	மா
	தே		ஜோ		தி	க		ஸு
௩௧.	நீ	நீ	நீ	நீ	தா	பா	மா	மா
	க	தி	யோ					
௩௨.	மா	பரிக	கா	கா	கா	கா	கா	கா
			கிம்					

பண்

ஸௌம்யம்-வேதாங்க-வேத-கர-கமல-யோகிம்-
தமோ ரஜோ-விவர்ஜிதம்-ஹரம்;

பவ-ஹர-கமல-க்ரஹம்-சிவம்-சாந்தம்-
ஸங்கிவே-சந-மபூர்வம் ;

பூஷண-லீல-முரகேச-போக-பாஸுர-
சுப-ப்ருதுலம்;

அசலபதி-ஸுநு-கர-பங்கஜாமல-
விலாஸ-கீலந-விநோதம்;

ஸ்படிக-மணி-ரஜத-ஸித-நவ-துகூல-
க்ஷீரோத-ஸாகர-நிகாசம்;

அஜ-சிர:-கபால-ப்ருது-பாஜநம் வந்தே-ஸுகதம்;

ஹர-தேஹ-மமல-மதுஸுதந-
ஸுதேஜோதிக-ஸுகத-யோகிம்;

௧௧0. ஜாதிகளின் விவரங்களில் ஈண்டு குறிப்பிடப்படாதவைகளுக்குப் பின்வரும் விளக்கம் செய்யப்படுகின்றது. ஏக கலையோடு துவங்கும் தாளம் மூன்று வகைகளையும் பெற்றதென்க. மார்கங்களோ; சித்ரா, வ்ருத்தி, தக்ஷிணா, என்ற மூவகைகளையும் கொண்டதென்க. கீதிகளோ;

௧௧௧. முறையே, மாகதீ, ஸம்பாவிதா, ப்ருதுலா எனக் கொள்ளவேண்டும். கலைகளின் ஸங்கியையோ தக்ஷிணமார்கத்தில் தொகுத்துக் கூறியதே என்க.

௧௧௨. வ்ருத்திக்குரிய மார்கத்திலே முற்கூறி கலைகளின் ஸங்க்யை இரட்டிப்பாகும். சித்ரா மார்கத்திலோ, அஃது தக்ஷிணமார்கத்தினும் நான்கு மடங்கு கொண்டதாகும். எல்லா ஜாதி-

களிலும் அம்சஸ்வரங்களின் சுவைகளை ஒட்டியே ரஸம் உணரப்படுவதாகும். *

கககூ, ககச. இசையுணர்ந்தோர் இராகங்களின் வடிவாயதத்துவங்களை மூலாதாரஜாதி-

* குறிப்பு—ஷாட்ஜீஜாதியிலுள்ளதே போன்று சில இடங்களில் ஒரே கலை, மூன்று மார்கம், மூன்று-கீதிகள், இவை கொடுக்கப்பட்டுள்ளன. தைவதியிலோ தாளம் முதலியவை ஷாட்ஜியில் உள்ளனவே எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆர்ஷபீ போன்றவைகளில் சச்சத்புடதாளம் என்றும் குறிப்பிட்டுள்ளோம். எனவே அவற்றையே விரிவாகக் கூறுவாம். விளக்கம் கொடாதவைகள் மூன்றுவகை தாளங்கள் பெறும் என்ப. அவ்வண்ணமே மார்கங்களிலும், கீதிகளிலும், கொள்ளத்தக்கவை தக்ஷிண மார்க்கத்திற்கு உள்ள கலைகள் எவ்வளவோ அவ்வளவு இரட்டிப்பான கலைகள் விருத்தி மார்கத்திற்கும் என்க. சித்ரா-மார்கத்திற்கோ, தக்ஷிணமார்கத்தைப் போலவே நான்குமடங்காகும் என்பர். என்னையோ? தக்ஷிண மார்கம் எட்டு லகுக்களுடன் பன்னிரண்டு கலைகளையும், வ்ருத்திமார்கம் நான்கு லகுக்களுடன் இருபத்தினன்கு கலைகளையும், சித்ராமார்கம் இரண்டு லகுக்களுடன் நாற்பத்தெட்டு கலைகளையும் பெறுவனவாகலின்.

களிலே கண்டுள்ளனர். ப்ரஹ்மதேவரால் முதலில் உத்காதம் செய்யப்பட்ட இந்த ஜாதிகளை நேரிய வழியிலே இசைப்போன் ஸ்ரீசங்கரரையே வழி-படுவதால் ப்ரஹ்மஹத்தி முதலிய பாபங்களினின்-றும் விடுபடுகின்றான். ரிக்குகள், யஜுஸ்ஸுகள், ஸாமன்கள் எவ்விதம் மாற்றவோ, திரித்துக். கூறவோ முடியாதனவோ, அவ்விதமே ஸாமன்-களினின்றும் பதங்களாய் அமைந்த இந்த ஜாதிகளும் மாற்றவும், திரித்துக்கூறவும் கூடாதனவே யாம். எனவே வேதங்களுக்கு இவை ஒப்பாவன.

குறிப்பு—ஷாட்ஜியில் வராடீ காணப்படுகின்றது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. சில ஜாதிக-ளிலே இராகங்களின் தோற்றம் கூறப்படவில்லை. ஜாதிகளினின்றும் இராகங்கள் தோன்றுகின்றன. சில ஜாதிகளின் ஆதாரங்களே மூலாதாரமாகி இராகங்களுக்கு அமைப்பைக் கொடுப்பனவாம். "இஃது காணப்படுகின்றது" என்ற குறிப்பிலே இராகங்களின் பேதங்களும் காணப்படுகின்றன. எனவே ஜாதிகளும் வேதங்களைப் போன்றே பயி-லத்தக்கவைகளும் மாற்றவும், திரித்துக் கூறவும் முடியாது உள்ளனவெனக் கொள்க.

ஜாதிகளின் விளக்கம் என்னும்
ஏழாவது ப்ரகரணம் இவண்
முற்றும்.

௫. சுத்த ஜாதிகளினின்றும் வடிக்கப்பட்டுள்ள கபாலங்களைப்பற்றி ஈண்டு கூறுவாம். ஜாதிகளினின்றும் உண்டாகிய இராகங்களையும் அவ்வவற்றிற்குரிய கபாலங்களுடன் ஒப்பு நோக்கத்தக்கவைகள்.

குறிப்பு—முதற்பிரிவிலே முப்பத்தாறுவது ச்லோகத்திலே ஜாதிகளையும், க்ரஹம், அம்சம் முதலியவைகளையும் விளக்கப்பட்ட பின்னர் கபாலம், கம்பளம் என்ற தலையங்கமுள்ளது. எனவே எண் முறையிலே கபாலத்தை ஈண்டு கூறுவது மரபேயாம். அத்துடன் கம்பளத்தையும், கீதிகளையும் இப்பிரிவிலே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இனிக் கபாலமோ ஒரு ஜாதியின் ஒரு மாறுதலைக்காட்டுவதேயாகும். ஸ்பத (ஏழு) ஸ்வரங்களுக்கும் முறையே ஏழு சுத்தஜாதிகளும் உண்டு. எனவே சுத்த ஜாதிகளினின்றுதான் கபாலங்கள் தோன்றுகின்றன. விக்ருதஜாதிகளுக்கு அவை இல்லை என்க. என்னையோ? விக்ருதங்களோ சுத்த ஜாதியின் சேர்க்கையாலேயே உண்டாகின்றனவாகலின், குறிப்பிட்ட ஒரு ஜாதியினின்றும் உண்டாகிய இராகத்திற்கும்,கபாலத்திற்கும் ஒற்றுமைக் குறிகள் உள. மட்கலத்தில் சிதைந்த துண்டுக்கே கபாலம் எனப்பெயர். அடுத்த அத்தியாயத்திலே இராகத்தின் பகுதிகளாக அச்சிதைவுகளைக் காட்டுவோம். மட்கலத்தின் பகுதி எங்ஙனம் அக்கலத்தையே உணர்த்துமோ அங்ஙனமே கபாலம்-இராகத்தின் பகுதியை உணர்த்துவதாகும். இப்-

உ. ஷட்ஜமே க்ரஹம், அம்சம், அபந்யாஸமாகும். காந்தாரம் ந்யாஸமாகும். காந்தாரம், மத்யமம் இரண்டும் †மிக்கொலியுடையவை. ரிஷபம், பஞ்சமம் நிஷாதம், தைவதம் இவை ‡அபூர்வம். ரிஷபம் *புறக்கணிக்கத் தக்கது. பன்னிரண்டு கலைகள் இதற்குள்ளன.

பகுதிகள் இராகங்களின் இயல்பை ஒருவாறு தெரிவிப்பதால் இவை கபாலங்களென அழைக்கப்பெறுகின்றன. இஃது கல்லிநாதரின் கூற்றும்.

இஃதை ஒட்டிய புராண வரலாறும் ஒன்றுளது. முன்னர் துறவியாய சிவபெருமான் ஷாட்ஜீ முதலிய ஜாதிகளைப் பாடிக்கொண்டே திரிந்தார். ஜீவகளையும், சுவைமிக்கதாயுமுள்ள அப்பதங்களைச் சிரமீதிருந்து கேட்ட இளம்பிறை உருகி அவரது கரத்திலும், மார்பகத்திலும் அமுதமாக இழிந்தோட, மாலையாயணிந்திருந்த ப்ரஹ்ம கபாலங்கள் உயிர்பெற்று அவரைப் போன்றே ஜாதிகளைப்பாடின. எனவே அவை கபாலங்களால் பாடப்படுவனவாதலின் கபாலங்கள் எனப் பெயர் பெற்றன.

† மிக்கொலி - அதிகவொலி.

‡ அபூர்வம் - அற்பவொலி.

*. புறக்கணித்தல் - ஸ்வரத்தைத்தாண்டி விரைந்து செல்லல்—லங்கனம்.

௩. இவ்விதம் விவரிக்கப் பெற்றதே ஷாட்ஜீகபாலமென்று இசைவல்லுநர் கூறுவர். ரிஷபம் அம்சமாகியும், அபந்யாஸமாகியும், மத்யமம் முடிந்தும் இருப்பின் அப்பொழுது காந்தாரம், நிஷாதம், பஞ்சமம், தைவதம் இவை அற்பமானவைகளாம்.†

௪. ஷட்ஜம் மிகநுட்பம், எட்டே கலைகள். இஃது ஆர்ஷபியைக்குறிக்கும் கபாலமாகும். மத்யமமே அம்சம், க்ரஹம், ந்யாஸம், அபந்யாஸம் யாவும் தைவதம் மிக்கொலியுடையவை. *

௫. ஸ, ரி, க இவை அற்பமாயும், ரிஷப, பஞ்சமத்தை இழப்பதால் ஔடுவமும் உண்டாகி எட்டே கலைகளோடு கூடியது காந்தாரீகபால மாகும்.

௬. மத்யமமே அம்சமாகி நி, ரி, க, ப, இவை மிகநுட்பமாகி ஒன்பதே கலைகள் கொண்டு விளங்

†குறிப்பு—முடிந்து-நியாஸமாகி.

*குறிப்பு—மிகநுட்பம் - மிகவும் அல்பம். காந்தாரீ கபாலத்தை விளக்குவகையிலே காந்தாரமே அம்சம் முதலியவை எனப்படுவதும் உண்டு. ஆனால் ஸிம்ஹபூபாலரோ மத்யமமே அம்சம் முதலானவை என்று விளக்கமுறத் தெளிந்துரைப்பர்.

குவது மத்யமகபாலமாகும். இஃது நிஷ:சங்கரால் கூறப்பட்டதாகும்.

எ. அம்சம், க்ரஹம் இவை ரிஷபமாகி நி, த, ஸ, கம இவை அற்பமாகி எட்டே கலைகள் கொண்டது பஞ்சமீகபாலம் என அறிஞர் கூறுவர்.*

அ. ரிஷபம், காந்தாரம் அபூர்வமாகியும், பஞ்சமம் ந்யாஸமாகியும், மத்யமம், தைவதம் இவை மிக்கொலித்தும் (ஏணையவை) ஷாட்ஜியிலுள்ளனவே போன்று காணும் கபாலம் எட்டே கலைகளுடன் விளங்கும் தைவதீ கபாலமாம்.

கூ. ஷட்ஜம் க்ரஹம், அம்சம், ந்யாஸமாகவும், ரிஷபகாந்தாரம் நுட்ப ப்ரயோகமாகவும், அத்துடன் நிஷாததைவதமத்யமங்கள் மிகமிக் கொலிப்பத்துமாய இஃது நைஷாதீ கபாலமாகும்.

கO. இவ்வேழு கபாலங்களையும் பத-ஸ்வரங்களால் ப்ரஹ்மதேவர் துதித்தது போல் எவர் ஸ்ரீ-பார்வதீபதியைத் துதித்து இசைக்கின்றார்களோ அவர் பல நல்லாசிகளால் அலங்கரிக்கப்படுகின்றார்.†

*குறிப்பு—மிக நுட்பம்-அற்ப ப்ரயோகம். நிஷ:சங்கர்-ஐயந்தெளிந்தவர்-ஸந்தேஹம் தெளிந்தவர். நூலாசிரியரேயாவர்.

†குறிப்பு—பார்வதிபதி-சிவபெருமான். நல்லாசி-கல்யாணங்கள்.

௧௧. பஞ்சமம் க்ரஹம், அம்சம், அபந்யாஸமாகி; மேலும் ரிஷபம் மிக்கொலித்தும், ஷட்ஜம் ந்யாஸமாகியும், ஆனால் மத்யமமும் தைவதமும் காந்தாரமும் அபூர்வப்ரயோகங்களாகியும் காணப்படுவது கம்பளமாம்.

௧௨. இஃது பஞ்சமீ ஜாதியினின்று பிறந்ததாகும். பழம்பெரு புலவர் பலரால் இதனுடைய அற்பம், மிக்கொலித்தல் போன்ற ஸ்வரவகைகளால் இஃது எண்ணற்ற வகைகள் உள்ளன என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

௧௩. கம்பளத்தைத் திறனுடன் இசைத்தவன்மையால் சிவன் முன்பு தமது ஆபரணமாய கம்பளத்திற்கு ஒரு வரமருளினர் என்பது வரலாறு. இன்றும் ஸ்ரீ உமாபதி இக்கம்பளங்களால் துதிக்கப் பெறுகின்றாரன்றோ! *

---

*குறிப்பு — இப்பண்முறை பஞ்சமீஜாதியினின்றும் உண்டாயதாகும். சிவபெருமானின் ஆபரணமாய கம்பளம் என்ற அரவவேந்தன் இஃதை இசைத்ததால் இப்பெயர் வரலாயிற்றென்பாருமுளர். பஹுத்வம், அல்பத்வம் (நிறைவு, குறைவு) இவைகளின் காரணமாக இஃது அநேக வகைப் படும் என்பர். ஈண்டு அதன் விரிவு விடுத்தனம்.

கச. ப்ரஹ்மதேவரால் உச்சரிக்கப் பெற்ற கபாலங்களுக்குரிய பதங்களின் முறையை வரு-மாறு கூறுவாம். *

(அ) ஷாட்ஜீ கபாலத்தின் பதங்களாவன—ஜண்டும். ஜண்டும் (க) கட்வாங்கதரம் (உ) தம்-ஷ்ட்ராகராளம் (ங) தடித்ஸத்ருச ஜிஹ்வம் (ச) ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ (ரு) பஹுரூபவதனம் கநகோர நாதம் (சா) ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ (எ) ஊம் ஊம் ஹாம் ரௌம் ஹௌம் ஹௌம் ஹௌம் ஹௌம் (அ) ந்ருமுண்டமண்டிதம் (கூ) ஹூம் ஹூம் கஹ கஹ ஹூம் ஹூம் (க0) க்ருதவிகடமுகம் (கக) நமாமி தேவம் பைரவம் (கஉ) என்பதே.

(ஆ) ஆர்ஷபீ கபாலத்தின் பதங்களாவன—ஜண்டும் ஜண்டும் கட்வாங்கதரம் (க) தம்ஷ்ட்-ராகராளம் (உ) தடித்ஸத்ருச ஜிஹ்வம் (ங) ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ

*குறிப்பு—ஏழு கபாலங்களுக்குமுரிய பதங்களைக் கூறுவாம். மேலே கூறிய ஏழுகபாலங்களின் விளக்கத்திலே கூறியவாறு கலைகளின் எண்கள் ஒட்டிக்கூறப்பட்டதேயாம்.

ஹௌ(௪) வரஸாரபிகுஸூம(௫) சர்சிதகாத்ரம்(௬) கபாலஹஸ்தம் (௭) நமாமி தேவம் (௮) என்பதே.

(இ) காந்தாரீ கபாலத்தின் பதங்களோ-வெனின்—சலத்தரங்க (௧) பங்குரம் (௨) அநேக ரேணு (௩) பிஞ்சரம் ஸா (௪) ராஸாரை; ஸாஸே-விதம்பு (௫) நாது ஜாஹ்ந (௬) வீஜலம் (௭) மாம் பிந்துபி: (௮) என்பனவாம்.

(ஈ) மத்யமகபாலத்தின் பதங்களோ வரு-மாறு—சூலகபால (௧) பாணித்ரிபுரவிநாசி (௨) சசாங்கதாரிணம் (௩) த்ரிநயநத்ரிசூலம் (௪) ஸததம் உமயாஸஹி (௫) தம் வரதம் (௬) ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ (௭) ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ ஹௌ (௮) நௌமி மஹா தேவம் (௯)

(உ) பஞ்சமீ கபாலத்தின் மொழிகளாவன—ஜய விஷமநயந (௧) மதநதநுதஹந (௨) வரவ்ருஷ-பகமந (௩) த்ரிபுரதஹந (௪) நதஸகலபுவந (௫) ஸிதகமலவதந (௬) பவ மே பயஹரண (௭) பவ-சரணம் (௮) என்பர்.

(ஊ) தைவதீகபாலத்தின் பதங்களோ—அக்-நிஜ்வாலா (௧) சிகாவலீ (௨) மாம்ஸசோணித (௩)

போஜிநி (ச) ஸர்வாஹாரி (ரு) ணி நிர்மாம்ஸே (கூ) சர்மமுண்டே (எ) நமோஸ்து தே (அ) என்பவை-களே.

(எ) நைஷாதிகபாலத்திற்குறிய மொழிக-ளாவன—ஸரஸகஜசர்மபடம் (க) பீமபுஜங்கமா-நத்தஜடம் (உ) கஹகஹஹங்க்ருதி விக்ருதமுகம் (ங) நமதம் சிவம் ஹரமஜிதம் (ச) சண்டதுண்ட-மஜேயம் (ரு) கபாலமண்டிதமுகுடம் (கூ) காம-தர்ப வித்வம்ஸகரம் (எ) நமதம் ஹரம் பரமசிவம் (அ) என்பனவாம்.

(கரு) பதங்கள், லயங்கள் இவற்றோடு இணைந்து வர்ணம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு இசைத்தலாம் இசையின் அடுக்குகளையே, கீதி என்பர்.

அறிஞர் இக்கீதி நான்கு வகைப்படும் என்பர். மாகதீ; அர்தமாகதீ; ஸம்பாவிதா; ப்ருதுலா; என்பன அவை.*

---

*குறிப்பு—வர்ணமும் அலங்காரமும் ஆறுவது பிரி-விலே கூறப்பெற்றுள்ளன. இசையின் மொழியே பதமாம். லயம் என்பது இரண்டற ஒன்றுதல் எனப்படும். ஈண்டு இசையிலே அக்ஷரங்களைத்-தாளக்கட்டுடன் நிரவச்செய்து கலத்தல் எனப்-

(கரு) இனி அக்கீதிகளின் விளக்கங்களைத்-தருவாம். பதத்தை முதற் கலையிலே போதிய அவ-காசத்துடன் (மெல்ல) பாடிய பின்னர், இரண்-டாம் கலையிலே மத்யலயநிலையிலே மற்றப் பதங்க-ளுடன் பாடி,

(கஎ) இவற்றோடு மூன்றும் பதத்தை மூன்-றுவது கலையில் துரிதமாக இசைக்க வேண்டுவதே-யாகும். இவ்விதம் முப்முறை பதங்களைக் கையா-ண்டு இசைப்பதை மாகதீ என்பர். †

பொருள் கோடல் மரபு. அவகாசம், மத்யநிலை, துரிதம் என இவற்றைத் தாளவியலிலே விவரிப்-பாம். முதற்பிரிவிலே உக, ௩௦-வது ச்லோகங்க-ளின்படி ஜாதி, இசைத்வநியேயாகும். இவை ஒன்றுக் கொன்று தத்வங்களிலே பேதமுடை-யவை. கீதிகளை வித்யாஸப்படுத்துவதிலும், அக்ஷ-ரங்களை மாற்றிப் பதங்களை அமைப்பதிலும் இடமாக உள்ள பண்களே கீதிகளாகும். ஜாதி-யானது ஓர் இன்னொலியாயின், கீதி ஓர் இன்னிசை யாகும். இன்னொலிகளின் பகுப்புக்களே ஜாதி-களின் முக்கியமாம். இராகங்களோ அவற்றின் கீழுள்ள பேதங்களே என்க.

†குறிப்பு—முதற் பதத்தை (கீதியிலுள்ள தேவம் என்ற பதத்தை) எடுத்து மெல்ல (விலம்பித) உள்ள

உதாஹரணம்—

மா	கா	மா	தா
தே	—	வம்	—
தநி	தநி	ஸநி	த
தே	வம்	ரு	த்ரம்
ரிக	ரிக	மக	ரிஸ
தேவம்	ருத்ரம்	வந்	தே.

(கஅ) முற்கூறியவாறு இசைத்த பண்ணில் இரு பதங்களிலே இறுதிப் பகுதிகளை இருமுறை பாடுவதை அறிஞர் **அர்த்தமாகதீ** என்பர்.

உதாஹரணம்—

மா	ரீ	கா	ஸா
தே		வம்	

லயத்தில இசைக்க வேண்டும். அடுத்த மத்ய லயத்திலே 'ருத்ரம்' என்ற பதத்தை எடுத்துக் கொண்டு முன் பதத்துடன் சேர்த்து இசைக்க வேண்டும். (நான்கு எழுத்துக்களுக்கு நான்கு ஸ்வரங்கள்.) பின்னர் இவ்விரு பதங்களுடன் மற்றும் ஒரு பதமாய 'வந்தே' என்பதையும் சேர்த்து முழுவதையும் துரிதகாலத்தில் பாடப்-படவேண்டும். (நான்கு ஸ்வர அளவில் ஆறு அக்ஷரகாலங்கள்) இவ்விதம் இசைப்பதே கீதி-யாகும். ஈண்டு 'தேவம்' என்பதை மும்முறை கையாளுவதைக் கவனிக்கவும்.

ஸா	ஸா	தா	நீ
வம்	ரு	த்ரம்	
பா	தா	பா	மா
த்ரம்	வந்	தே.	

௧௧. சிலர் இந்தை பதங்களை இரட்டிப்பாக உச்சரிப்பதே என்பர்.*

*குறிப்பு—மாகதியிலோ 'தேவம்' என்ற முழுப்பதம் இரண்டாம் கலையிலும், 'ருத்ரம்' என்ற பதத்துடன் மூன்றும் கலையிலும் ஒலிக்கப் பெற்றது. அர்தமாகதியிலோ இவ்வாறின்றி மொழியீற்றுப்பாதியே (வம் என்பது) இரண்டாம் கலையில்லையாளப் பெற்றும், அவ்வழியே அடுத்த பதப்பாதியாகிய "த்ரம்" என்பது மூன்றும் கலையிலும் வந்துள்ளன. மூன்றும் கலையில் 'தேவம்' என்ற பதமே இல்லாதொழிந்தது. எனவே இதை மாகதியின் பாதி அல்லது அர்த்தமாகதீ என்பர். மற்றொரு சாரார் பதங்களையே இரட்டிப்பாகக் கலைகளில் எடுத்து இசைப்பதும் உண்டு. இஃதும் அர்தமாகதீயேயாம். மீண்டும் மீண்டும் ப்ரயோகமாகும் அக்ஷரங்களோ, மொழிகளோ பொருளற்றதாயினும், இசைநயத்தை இனிது நிறைவேற்றுதலாகலின்; ஸாமனைப்போல இக்கீதிகள் உளவாதலின் சொல்லியதைச் சொல்லல் எனும் கூற்றம் இதற்கு இல்லை.

உதாஹரணம்—

மா	மா	மா	மா
தேவ		வம்	
தா	ஸா	தா	நீ
தே	வம்	ரு	த்ரம்
பா	நித	மா	மா
ரு	தரம்	வங்	தே.

அநேக குருக்களோடு (நெடிலோடு) அமைந்த பதங்களே **ஸம்பாவிதையாகும்.** *

உதாஹரணம்—

தா	மா	மா	ரிக
ப		க்த்யா	
ரீ	கா	ஸா	ஸா
தே		வம்	
ங்	தா	ஸா	நீ
ரு		த்ரம்	
தா	நீ	மா	மா
வங்		தே	

*குறிப்பு—சுருக்கப் பெற்ற பதங்களே யாகும். இவற்றை வெவ்வேறான கலைகளில் பண்ணின் பதங்களைச் சுருக்கி விநியோகித்தலே ஸம்பாவிதை யாம் என்பர் கல்லிநாதர். ஸிம்ஹபூபாலரோ இஃதை வேறாக உரை கொள்வர். அவர் அர்த-மாகதியில் இருவகைகளை ஒப்பவில்லை. முன்ன-

தையே அக்ஷரங்களின் பாதியையே அர்த்தமாகதீ என்பர். ஸம்பாவிதையிலோ மத்யம பதங்களே இரட்டிக்கத்தக்கவை என்பர். எனவே ஸிம்ஹ-பூபாலரின் ஸம்பாவிதா கீதியானது அடியில் வருமாறு:—

மா	மா	மா	மா
பக்த்யா	தேவம்	ருத்ரம்	வந்தே
தா	ஸா	தா	நீ
தேவம்	தேவம்	ருத்ரம்	ருத்ரம்
பா	நித	மா	மா
பக்த்யா	தேவம்	ருத்ரம்	வந்தே.

குறிப்பு—ஈண்டு தேவம், ருத்ரம் என்ற மத்ய பதங்கள் இரண்டாம் கலையிலே இரட்டித்துள்ளன. "த்விராவ்ருத்தபரே" என்ற பாடத்திற்கிணங்க தஞ்சைக் கழகத்திலே ஸ்ரீரகுநாதருடைய ஸங்கீதஸுதா, ஸ்ரீதுலஜாஜியின் ஸங்கீத ஸாராம்ருதம் என்ற இரு நூல்களையும் ஒப்புநோக்கினால், பின்னவர் ஸ்ரீகல்லிநாதரின் உரையினைத் தழுவியுள்ளார் என்பதும், முன்னவரோ ஸ்ரீஸிம்ஹபூபாலரின் உரைக்கு உரை கூறுபவராய் முற்பட்டிருக்கின்றார் என்பதும், அர்தமாகதியின் இரு கொள்கைகளை அவர் ஏற்கவில்லை என்பதும் புலனாகும். ஸம்பாவிதையோ அவர். கூற்றுப்படி மூன்று கலைகளோடு பின்வருமாறு இருத்தல் வேண்டும் என்பதாம். பக்த்யா (க)

உ0. லகுக்களை மிகுதியாகப் பெற்றது ப்ருதுலா எனப் பெரியோர்களால் போற்றப் பெறுகின்றது.

உதாஹரணம்—

(க)	மா	கா	ரீ	கா
	ஸு	ர	ந	த
(உ)	ஸா	தநி	தா	தா
	ஹ	ர	ப	த
(ங)	தா	ஸா	தா	நீ
	யு	க	ளம்	
(ச)	பா	நிதப	மா	மா
	ப்ர	ண	ம	த

தேவம் தேவம் ருத்ரம் ருத்ரம் (உ) பக்த்யா தேவம் ருத்ரம் வந்தே (ங)

விளக்கத்திற்குப் பின்னர் அப்பதிப்பிலே கொடுக்கப்பட்ட குறிப்பு விளக்கத்துடன் பொருந்தாதுள்ளது. வேந்தன் ரகுநாதரின் வாக்யங்கள், "தைதவ மத்யஸ்த பதத்வயஸ்ய ப்ரத்யேகம் உச்சாரணதோ த்விவாரம்" என்பன, ஸிம்ஹ பூபாலரின் ஸங்கீதரத்நாகரத்தின் உரையினைத்தழுவிய விரிவுரையெனவே கொள்ளற்பாலது. "த்விராவ்ருத்த பதாந்தரே" என்பதே இசை மணிக்கடலின் பாடமாம். (பதங்களுடைய இடையிலே இருதடவைகள் என்பது அதன் பொருள்.)

(உ0) அல்லது அக்ஷர வொழுங்கிலே உள்ள முதல் குருக்கள் (நெடில்) இணைகளும்,

உக–உச. நான்கு மாத்ரை பாதங்களிலே சித்ரா மார்கத்திலே பொருத்தி ஒவ்வொன்றில்

ஈண்டுள்ள ஸ்வராக்ஷரக் குறிகள் ஸ்ரீகல்லிநாதரின் உரையின் விண்ணம் அமைந்ததாம். ஸ்ரீஸிம்ஹ-பூபாலரோ இதிலும் முன்னையதைப் போன்றே மாறுபட்டுள்ளார். அவ்வழி ;*

(க)	ம	க	ரி	க
	ஸ—ரநத	ஹரபத	யுகளம்	ப்ரணமத
(உ)	ஸ	தநி	த	த
	ஹரபத	ஹரபத	யுகளம்	யுகளம்
(ங)	த	ஸ	த	நி
	ஸ—ரநுத	ஹரபத	யுகளம்	ப்ரமணத

இவ்வாறே ஸ்ரீரகுநாத மன்னனும் விளக்கத்-திற்குப் பொருந்தா முறையிலே விரிவுரை செய்-துள்ளார். மஹாராணாகும்பர் தமது ஸங்கீத-ராஜத்திலே கீதிகளின் விஷயத்திலே ஸ்ரீரகுநாத மன்னனின் கொள்கையைத் தழுவியுள்ளார். கீதி-களிலே மூன்று வகை லயங்களிலே தொடர்ந்த கலைகளில் வ்யவஹாரம்-தொடர்பு (Stipulation) நன்குள்ளது. மாகதீ ஒன்றிலேதான் அஃது உள்ளவாறு கொடுக்கப் பெற்றுள்ளது.

ஒன்று கையாளப்படுவதும், பின்னர் எட்டு மாத்-ரைகளோடு இணைந்து த்ருவகம் முதலியவைக-ளால் தக்ஷிணமார்கத்திலே பயிலப்படுவதுமே **மகதீகீதி** என்பர். ஜதையின் மூன்ருவது லகு ஆறுமாத்ரை பகுதிப் பாதியோடு இணைந்து முதல் இரண்டு, முடிவிரண்டு மாத்ரைகளால் பயிலப்-பட்டு மேலும் ப்லுதத்தை இசைக்கப் படுகையில் ஒன்றரைப் பகுதியாகச் சேர்த்தும், த்ருவகத்தோடு துவங்குகிற எட்டுடன் தொடர்ந்தும் முடிவில் உள்ள இரண்டை இருமுறை எடுத்தாளுவதே **அர்த்தமாகதீயாம்.** இவை இரண்டும் ஏனைய-தானங்களுடன் முறையே பயிலத்தக்கனவாம்.

குறிப்பு—கீதிகளின் நான்கு வகைகளும் பதங்களின் விநியோகங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன. இப்பொழுது வேறு ஒரு தொகுதி முறையிலே கீதிகளின் விளக்கத்தைத் தருவாம். என்னையோ? தாளங்களுடைய ஆதாரத்தின் மீது என்றுராக-லின். இரண்டு நெடில்களும்(குருக்கள்)ஒரு குறிலும் (லகு)ஒரு ப்லுதம்(ஒரு நீடித்தகுரு-மூன்று மாத்ரை கொண்டது) இஃது சச்சத்புட தாளமாகும். இம்-மாதிரியான இணைப்பிலே முதலிரண்டு குருக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டும், அவ்விரு குருக்க-ளிலே ஒவ்வொன்றும் சித்ரா மார்கத்தை (இரு

மாத்திரையளவில்)அமைப்பனவாகப் பயிலப்படும். நான்கு மாத்திரை தோற்றவளவிலே (சகணாத்மகம்) அமையும் என்க. ஒரு கணம் என்பது தொகுதி என்ற பொருளிலே உள்ள (மாத்திரை) எண்ணளவுள்ள பகுதியாகும். அத்தகைய (பாதம்) பகுதி ஒன்றுக்கு நான்கு மாத்திரைகள் காலமாம். "ச" என்ற அக்ஷரத்தால் குறிக்கப் பெற்றுள்ளது (சதுர்-நான்கு-என்பதன் முதலெழுத்து) ஐந்து மாத்திரைப் பகுதியோ "ப" என்ற அக்ஷரமுதலால் தெரிவிக்கப் பெறுகின்றது. ஒரு ஆறு மாத்திரை அளவுள்ள பகுதியை "ச்சா" (ஆறு) என்றும், இரு மாத்திரை அவகாசமுள்ள பகுதி "த" (த்வி-இரண்டு) என்ற எழுத்தாலும், மூன்று மாத்திரை பாகங்களை, "த்த" (த்ரி-மூன்று) என்ற அக்ஷரத்தாலும் குறிக்கப் பெறுவனவாம். சித்ரா மார்கத்திலே இரண்டே மாத்திரையளவுகள் உள. எனவே ஒவ்வொரு குருவும் (நெடில்) இரு மாத்திரை அவகாச ஒலியுடையவை. முதலான குருக்கள் இரண்டின் ஒவ்வொன்றும் சித்ரா மார்கத்திலே ப்ரயோகிக்கத்தக்க தகுதியுடையவை. மூலத்திலேயுள்ள "சித்ரா மார்காதி" 'சித்ரா மார்கம்-முதல்' என்ற பதம்; "சித்ரா மார்கார்ஹம்-சித்ரா மார்கத்திற்குத் தகுதியுள்ளது." எனவிருத்தல் வேண்டும். அத்தகை ஒவ்வொரு நெடிலும் நான்கு மாத்திரையளவுள்ளதாக ஒலிக்-

கப்படவேண்டும். இஃதை விருத்திமார்கம்என்பர். மீண்டும் அவற்றையே எட்டு மாத்திரையளவிலே த்ருவகா முதலானவற்றோடு இசைப்பின் அஃதே தக்ஷிண மார்கம் என்க. எட்டு மாத்திரையளவுள்ள காலநியதிகள் (க) த்ருவகா (உ) ஸர்பிணீ (ங) ஹ்ருஷ்யகா (ச) பத்மிநீ (ரு) விஸர்ஜிதா (சா) விக்ஷிப்தா (எ) பதாகா (அ) பதிதா என எட்டு வகைகளாம். இஃது மாகதீ கீதி எனப் பெயர்-பெறும். இந்தத் தாள திட்டம், மாத்திரையளவு, லயநியதி இவைகளுடைய விரிவான விளக்கத்தை அடுத்துவரும் அதிகாரங்களில் விவரிப்பாம். எனினும் அடுத்த அத்யாயத்தின் முடிவிலே இவற்றின் விளக்கத் தெளிவைக் காணலாம்.

உசு-வது ச்லோகத்தின் குறிப்பு—

ஒரு சச்சத் புட தாளத்திலே இரண்டு நெடில்-கள், ஒரு லகு (குறில்) ஒரு (ப்லுதம்)நீடித்தொலிக்-கும் நெடில் இவை உள. இவற்றுள் மூன்றாவதான லகுவை ஆறு மாத்திரையின் பாதியளவுடன் (மூன்று மாத்திரை அளவு) எடுத்துக் கொள்-வோம். என்னையோ? ச்சகணம் ஆறு மாத்திரைக்-குழூ உ) ஆகலின். முதல் இரண்டு முடிவிலுள்ள இரண்டு மாத்திரைகள் முறையே முன்னர்க் கூறிய வண்ணம் காணப்பெறும் எட்டு மாத்திரையினுள் முதல் இரண்டும் த்ருவகா, ஸர்பிணீ எனவும்

௨௫. இரண்டு கலைகளுடன் வ்ருத்தி மார்க்-கத்திலே பெரும்பான்மை நெடில்களுடன் காணப்-படுவது ஸம்பாவிதையாம். நான்கு கலைகளுடன் தக்ஷிண மார்கத்திலே குறில் மிகுதியாகவுள்ளது ப்ருதுலா என்பதாம்.*

பின்னர் முடிவிலுள்ள இரண்டும் பதாகா, பதிதா எனவும் கூறப் பெறுவனவாம். இனி ப்லுதத்தை எடுத்துக் கொள்வோம். இஃது சச்சத்புட தாள-த்தின் ஈற்றிலே நிற்பதாகும். இஃதை ஒன்றரை மாத்திரையளவிலே எடுத்துக் கொள்வாம். (ஆறு மாத்திரையளவிலே பாதி=மூன்று மாத்திரை யளவு) ஆறு மாத்திரையின் முழுப்பாகம்=ஆறு மாத்திரையளவு) மொத்தம் ஒன்பது மாத்திரை-கள் அளவாகின்றன. ப்லுதத்தோடும் (௯+௩= ௧௨) சேர்க்கப் பன்னிரண்டு மாத்திரைகள் ஆகின்-றன. த்ருவகா முதலாகவுள்ளனவற்றின் எட்டு மாத்திரைகளில் எல்லாம் இஃது இருக்கவேண்-டும். பதாகா, பதிதா என்ற கடைசியில் இரு மாத்திரைகள் உள்ளனவாக உள்ளவை ஒவ்வொன்-றும் இரட்டிப்பாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மாகதீ, அர்தமாகதீ இவ்விரண்டும் பஞ்சபாணி போன்ற மற்ற தாளங்களிலும் இசைக்கத்தக்கவையாம்.

*குறிப்பு—ஈண்டு விரிவுரை வேண்டற் பாற்றன்று. ஸம்பாவிதை இரு கலைகள்; நிறைந்த நெடில் (குரு)-

கள்; விருத்தி மார்கத்திலே உளதாம். ப்ருதுலா என்பதோ நான்கு கலைகள்; நிறைந்த குறில்கள்; தக்ஷிணமார்கத்திலே உளதாம். அடுத்த அத்யாயத்தினுடைய இறுதியிலே தாளஸம்பந்தமான குறிப்புக்கள் யாவும் தெள்ளிதின் விளக்கப்பெறுமென்பதைக் காண்க. சிவம்.

ஸ்ரீ நி:சங்கசார்ங்கதேவரியற்றிய
ஸங்கீதரத்நாகரம் என்ற இசை மணிக்கடலின்
முதல் அத்யாயம் இவண் முற்றும்

இசைமணிக்கடல்

அநுபந்தம்

அநுபந்தம் (க)

குறிப்புரை.

க. ஈண்டு ஸிம்ஹபூபாலரின் உரையையேமுக்கியமாகக் கொள்ளுவாம். உலகமுற்றும், இன்னிசையுடன் செவிக்கும், அதன்மூலம் ஜீவனுக்கே பேரின்பம் பயக்கும் கீதத்தொகுதியாய வடிவுடையவர் எல்லாம் வல்ல தலைவர் என்ப. கல்லிநாதரோ ஆத்மாநுபூதியை விரும்பிய மக்கள் இசைக்கும் கீதத்தொகுதியாய வடிவுடையவர் கடவுள் என்பர்; எனவே, வேதத்தின் நுண் பொருளாய ப்ரணவத்தைச்சுட்டும் மஹாவாக்யம் என உரை காணுவர். ஸுஷும்னையில் இடையும், பிங்களையும் சந்திக்குமிடமே 'ப்ரஹ்மக்ரந்தி' (அறிவுப்புலத்தொகுதி) என்ப. ஸிம்ஹபூபாலரின் கருத்துப்படி பூமியும் மற்றுள்ள அண்டங்களும் எனக்கொள்க. 'க்ராமவிபாகம்', மக்கட் தொகுதிகள் கொண்ட க்ராமத்தையும், "அதன் ஜீவிய செல்வாதாரநிலைகளையும் சுட்டும். அவ்வண்ணமே, இன்னிசையிலும், க்ராமம், வர்ணம், அலங்காரம், ஜாதி, க்ரமம் முதலானவை உருவகப்படுத்தப்பட்டுள்ளன; அவற்றை ஈண்டுப் பின்வரும் ப்ரகரணங்களில் விளக்குவாம்.

உ-ச. 'முற்கூறிய குலம்'— 'மஹான்களின் மனோ ஸங்கல்பத்தை நன்கு பூர்த்தி செய்த குலம்' என ஸிம்ஹபூபாலர் விவரிப்பர்.

௫, ௬. உலகில் எவ்வேந்தருக்கும் மேலாய சக்கரவர்த்தி என்க. செம்பஞ்சு ஊட்டினதே போன்ற இயலெழில் கொண்ட பாத நகங்களின், பகைமன்னரின் பொற்கிரீடங்களிலுள்ள நீலக்கற்கள் நல்லொளி வீசும் நலமுடையான், ஸிங்கண வேந்தன் தந்தையாம் ஸோடலன்.

எ. ஐந்தாம் சுலோகத்துள்ள ஸோடலரையே குறிக்கும் என்க; அன்னாரே அறிஞர் குழாத்துக்கு அரிய தலைவராய் விளங்கினர் ஆதலின்.

௯. தண்மை - பாற்கடலின் குளிர்ச்சியும், வெண்மை - அழியா உண்மைப்புகழாம் சந்த்ரனும் போல, வண்மை - இன்பக் கொடைகளைப்பெற்ற இதயஙகளுள்ள உயிர்த்தொகுதிகள்போல இம்மூன்றினையும் தன்பால்நிறைவுடன்கொண்ட ஸ்ரீ சார்ங்கதேவர் தோன்றி யருளினர்.

௧௧. ஸரஸ்வதீ - ஸகலகலாவல்லி.

௧௨. கேளிக்கைகள் :—யௌவன நிலைக்குரிய கலைகளை எளிதிற்பெறும் இன்பவியலை எய்தி மகிழ்ந்தார் என்க.

௧௩. மும்மலம்—முப்பெருந்துயர்:—'ஆத்யாத்மிகம்' தானே தனக்கு வருவித்துக் கொள்ளும் கேவல நோய் போன்ற துயர் என்க. 'ஆதி தைவிகம்'— தெய்விகமாக உண்டாகும் மாற்றொணுத்

துயரம் என்க. "ஆதிபௌதிகம்" பூதங்களின் செய்கைகளால் ஆத்மன் அடையும் துயர் என்க.

கச. எந்தக் கீதத்தால் உயிர்கள் தந்நிலை யழிந்து, ஆனந்தத்தால் அமைதிகொண்டு இன்பெய்துகின்றனவோ, அந்த இயற்கையாய அழகமைதியை உலகினர்த் தம்முடன் பெற அவாவினர் என்க.

கரு-கஅ. ஹநுமான் - அஞ்சனையின் புதல்வன்; ஸ்ரீ ராமதூதன்.

உக, உஉ. 'ம்ருக்' என்ற வடசொல் வினைப்பகுதியிலிருந்து, 'மார்கம்' எனக்கொண்டு, முன்னவர்கள் கொண்ட மார்ககீதத்தையே குறிக்கும் என்க. தேசியோ வெவ்வேறான நிலத்தும், மொழியினும் மாறியுள்ள கீதம் என்க.

உரு, உசு. உமாபதி - சிவபெருமான். கோபியர் தலைவன் - ஸ்ரீ க்ருஷ்ணன். ஸாமோச்சாரணம் - ஸாமனிலுள்ள ரிக்குகளின் இசை. யக்ஷர்கள் - உயரிய பிறப்புத் தொகுதி யுடையவர்கள்.

உஅ-ங௰. நல் வாழ்க்கையின் படிகளே தர்மம் என்பர். உலகியலில் மக்கட்டொகுதிக்கு இன்பம் பயப்பது பொருள் என்க. வாழ்க்கையின் போக்கிலுள்ள இன்ப அநுபவமே காமம் ஆகும். உலையாத நிரந்தர அமைதியுறுவதே மோக்ஷமாகும். இந்நான்கு, வித மக்கட் செல்வத்தைக் கீதம அருளுகின்றதென்க.

நக. நாதம்; இன்னிசையுடன் நேர்த்தியாய மேலுந்தாத த்வனியும், மேலுந்திய த்வனியும் என்க.

நஉ. ஸ்தானம்; வெவ்வேறான நிலைகளில் நாதம் தோற்றக் காரணமான இடங்களாம். ச்ருதி; தோற்றிய நாதங்களின் உரிய நிலைகள். ஸப்தஸ்வரங்கள்; ஏழு - நிலைகளில் காணும் ஏழுகுறியீடுகள். ச, ந, உ, ச, ச, ந, உ இவ்விருப்பத்திரண்டு சுருதி நிலைகள். விக்ருதஸ்வரங்கள் - அக்குறியீடுகளான நாதங்களே சிறிது மாறிய நிலையில் காணப்படுவனவாம். குலங்கள் - ஸ்வரக்குடும்பம்; ஜாதி - வகுப்புகள்; வர்ணம்; - நிற, (நடப்பு) வேற்றுமை; த்வீபம் - தோற்றிய நிலைக்களன்; ரிஷி - வெளியிட்டவர்; தைவதம் - அதிதேவதையாம்.

நந. சந்தஸ்ஸு - இசையளவு; விநியோகம்- சுவைமிக்குடைய ஸ்வரத்தை யமைத்தல். ச்ருதி ஜாதிகள் - தீப்தம் போன்ற வேற்று நிலைகளைக் குறிப்பனவாம். திண்ணமான குறித்த நிலைகளிலே ஏழு ஸ்வரங்களோடு கூடிய இருபத்திரண்டு சுருதிகள் பூர்த்தியான ஓர்வரையே 'க்ராம'மாகும். ஆரோஹி அவரோஹி (ஏறு, இறங்கு) க்ரமத்தில் ஏழிசைகளையும் இசைத்து நிற்றலே மூர்ச்சனையாம். ஆரோஹத்தில் ஐந்து அல்லது ஆறு ஸ்வரங்களைப் பாடுதல் சுத்த தானமாகும். யாதானும் ஒரு தொகுதியோடு

ஸமகாலத்தில் ஒன்றுமுதல் ஏழு ஸ்வரங்களையும் இசைப்பதுகூட தாநம் என்க.

சங. இத்தகைய தொகுதிகளின் அறிஞர் கண்டுள்ள விரிவுகளே ப்ரஸ்தாரம் எனப்படும். எடுத்துக்கொண்ட பல்வேறுன ஸ்வரஸமூஹங்களின் சேர்க்கை எண்ணிக்கைகளே கண்டமேரு எனக்கூறும் சாதுரிகக் கணிதமாகும். கொடுக்கப்பட்ட எண்ணிலிருந்து உண்டாய ஸ்வரமே நஷ்டம் என்றும் கொடுக்கப்பட்ட ஸ்வரத்திலிருந்து கிடைக்கப்பெற்ற எண்ணே உத்திஷ்டம் என்றுங் கூறுவர். ஸ்வரங்களின் ஒன்றினதோ அன்றி வேறுனதோ ஆன இருபத்திரண்டு ச்ருதிகளுள் உள்ள நிலைகளே ஸ்வர ஸாதாரணமாகும். இரண்டு அல்லது அதிக ஜாதிகளில் காணும் ஒரு ஸ்வரமே ஜாதி ஸாதாரணமாகும்.

நரு, நசு. ஸ்வர ஸாதாரணத்தின் வகைகளே காகலியும், அந்தரமும். ஸ்வரங்களின் இன்னிசைத் தொகுப்புகளே வர்ணம் என்ப. வர்ணக்கூட்டங்களைக்கொண்ட இனிமை பயக்கும் தொகுதிகளே அலங்காரங்கள். ஜாதியோ - ஓர் இனியநாதம். குறித்த இராகத்தில் கையாளப்படும் குறித்த ஸ்வரங்களே க்ரஹம், அம்சம் என்பர். பண்ணிலுள்ள ஸ்வரத் தொகுதிகளில் குறிப்பிட்ட ஸ்வரத்தொகுதிகளே கபாலம், கம்பளம் எனப்பெறும் வர்ணங்கள்

முதலானவற்றுடன் இசையொழுகப் பாடுவதே கீதமாகும்.

உ௭. க்ராமராகம் - விசேஷமாய்க்குறிப்பிடப்பட்டுள்ள பண்கள் பாஸங்கள் - அவற்றைப்பாடும் நிலையிலுள்ள தொகுப்புகள்.

௩அ. அங்கங்கள் - உறுப்புக்கள், ஈண்டு ஆதாரமான இயல்கள். க்ரியை - செயல்முறை. ஈண்டு பண் இசைக்கும்முறை.

௩௯. விற்பன்னிகள் - பண்ணுக்குரிய பதம் அமைத்து அதை இன்னிசைபடப் பாடுவார் கீதவிற்பன்னிகள். மார்கம், தேசீ இரண்டையும் நன்குணர்ந்ததே காந்தர்வமாகும். சாரீரம் - பாடுவாரது இயல்பான இசைநாதம்.

௪0. உறழ்ந்தொலிக்கும் குறித்த நாதமே கமகமாகும்; ஸ்தாயமோ இசைக்கு ஆதாரமான அளவொலியாகும். இசையை எடுத்துக் காட்டுவது ஆலப்தி என்க; பக்கமேளத்தொகுதிகளின் குழாமே ப்ருந்தையாகும். ஸாஹித்யபதங்களினின்றுண்டாகும் இனிய கீதமே தாதுவாகும். வகைகளை விவரிப்பது ஜாதியாகும்.

௪௩. நன்கு பொருந்தும் பலவகை ஸ்வரங்களையும் அவற்றிற்காதாரமான ஹேதுக்களையும் விளக்குவது ஸ்தை என்க.

மார்கதாளம் என்பது ப்ராசீன முறையிலே குறித்தகால எண்ணுடன் காணப்பெறும் ('காலவொலி') தாளமாகும்.

சச. கலையோ தாளவொலியின்றிக் கணிக்கும் கால அளவாகும். ஏககலை - ஒரே ஒரு கலைமட்டில் பெற்றுள்ள வகை. பாத பாகங்கள் - கீதத்தின் பகுதிகள். மாத்ரா - (மோரை) அளவு என்க.

சரு-சஅ. யுக்மம் - இரட்டை; பரிவ்ருதம் - கீதப் பகுதியின் அப்பகுதியே மீண்டும் இசைத்தல்; லயம் - தாளவொலிகளுக்கு இடையிட்டுள்ளக் கணித நேரம்; யதி - இடையீட்டைத் தீர்மானிக்கும் அளவு; அங்கம் - ஆதாரம் அல்லது ஓர் பகுதி.

ப்ரகரணம் (உ)

க. இலக்கண வல்லோரும், தாந்த்ரிகர்களும், உபநிஷதுக்கள் எங்ஙனம் ப்ரஹ்மத்தைச் சுட்டுகின்றனவோ அவ்வண்ணமே நாதம் அகில உலகத்தோற்றத்துக்கும் மூலாதாரகாரணம் எனவும் அஃதை அறிதல் இன்றியமையாததாகும் என்பர்.

ந. செவிப்புலனாகும் ஒலி ஆஹதம்; தனக்கு மட்டும் தானே உணரும் நாதம் அனாஹதம் ஆகும்.

ச. முக்கிய மூலகாரணம் - லிங்கமாகும்; அக்குறி வடிவாய சிவபெருமானை யுணர்த்தும் ப்ரஹ்மத்தின் குறி என்க.

ரு. ஸர்வேச்வரன் - ஆதிநாயகன்; பரம புருஷன் என்க.

சு-எ. ஆரம்பமற்ற சூநியத்வம் - பரமபுருஷ-னின்றும் வேருய ஜீவர்களது செய்வினையே ஆரம்ப-மற்றதாகும். பின்னர்ப் பிரிந்த அவை பெறும் செய்கை, சிறுமை, பெருமை, இன்பு, துன்பு, இவற்-றின் பரிணமத்தால் உண்டாகும் பிறவி என்க; வினைக்காரணமாய் உண்டாய பிறவியில் முன்னதான வினைப்பயனை ஜீவன் நுகர்கிருன். அந்நுகர்ச்சியில் ஜீவன் மற்றும் ஓர் பிறவிக்கான கர்மாக்களைத் தொடர்ந்து பெற்று மறு பிறவி எடுக்கிருன்; இங்-ஙனம் கர்மாக்களின் கீழ்த் தன்னைக் (ஜீவன்) கட்டுப்-படுத்திக்கொண்டு ஆரம்பமற்றவனுகவும், முடிவில் சூனியமாகிப் பரம்பொருளை எய்துகின்ருன். இதனி-டையில்தான் ஜாதி, வாழ்வு, அநுபவம் இவற்றை உலகினில் தன் சுவடாக விடுத்துச்செல்லுகிருன் என்க.

அ. லிங்கசரீரம் - ஸூக்ஷ்ம சரீரம். பௌதிக (பூதச்சேர்க்கை) வடிவை விடுத்துத் தன் வினைக்காய வேறு பௌதிக வடிவை அடுத்து அடையுங்காலம் இறப்பு என்க. வேறு பூதத்தோற்றத்திலே அந்த ஜீவன் காணப்படுவது பிறப்பு ஆகும். எனவே இறப்பும், பிறப்பும் வினைப்பயனே யன்றி ஜீவனைப் பாதிப்பதன்று. பௌதிகவடிவுக்கே அழிவும்,

தோற்றமும் என்க. ஸூக்ஷ்ம வடிவு முடிவில் நசித்து பேரனுவாம் ப்ரஹ்மத்துடன் (அறிவு+ ஆனந்தம்) இயைவதே முடிவான முக்தி (விடுதலை) யாம்.

கூ. பிறவாப் பெரியோன் - அஜன்; பிறப் பிறப்பற்றவன். என்னையோ? ஜீவனும் அழியாது நிலைப்பவனுயினும், பிறப்பிறப்பாம் வலையினூடே, தன் வினைக்கேற்பச் சஞ்சரிப்பவனுகலின், பரம்பொருளை வேறு படுத்திச் சுட்டினர் என்க.

ம. விரிவடைந்த ஆத்மன் - ஜீவாத்மா; தலைசிறந்த ஆத்மன் - ப்ரஹ்மன். ஆகாசம் - ஸூக்ஷ்ம தத்வங்கொண்டது. அதனினும் வாயு,

கஉ-கரு. மக்களால் உணரத்தக்கது. வாயுவை விடக் கட்புலனுவது அநலமாகும் (தீ), தீயினும் கட்புலனும் தண்மையுங் கொண்டது ஜலமாகும். ஜலத்தைவிடப் பல்லான வகைகளில் அடர்த்தியும் உணர்ச்சிக்கு முரியது நிலமாகும். (ப்ருதிவி) இவ்வைந்து பூதங்களூடே புகுந்து ஒளிரும் உயரிய ஜீவானுவே 'விராஜ்' என அழைக்கப்பெறுகின்றுன் என்க.

கச. வேதங்களிலுள்ள பதங்கள் - என்னையோ? ஈண்டு காணப்பெறும் அண்டங்களுக்கு முன்னர் உண்டாகி அழிந்த அண்டங்களின் அறிவுப்புலன்களாம் பொருட் பதங்களைக் (அறிவு -

வேதம்) கொண்டு, பூதத்தோற்றங்களைப் படைத்து முறையிலே நாம் வாழும் இவ்வுலகையும் படைத்தருளினர் என்க.

கரு. ப்ரஜாபதிகள் - உயிர்ப் படைப்புக் குரியோர். (தலைவர்) ஸ்ருஷ்டி - கேவலம் மனத்தூடே தோன்றும் படைப்பாகும். ரேதஸ் - செய்கையினூடே காணும் வீர்யம். (சுத்த சுக்லம்)

கசு-கஎ. நால்வகை யோநி - ஸ்வேதஜம் (க) உத்பிஜம் (உ) ஜராயுஜம் (ந) அண்டஜம் (ச) ஜராயு-கருப்பையைச் சூழ்ந்து வெளிப்புறம் பின்னல்போல் மூடியுள்ள ஜவ்வுத் தோலாகும்.

கஅ-உ௦. மழைத்துளிகளுடன் ஜீவன், மரம், செடி, கொடி, புல், பூண்டுகளை ஒருவரும் அறியா-வண்ணம் மண்ணையுற்று அடைகின்றான் என்க.

உக. வனப்பொருள்களே மனிதனின் உணவாகும். எனவே தன்னை உணவாகக் கொண்டவனின் ரேதஸில் ஜீவன் கலக்கிறான். சுத்த சுரோணிதத்தில் மனிதனால் சர்மாதீனமாக ஜீவன் ரேதஸாகக் கலக்கிறான் என்ப.

உஉ. சுத்தமாயிருந்தால் - சாதாரணமாகச் சேர்க்கை நிமித்தம் கருத்தரியாது என்பர் கல்லிநாதர். கருப்பையை உற்ற ரேதஸ் தன்னை வினைபுரியும் ஓர் ஜீவாணுவை எதிர் நோக்கியே காத்-

திருக்கவேண்டும் என்பர் அவர். எனவே சரீர சம்பந்தத்தாலேயே கர்ப்பம் உண்டாவது என்பது கூடாததாகும்.

௨௩. இதுமுதல் கருப்பையில் ஜீவனின் பூதா-காரத்தோற்ற வளர்ச்சியை - கர்ப்பவாஸத்தை - விவ-ரிப்பதாகும்.

௨௪. கருப்பை - ஜராயு அடர்ந்துக் கனத்திருந்-தால் ஆண் என்றும், சதுரத்துண்டமாய் ஓர்பா-, லிருந்தால் பெண் என்றும், இவ்விரண்டாலும் ஸம-மாக இருந்தால் அலி என்றும் உணரவேண்டும்.

௨௯. ப்ரக்ருதி - பொதுவங்கவியல். விக்ருதி - விசேஷ வங்கவியல்.

௩௩. கேசம் - முடிமயிர்; உரோமம் - சரீரத்-துள்ள மயிர்.

௩௯. வீர்யம் - இதயத்துண்டாகும் சக்தி. (ஓஜஸாகும்)

௩௮. ஊழ்வலி - 'ஸம்ஸ்காரம்'; முன்னதான நிலையிலுண்டாய ஓர் பயிற்சியே ஸம்ஸ்காரம் என்க.

௪௨. ஸூதகவாயு - ஸூதிமாருதம். வாயுக்-களின் வலுப்பற்றி வாயு - வாதம் - மாருதம் என முப்பெயர்கள் உள. யோநி - யந்த்ர வாயில்.

௪௩. முன்னதான ஸம்ஸ்காரமே பாலுண்ணல் ஆகும். எனவே ஹிந்து மதத்தின் மரபாய பூர்வ

ஜன்ம வாஸனையையே ஜீவன் இப்பிறவியிலும் எய்து-கின்றான் என்பர்.

௪௪. பாவங்கள் - பௌதிகமும் தன்னதுமான பண்புகள். ரஸம்—உண்ட உணவின் சுவைக்கேற்ற தோற்றம். ஸத்வம்—உள்ளீடான செய்கைக்கான அறிவுப் புலன்கள்.

௪௫. ரத்தம் - சோணிதம், குருதி; கொழுப்பு - மாம்ஸம்; மேதஸ்; மஜ்ஜை. மூளை, ஊன் என்னும் சதை; பித்தம் - பித்தாசயம், மண்ணீரல்; ச்வாஸாசயம் - ப்ளீஹம், ஈரல். குதம் - மூலாதாரகூடம்; ஹ்ருதயம் - இதயம்; நாபீ - கொப்பூழ்.

௪௬. நுண்ணரம்புகள் - ஸ்நாயு; ஸிரைகள்-ஸாதாரண இரத்தக் குழல்கள் அல்ல; கட்புலனாகா நுண்மையான இரத்தக்குழல்கள் என்க. தமநிகள். சுக்ல - ஸ்திரத்தைத் தெரிவிக்கும் இரத்தக்குழல், தாது நாடி என்க.

௫௬. ப்ராணன்—ஜீவநிலைக்காதாரமானதும், ஏனைய வாயுக்களினும் மெலிந்துள்ளதுமான ப்ராண-வாயு என்க. இதன் நிலை நாபீ கமலம். இதன் ஸஞ்-சாரம் - இதய கமலம், வாய், நாசித்வாரங்கள் இடை; க்ரியைகள்—பேச்சு, உள்ளிழுத்தல், வெளி விடுதல், இருமுதல் முதலியன.

௬௨. குதம் - மூலாதாரம்; மேட்ரம் - குறி; கக்ஷம்—மார்புச்சந்து; இதன் க்ரியை—நீரைக் கழித்தல், மலத்தைத் தள்ளல்.

சாச. நிதானிக்கின்றது — ப்ராண, அபாந வாயுக்களின் தாரதரத்தைச் சமன் செய்து வரும் வாயு, வ்யாநன்.

சாரு. ஸமாநன் - தீயோடு சேர்ந்த வாயு. உஎ000 நாடிகளில் நிலை கொண்டு சரீரத்தைப் போஷிப்பதாகும்.

சாசா. உதாநன்:—சரீரத் தோற்றத்தையும், மரணத்தையும் உண்டாக்கும் வாயுவாம்.

சாஎ. உபவாயுக்கள் ஐந்து :—நாகன்-தோலில் உள்ளது ; கூர்மன்:-குருதியில் இருப்பது; க்ருகரன் - மாம்ஸத்தில் நிலைப்பது ; தேவதத்தன் - தசைப் பிண்டத்தில் (கொழுப்பில்) வசிப்பது ; தநஞ்சயன் - எலும்பிலுள் ஊடாடும் வாயு. இவ்வைந்துடன் ரஸத்தையும், சுக்லத்தையும் சேர்த்து ஏழாகும், இவைகளே, முக்யமான சரீரச்சேர்க்கைக்குக் காரணங்கள் என்க.

அசா. மாம்ஸரஜ்ஜு - தசை நார்கள். மேருவிலுள்ளன. (மேரு - முதுகந்தண்டு)

சாக. வளையம்-வளையம்போன்று வட்டமானவை. கபாலங்கள் - செதில் போன்று தடித்துள்ள மண்டை ஓட்டுக்கள். கூரிய மூளையுடையவை - ருக்ஷகம் - கமண்டலம் போன்றது. நீண்டிருப்பவை - நாளகம் - என்ற எலும்புகள்.

௬உ. ஸ்ரீ தன்வந்தரி-மஹாவிஷ்ணுவின் அம்சமாகப் பாற்கடல் கடையுங் காலத்து அமுதத்துடனும், ஆயுர் வேதத்துடனும் தோன்றியவர்.

௬௬. பிதலை - படகு காற்றில் கவிழா திருக்கமையத்துக் குறியில் காற்றின் வேகசக்தி நிலைக்கு வண்ணம் வலித்துள்ள கயிறுகளைக் கொண்ட பிதலைகள்.

௧0௫. 'சார்ங்க தேவரால் சொல்லப்பட்டது'- இஃது ஆசிரியரையே குறிப்பதாகும். முன்னோர்கள் தம்மைப் படர்க்கையிடத்தே ஒருவராகக் கருதி, குறிப்பிடுவது மரபாகும்.

௧௧௪. சரீரத்தில் நூற்றேழு மர்மநிலைகள் உள. இவற்றில் வாழ்க்கை விழையும் ஜீவன் நிலைப்பதால், அவற்றிற்குத்தற்செயலாக ஏற்படும் அடிகூட, உயிரிழக்கக் காரணமாகின்றன அவைகள்.

௧௧௫. மூலத்திலே 'ஸம்ஹிதம்' - என்ற சொல்லுக்குச் சந்திப்பென பொருள்கொண்டு ஸ்ரீகல்லிநாதர்கேச சந்திப்புக்களையும் விளக்கிக் கூறுவர்.

௧௧௬. 'அத்யாத்ம விவேகம்' இஃது ஸ்ரீ சார்ங்க தேவரால் இயற்றப்பட்டது. இன்னம் கிடைத்திலது; இஃது அறிஞர் ஆராய்ச்சிக் குரியது.

௧உ0 — ௧உ௧. இதிலிருந்து சரீரத்துள்ள சக்ரங்களை (அண்டப் பகுதி) விவரிக்கின்றார். ஆரம்,

அல்லது இதழ்கள் விரிந்துள்ள தட்டுப் போலவும் இவை மனித சரீரத்துள்ளன. ஆதாரம்(மூலாதாரம்)- பரிப்புச் சக்கரம் என்க. கடிகார வட்டத்திற்காணும் நான்கு திசைகளே போல நான்கு திசைகளும், மூலைத் திசைகள் நான்கும் உள்ளன. இனி மூலாதார-சக்கரத்திலே நான்கு மூலைத் திசைகள் மட்டுமே உள. அவற்றுள் வட கிழக்கில் ஈசானன், (பரம் பொருள்) தென் கிழக்கில் ஸஹஜானந்தன், தென் மேற்கில், வீரானந்தன், வடமேற்கில் யோகானந்தனும் நிலை கொண்டுள்ளனர். ப்ரஹ்மசக்தியே ஓர் நாடியாகக் குண்டலினீ என அழைக்கப் பெறுகிறது.

இலக்கிய ரீதியிலே நஞ்சுடை நாகம் தன் உடலைக் கயிறுபோல சுற்றிக்கொண்டு படுத்திருப்பதே போல அஃது காணப்படும். அந்நிலையே அசைவற்ற - செயலற்ற - ப்ரஹ்மசக்தி எனப்படும். அதற்கு ஆரம்பமும் முடிவும் இல்லாததால் விஞ்ஞானத்திற்கும் அப்பாற்பட்டுள்ளது.

கஉஉ. ப்ரம்ஹரந்த்ரம்-ஸுஷும்னை நாடி-யின் உச்சியிலுள்ள துவாரப்ரதேசம் யோக சக்தியால் குண்டலினீசக்தியை எழுப்பி ப்ரம்ஹ ரந்த்ர உச்சியில் ஏறச் செய்வதால் மனிதன் அமரத்-வம் பெறுகின்றான் என்க. யோகி – குறி. இவற்-றிடத்தே ஆரம்பத்தில் ஸ்வாதிஷ்டானம் என்ற சக்ரம் உள்ளது.

௧௨௫ - ௧௨௮. ஸூர்யனின் நிலை; ப்ராணனே ஸூர்யனாவான். "சிவஸ்ய ப்ராணவாக்ருதே:" என்றபடி ஸ்ரீசிவபெருமானின் ப்ராணனாகப் ப்ரணவமாய்த் திகழ்கின்றான் என்க.

௧௨௯. பாரதீதேவி - ஸ்ரீவித்யாதிதேவதை - ஸரஸ்வதீ.

௧௩௦. உத்கீதம் - ஸாமனின் ஓர் பகுதி. யஜ்ஞங்களில் தேவர்களைக் குறித்துச் செய்யும் நிவேதந ஹவிர்பாக-பலியிடும்பொழுது உச்சரிக்கும் மந்த்ராக்ஷரம் "ஹூம்பட்"; 'வஷட்' இஃதும் ஹவிர்பாகங் கொடுக்குங்கால் கூறும் வேறொரு உச்சரிப்பாகும். "ஸ்வதா" பித்ருக்குச் செய்யும் யஜ்ஞப் பொருள். "ஸ்வாஹா" தேவருக்கிடும் யஜ்ஞபாகம் 'நம:' மரியாதை வணக்கம்.

௧௪௦. இதிலிருந்து முற்கூறிய சக்ரங்களிலே, பிறவியின்பொழுது ஆத்மன் உள்ள இதழ் நிலையே, ஸங்கீதஞாநம் நிர்ணயிக்க உதவுகின்றதென விவரிக்கின்றார் ஆசிரியர்.

சக்ரம்		இதழ்கள்
(௧) அநாஹதம்	— கிழக்கிலிருந்து துவங்கி அ, ௧௧,	௧௨-இசைஞாநம்.
(௧) ,,	— ,,	௪, ௫, ௧௦ இவற்றில் இசைஞாநம் அழியும்,

(உ) விசுத்தி — அலிருந்து ஏனைய இதழ்கள். இசைப்பயிற்சி.

(உ) ,, — கசுவது இதழ் - இசைப்பயிற்சியைக் குலைத்து விடும்.

(ரு) லலனம் — கo, கக இதழ்கள் - இசையறிவு அளிக்கும்.

(ரு) ,, — க, ச, ரு இவ்விதழ்கள் இசையறிவு அளிக்காதனவாம்.

(ச) ப்ரஹ்மரந்த்ரத்தில் - அமுதத்தில் ஜீவன் மூழ்கியிருப்பின் ஸகலகலாவல்லனுகவும், தீர்ந்த இசைஞாநியுமாவான். இவற்றை நீக்கி எந்தச் சக்ரத்தில் எந்த இதழிலிருந்தாலும் ஸங்கீதஞாநம் ஸித்தியாகாதென்க.

கசசு. ப்ராணன் - ப்ராணவாயு.

கருய. கந்தம் - கசஎவது சுலோகத்துள்ள பொருளேயாம். கல்லிநாதரோ சரீரம் எனப் பொருள் கொள்வர். ஸிம்ஹபூபாலரோ 'க்ரோடீக்ருத்ய' 'ஒன்று சேர்ந்து கூடியவை' என்பர்.

கசுஎ. மனிதனின் உயரிய விடுதலை முடிவை யருளுவது ஸங்கீதஞாநமேயாகும். 'ஆஹதம்'- அடிக்கப்பட்டது (ஒலிபட) என்பது பொருள். செவிப்புலனும் இன்னிசை என்க.

௩-வது ப்ரகரணம்

௧. ப்ரஹ்மம் :— அத்வைதஸித்தாந்திகள் இவ்வுலகு, பரம்பொருளின் மாறுபட்ட தோற்றமே என்பர். அவ்வண்ணமே இலக்கண வல்லுநர்களும், தாந்த்ரிகர்களும் இவ்வுலகு உண்டாக அடிப்படை-யான காரணம் நாதமே என்பர். இவ்வொலி.மயத்தையே அவர்கள் நாதப்ரஹ்மம் என்பர்.

௨. ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் இம்மூவரும் நாதத்தை உபாஸிக்கையில் வணங்கப்படுகின்றனர் என்பது துணிபு.

௩. தீயும், ப்ராணவாயுவும் சரீரத்துட்-டோன்றி, அநாஹத (ஸூக்ஷ்ம) நாதத்தைக் கிர-மத்தில் உயர்த்தி, ஆஹத (உயர்ந்து உந்தப்பட்ட) நாதமாக்கித் தருகின்றன.

௪. (௧) ப்ரஹ்மகிரந்தி - அதிஸூக்ஷ்மம் - யோகத்தில் உணரப்படுவது (௨) கொப்பூழ்-ஸூக்ஷ்மம் - த்யானத்தில் அறியத்தக்கது. (௩) இதயம் - புஷ்டம் - அழுந்தி ப்ரயத்தனத்தால் வெளிப்படுவது. (௪) தொண்டை - அபுஷ்டம் - சூந்யஸ்தூல வடிவாய் முயற்சியால் அறியப்படுவது. (௫) சிரம் - க்ருத்ரிமம் - மனம், அறிவு, உலகம் இம்மூன்றும் மகிழப் பண்பாட்டுடன் காணப்பெறுவது இசை.

௭. மந்த்ர: மத்ய = 1:2 என்ற விகிதஸாம்யம். தாரமோ என்றால் மத்ய: தார = 2:4 இம்மூன்று ஸ்தாயிகளில் ஏனைய ஸ்வரங்களுக்கும் இதே ஸாம்ய விகிதம் எனக் கொள்க.

௯. இதயத்திலே (மந்த்ர) நாதமும், தொண்டையிலே (மத்ய) நாதமும், சிரஸிலே (தார) நாதமும் தோன்றுவதால் ௭ × ௩ + ௧ = ௨௨ கேட்கப்படும் குறிகளை இருபத்திரண்டு ச்ருதிகள் என்க. 'ச்ரு' என்ற வடசொல்லுக்குக் கேள் என்பது பொருள்.

௰௩, ௰௭. இருபத்திரண்டு ச்ருதிகளுள் ஸப்த ஸ்வரங்களும் வருமாறு அடங்கியுள்ளன.

ச்ருதி; (௭) (௯) (௧௩) (௧௭) (௨௦) (௨௨)
௪, + ௩, + ௨, + ௪, + ௪, + ௩, + ௨
ஸ்வரம்;

ஸ, ரி, க, ம, ப, த, நி,
இம்முறையிலே சுத்த வீணையின் தந்திகளை முடுக்கிப் பிழையின்றி அமைப்பர்.

௪௭. வாதி - தீர்மானிக்கும் ஸ்வரம்; ஸம்வாதி- தீர்மானத்திற்கு இசைந்து ஒலிக்கும் ஸ்வரம்; விவாதி - தீர்மான ஸ்வரத்தை விளக்குவதில் எதிரிடையாயுள்ள ஸ்வரம்.

௪௮. அநுவாதி - தீர்மானிக்கும் ஸ்வரத்தை இயைந்து தொடரும் வேறான ஸ்வரங்கள்.

௫௰. கீழ்வரும் குறிப்பு வாதி, ஸம்வாதி ச்ருதி பேதங்களை விளக்குவதாம்.

வாதி	ஸம்வாதி	ச்ருதிபேதம்
ஸ	ம	8
	ப	12
ரி	த	12
க	நி	12
ம	ஸ	12
ப	ஸ	8
த	ரி	8
நி	க	8

இவ்விதம் வகைப்படுத்துவதில் ஒரு ச்ருதியைச் சேர்த்துக்கொண்டும் கணிக்கலாம் என்பர் மதங்கரும், தத்திலரும். எனவே ௯-ம் ச்ருதியும் ௧௩-ம் ச்ருதியும் என்க. எப்படியாயினும் இடையீட்டு ச்ருதி பேதங்கள் ௮, ௧௨ என்ற கொள்கையை ஏற்றதே.

௪-வது ப்ரகரணம்

௧. இத்தகைய ஸ்வரங்களின் ஒரு பூர்த்தியாய தொகுதியே ஓர் க்ராமமாகும்.

௩. பஞ்சமம் ௧௭வது ச்ருதியில் - மத்யமத்திலிருந்து-௧௩ ச்ருதியிலிருந்து ௪வது ச்ருதியைப் பெற்றுள்ள பொழுது ஷட்ஜக்ராமம் எனப்படும். ஆனால் அதே பஞ்சமம் ஒரு ச்ருதி இறங்கி ஒலிக்குமானால் அஃது மத்யமக்ராமமாம். ஈண்டு தைவதம் பஞ்சமத்திலிருந்து நான்காவது ச்ருதியில் நிலைக்கும் என்க.

ஏழு ஸ்வரங்களுள் காணப்படும் ச்ருதிகளின் ஐவகை விளக்கங்கள்

ஸ்வரம்	ச்ருதிகள்
ஸ	தீப்தா க, ஆயதா ௩, ம்ருது ௩, மத்யா ௪
ரி	கருணா க, மத்யா ௨, ம்ருது ௩
க	தீப்தா க, ஆயதா ௩
ம	தீப்தா க, ஆயதா ௨, ம்ருது ௩, மத்யா ௪
ப	ம்ருது க, மத்யா ௨, ஆயதா ௩, கருணா ௪
த	கருணா க, ஆயதா ௨, மத்யா ௩
நி	தீப்தா க, ஆயதா ௨
ஏ	௨௨

"ச்ருதிகளின் ஐவகைகள்"

தீப்தா (க)
- ஸ ஷட்ஜம்
- க காந்தாரம்
- ம மத்யமம்
- நி நிஷாதம்

ஆயதா (௨)
- ஸ ஷட்ஜம்
- க காந்தாரம்
- ம மத்யமம்
- ப மஞ்சமம்
- த தைவதம்

கருணா (௩)
- நி நிஷாதம்
- ப பஞ்சமம்
- த தைவதம்

ம்ருது (௪)
- ஸ ஷட்ஜம்
- ரி ரிஷபம்
- ம மத்யமம்
- ப பஞ்சமம்

மத்யா (௫)
- ஸ ஷட்ஜம்
- ரி ரிஷபம்
- ம மத்யமம்
- ப பஞ்சமம்
- த தைவதம்
- நி நிஷாதம்

ஐவகை ச்ருதிகளின் பகுதிகள்

பக்கம் 60 சுலோ. ௩க—௩௪

க. தீப்தா—ப்ரகாசமுடையது	ஸ	தீவ்ரா—பலாத்காரம்
	க	ரௌத்ரீ—பயங்கரம்
	ம	வஜ்ரிகா—இடிமுழக்கு
	நி	உக்ரா—வன்மை
உ. ஆயதா—விரிவடைந்தது	ஸ	குமுத்வதீ—அலர்ந்தவொளி
	க	க்ரோதம்—சினம்
	ம	ப்ரஸாரிணீ—பரவல்
	ப	ஸாந்தீபிநீ—ஜ்வலித்தல்
	த	ரோஹிணீ—ஏறுதல்
௩. ம்ருது—மென்மையாது	ஸ	மந்தா—மெதுவானது
	நி	ராதிகா—அன்புசெயல்
	ம	ப்ரீதி —மகிழ்ச்சி
	ப	க்ஷிதி :—பூமி-பொறை

ச.	மத்யா — நடுநிலை	ஸ	சந்தோவதீ—சந்தம் (அளவிடல்)
		ரி	ரஜநீ—இன்புறல்
		ம	மார்ஜநீ—தூய்மைசெயல்
		ப	ரக்தா —அகவின்பம்
		த	ரம்யா—கவர்ச்சி
		நி	க்ஷோபிணீ—கலங்குதல்
ரு.	கருணை—தயை	ரி	தயாவதீ—கருணை
		ப	ஆலாபிநீ—பண்ணிசைத்தல்
		த	மதந்திகா—மதிமயக்கம்

ஸ்வரங்களும் ச்ருதிகளும்

பக்கம் 60, 61 ஸ்லோ. ௨௫ - ௨௮

ஸ	தீவ்ரா	(தீப்தா)
	குமுத்வதீ	(ஆயதா)
	மந்தா	(ம்ருது)
	சந்தோவதீ	(மத்யா)
ரி	தயாவதீ	(கருணை)
	ரஞ்ஜநீ	(மத்யா)
	ரதிகா	(ம்ருது)
க	ரௌத்ரீ	(தீப்தா)
	க்ரோதா	(ஆயதா)
ம	வஜ்ரிகா	(தீப்தம்)
	ப்ரஸாரிணீ	(ஆயதா)
	ப்ரீதி	(ம்ருது)
	மார்ஜநீ	(மத்யா)
ப	க்ஷிதி	(ம்ருது)
	ரக்தா	(மத்யா)
	ஸாந்தீபிநீ	(ஆயதா)
	ஆலாபிநீ	(கருணை)
த	மதந்தீ	(கருணை)
	ரோஹிணீ	(ஆயதா)
	ரம்யா	(மத்யா)
நி	உக்ரா	(தீப்தம்)
	க்ஷோபிணீ	(மத்யா)

ஸ்வரங்களின் வாதி ஸம்வாதி ச்ருதிபேதங்கள்

பக்கம் 63 சுலோ. சகூ—சகூ

வாதி	ஸம்வாதி	ச்ருதிபேதங்கள்
ஸ	ஸ, ம	அ, கஉ
ரி	த	கஉ
க	நி	,,
ம	ஸ	,,
ப	ஸ	அ
த	ரி	,,
நி	க	,,

தப்ஸஸ்வரங்களுடைய குலம், ஜாதி, வர்ணம், ஸ்தானம், ரிஷி, சந்தஸ், தேவதை, ரஸபாவங்களுடைய விளக்கம்.

பக்கம் 64, 65 சுலோ. ருஉ—ருக

ஸ்வரம்	குலம்	ஜாதி	வர்ணம்	இருப்பிடம்	ரிஷி	தேவதை	சந்தஸ்	ரஸம்
ஸ	தேவர்	பிராமணர்	தாமரை	ஜம்பூத்வீகம்	அக்நி	அக்நி	அநுஷ்டுப், காயத்ரீ	வீரம், அற்புதம், ரௌத்ரம்
ரி	ரிஷிகள்	க்ஷத்ரியர்	வாகைமலர்	சாகத்வீபம்	ப்ரஹ்மன்	ப்ரஜாபதி	,,	,,
க	தேவர்	வைச்யர்	பொன்	குசத்வீபம்	சந்த்ரன்	ஸரஸ்வதீ	த்ரிஷ்டுப்	கருணம்
ம	,,	பிராமணர்	ஜாவந்தி	க்ரௌஞ்சத்வீபம்	விஷ்ணு	சிவன்	ப்ருஹதீ	ஹாஸ்யம், ச்ருங்காரம்
ப	பித்ருக்கள்	,,	இருள்	சால்மலித்வீபம்	நாரதர்	விஷ்ணு	பங்க்தீ	,,
த	ரிஷிகள்	க்ஷத்ரியர்	மஞ்சள்	ச்வேதத்வீபம்	தும்புரு	கணேசர்	உஷ்ணிக்	பயாநகம்
நி	அஸுரர்	வைச்யர்	கபிலம்	புஷ்கரத்வீபம்	,,	ஸூர்யன்	ஜாதீ	கருணம்

மூர்ச்சனையின் ஆரோஹி-அவரோஹி வகைகளும் க்ரமங்களும்

	௮	௯	௧௦	௧௧	௧௨	௧௩	௧௪	௧௪	௧௩	௧௨	௧௧	௧௦	௯	௮
	ஸ	ரி	க	ம	ப	த	நி	நி	த	ப	ம	க	ரி	ஸ
(௧)	௮	௯	௧௦	௧௧	௧௨	௧௩	௧௪							
	ஸ	ரி	க	ம	ப	த	நி							

பின் அடுத்துள்ளவை வருமாறு:—

(௨)	௧௪	௮	௯	௧௦	௧௧	௧௨	௧௩
	நி	ஸ	ரி	க	ம	ப	த
(௩)	௧௩	௧௪	௮	௯	௧௦	௧௧	௧௨
	த	நி	ஸ	ரி	க	ம	ப
(௪)	௧௨	௧௩	௧௪	௮	௯	௧௦	௧௧
	ப	த	நி	ஸ	ரி	க	ம
(௫)	௧௧	௧௨	௧௩	௧௪	௮	௯	௧௦
	ம	ப	த	நி	ஸ	ரி	க
(௬)	௧௦	௧௧	௧௨	௧௩	௧௪	௮	௯
	க	ம	ப	த	நி	ஸ	ரி
(௭)	௯	௧௦	௧௧	௧௨	௧௩	௧௪	௮
	ரி	க	ம	ப	த	நி	ஸ

ஷட்ஜக்ராமம்

				ஸ				ரி			க		ம			ப			த		நி
௧	௨	௩	௪	௫	௬	௭	௮	௯	௧0	௧௧	௧௨	௧௩	௧௪	௧௫	௧௬	௧௭	௧௮	௧௯	௨0	௨௧	௨௨
நி				ஸ				ரி			க		ம			ப			த		

காந்தாரக்ராமம்

ரியிலிருந்து ஒரு ச்ருதி எடுத்துக் கொள்ள வேண்டும். (*Ie* 7) ம விலிருந்து ஒரு ச்ருதிகூட (*Ie* 10) தப விலிருந்து ஒரு ச்ருதி எடுத்துக் கொள்ள வேண்டும். (*Ie* 17) நிந விலிருந்து ஒரு ச்ருதி எடுத்துக் கொள்ள வேண்டும். (*Ie* 20) ஷட்ஜத்தி லிருந்து ஒரு ச்ருதி (*Ie* 18) இஃது காந்தாரக்ராமம்.

மத்யமக்ராமத்தின் ஏழு மூர்ச்சனைகள்

(க)

கக	கஉ	கங	கச	கரு	கசு	கஎ
ம	ப	த	நி	ஸ	ரி	க
க0	கக	கஉ	கஉ	கச	கரு	கசு
க	ம	ப	த	நி	ஸ	ரி
கூ	க0	கக	கஉ	கங	கச	கரு
ரி	க	ம'	ப	த	நி	ஸ
அ	கூ	க0	கக	கஉ	கங	கச
ஸ	ரி	க	ம	ப	த	நி
எ	அ	கூ	க0	கக	கஉ	கங
நி	ஸ	ரி	க	ம	ப	த
சு	எ	அ	கூ	க0	கக	கஉ
த	நி	ஸ	ரி	க	ம	ப
ரு	சு	எ	அ	கூ	க0	கக
ப	த	நி	ஸ	ரி	க	ம

(க) கக முதல் கஎ வரையில் ஸௌவீரீ; ஆப்யாயநீ; ப்ரஹ்மா

க0 ,, கசு ,, ஹரிணாச்வா; விச்வக்ருதா; இந்த்ரன்

கூ ,, கரு ,, கலோபநதா; சந்த்ரன்; வாயு

அ ,, கச ,, சுத்தமத்யா; ஹேமா; கந்தர்வர்கள்

எ ,, கங ,, மார்கீ; கபர்திநீ; ஸித்தர்கள்

சு ,, கஉ ,, பௌரவீ; மைத்ரீ; த்ருஹிணன்

ரு ,, கக ,, ஹ்ருஷ்யகா; சாந்த்ரமஸீ; ஸூர்யன்

மத்யமக்ராமத்தின் ஏழு மூர்ச்சனைகள்

(உ)

அ	கூ	க0	கக	கஉ	கங	கச
ஸ	ரி	க	ம	ப	த	நி
கூ	க0	கக	கஉ	கங	கச	கரு
ஸ	ரி	க	ம	ப	த	நி
க0	கக	கஉ	கங	கச	கரு	கசு
ஸ	ரி	க	ம	ப	த	நி
கக	கஉ	கங	கச	கரு	கசு	கஎ
ஸ	ரி	க	ம	ப	த	நி
கஉ	கங	கச	கரு	கசு	கஎ	கஅ
ஸ	ரி	க	ம	ப	த	நி
கங	கச	கரு	கசு	கஎ	கஅ	ககூ
ஸ	ரி	க	ம	ப	த	நி
கச	கரு	கசு	கஎ	கஅ	ககூ	உ0
ஸ	ரி	க	ம	ப	த	நி

(உ) பதினான்கு, பதினைந்தாவது ச்லோகத்தின்படி மாறுதலில் பயனுள்ள பேதம் யாதுமில்லை. இரண்டாவது மூர்ச்சனைகளிலிருந்து நிஷாதத்துடன் துவங்குவதற்குப் பதிலாக நாம் எல்லா மூர்ச்சனைகளிலும் ஷட்ஜம் முதலாக நிஷாதம்வரை துவங்கலாம். ஏழு மூர்ச்சனைகளிலும் ஷட்ஜத்தினிடத்தில் நிஷாதத்தைத் தருவாம். மத்யமக்ராமத்திலும் அவ்விதமே விதிக்கலாம். ஷட்ஜத்தின் நிலையை நிஷாதம் வஹித்தால் அப்பொழுது ஷட்ஜம் ஒரு ஸ்வரம் மேலே போகின்றது, இவ்விதம் மாறுதலுற்ற ஏழு மூர்ச்சனைகளின் மாறுதல் நிலை மேலேயுள்ளபடி இருக்கும்.

சுத்தம், காகலி, அந்தரம், சுத்தகாகலி, அந்தரம்.

ஸ ரி க ம ப த நி

க. க உ ங ச ரு சு எ அ கூ க0 கக கஉ கங கச கரு கசு கஎ கஅ நகூ உ0 உக உஉ

ஸ ரி க ம ப த நி

உ. ங ச ரு சு எ அ கூ க0 கக கஉ கங கச கரு கசு கஎ கஅ ெகூ உ0 உக உஉ

ஸ ரி க ம ப த நி

ங. க உ ங ச ரு சு எ அ கூ க0 கக கஉ கங கச கரு கசு கஎ கஅ ககூ உ0 உக உஉ

ஸ ரி க ம ப த நி

ச. ங ச ரு சு எ அ கூ க0 கக கஉ கங கச கரு நசு கஎ கஅ ககூ உ0 உக உஉ

ஷட்ஜம் நீங்கிய ஷாடவதாநங்கள். எ

அ	கூ	க0	கக	கஉ	கங	கச
(ஸ)	ரி	க	ம	ப	த	நி
எ	அ	கூ	க0	கக	கஉ	கங
நி	(ஸ)	ரி	க	ம	ப	த
சா	எ	அ	கூ	க0	கக	கஉ
த	நி	(ஸ)	ரி	க	ம	ப
ரு	சா	எ	அ	கூ	க0	கக
ப	த	நி	(ஸ)	ரி	க	ம
ச	ரு	சா	எ	அ	கூ	க0
ம	ப	த	நி	(ஸ)	ரி	க
ங	ச	ரு	சா	எ	அ	கூ
க	ம	ப	த	நி	(ஸ)	ரி
உ	ங	ச	ரு	சா	எ	அ
ரி	க	ம	ப	த	நி	(ஸ)

முதலிலும், ஏழாவதிலும், ரி, க, ம, ப, த, நி என்பவை, கூ, கச, உ, எ என்றுள்ளன. இவை மத்ய மந்த்ரஸ்தாயி-களால் பேதமுற்றன.

ஷட்ஜம், பஞ்சமம் நீங்கிய ஔடுதாநங்கள். ௭

௮	௯	௧௦	௧௧	௧௨	௧௩	௧௪
(ஸ)	ரி	க	ம	(ப)	த	நி
௭	௮	௯	௧௦	௧௨	௧௩	௧௪
நி	(ஸ)	ரி	க	ம	(ப)	த
௬	௭	௮	௯	௧௦	௧௧	௧௨
த	நி	(ஸ)	ரி	க	ம	ப
௫	௬	௭	௮	௯	௧௦	௧௧
(ப)	த	நி	(ஸ)	ரி	க	ம
௪	௫	௬	௭	௮	௯	௧௦
ம	(ப)	த	நி	(ஸ)	ரி	க
௩	௪	௫	௬	௭	௮	௯
க	ம	(ப)	த	நி	(ஸ)	ரி
௨	௩	௪	௫	௬	௭	௮
ரி	க	ம	(ப)	த	நி	(ஸ)

முதலிலும் ஏழாவதிலும் ரி, க, ம, த, நி என்ற ஸ்வரங்களே உள. ௩, ௪வதிலும் ஸாதாரணமாக த, நி, ரி, க, ம என்றிருப்பினும் அவை ஸ்தாயி பேதங்கள் உள்ளன.

ஷட்ஜம் ஆறு மாற்றமும், ரிஷபம் ஆறு மாற்றமும், காந்தாரம் ஆறு மாற்றமும், மத்யமம் ஆறு மாற்றமும் தொடர்ந்தும், முன்னதாகவு-மமைந்து இருபத்துநான்கு (ஸ்வரம் ௪, மாற்றம் ௬ = ௪ × ௬ = ௨௪) ப்ரஸ்தாரங்களாகின்றன. ஷட்-ஜத்திற்கு முன் ஸ்வரமில்லாததால் ரிஷபத்தை ஷட்-ஜத்தின் கீழிடுவோம். அதன் பின்னர் க, ம இரண்-டையும் ரிஷபம் முந்திய ஸ்வரமாக இருக்க அமைத்-தால் ரி ஸ க ம எனப் பெறுவோம். இவ்வாறே மற்றவற்றையும் செய்க. (௬௨, ௬௩)

ப்ரஸ்தாரம்

௧	ஸ	ரி	க	ம
௨	ரி	ஸ	க	ம
௩	ஸ	க	ரி	ம
௪	க	ஸ	ரி	ம
௫	ரி	க	ஸ	ம
௬	ஸ	ரி	ம	க
௭	ஸ	ம	ரி	க
௮	ரி	ம	ஸ	க
௯	ஸ	க	ம	ரி
௧0	ஸ	ம	க	ரி
௧௧	க	ம	ஸ	ரி
௧௨	ரி	க	ம	ஸ
௧௩	ரி	ம	க	ஸ
௧௪	க	ம	ரி	ஸ
௧௫	க	ரி	ஸ	ம
௧௬	ரி	ஸ	ம	க
௧௭	ம	ஸ	ரி	க
௧௮	ம	ரி	ஸ	க
௧௯	க	ஸ	ம	ரி
௨0	ம	ஸ	க	ரி
௨௧	ம	க	ஸ	ரி
௨௨	க	ரி	ம	ஸ
௨௩	ம	ரி	க	ஸ
௨௪	ம	க	ரி	ஸ

கண்டமேரு' ப்ரஸ்தாரம்

௧	0	0	0	0	0	0
	௧	௩	௬	௨௪	௧௨0	௭௨0
		௪	௧௨	௪௮	௨௪0	௧௪௪0
			௧௮	௭௨	௩௬0	௨௧௬0
				௯௬	௪௮0	௨௮௮0
					௬00	௩௬00
						௪௩௨0

பதினெட்டு ஜாதிகளுடைய அம்சங்கள்

	ஜாதிகளின் பெயர்	அம்சங்கள்
க	ஷாட்ஜீ	ரு
உ	ஆர்ஷபீ	௩
௩	காந்தாரீ	ரு
ச	மத்யமா	ரு
ரு	பஞ்சமீ	உ
சா	வைததீ	உ
எ	நைஷாதீ	௩
அ	ஷட்ஜகைசிகீ	௩
கூ	ஷட்ஜோதீச்யவா	ச
க0	ஷட்ஜ மத்யமா	எ
கக	காந்தாரோதீச்யவா	உ
கஉ	ரக்த காந்தாரீ	ரு
க௩	கைசிகீ	சா
கச	மத்ய மோதிச்யவா	க
கரு	கார்மாரவீ	ச
கசா	காந்தார பஞ்சமீ	க
கஎ	ஆந்த்ரீ	ச
கஅ	நந்தயந்தீ	க
	ஆக அம்சங்கள்	சா௩

பதினெட்டு ஜாதிகளுடைய அபந்யாஸ ஸ்வரங்களின் விளக்கம்

எண்	ஜாதிகளின் பெயர்	அபந்யாஸங்கள்
௧	ஷாட்ஜீ	க, ப
௨	ஆர்ஷபீ	ரி, த, நி
௩	காந்தாரீ	ஸ, ம
௪	மத்யமா	ஸ, ரி, ம, ப, த
௫	பஞ்சமீ	நி, ரி, ப
௬	தைவதீ	ரி, ம, த
௭	நைஷாதீ	நி, ரி, க
௮	ஷட்ஜகைசிகீ	ஸ, நி, ப
௯	ஷட்ஜோதீச்யவா	ஸ, த
௧௦	ஷட்ஜமத்யமா	ஸ, ரி, க, ம, ப, த, நி
௧௧	காந்தாரோதீச்யவா	ஸ, த
௧௨	ரக்தகாந்தாரீ	ம
௧௩	கைசிகீ	ஸ, க, ம, ப, த, நி
௧௪	மத்யமோதீச்யவா	ஸ, த
௧௫	கார்மாரவீ	ரி, ப, த, நி
௧௬	காந்தாரபஞ்சமீ	ரி, ப
௧௭	ஆந்த்ரீ	ரி, க, ப, நி
௧௮	நந்தயந்தி	ம, ப

அனுபந்தம் (ஙு)

எ

ஐ

ஒ

க

ச

ந

வ

ஸ

ஹ

Printed at the Krishna Printing Works, 23, Broadway, Madras-1